கல்கி



KALKI 15-9-1957 30 நயா பைசா

ஆரோக்கியத்தை விரும்புவோர் எப்பொழுதும் லைப்பாய் சோப் உபயோகித்தே நீராடுவார்

விளையாட்டுக்கள் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதவை — ஆனல் விளையாடும்போதாகட்டும், வேலை செய்யும்போதாகட்டும், நாம் அழுக்காகிவிடுவது சகஜம். நம் ஆரோக்கியத்திற்கு சீக்கிரமாக ஆபத்து விளைவிக்கும் நோய்க் கிருமிகள் அழுக்கில் இருக்கின்றன. அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக்களைந்து உங்களைக் காப்பது லைப்பாய் சோப்.

தினந்தோறும் லைப்பாய் சோப் உபயோகித்து நீராடுங்கள் — அழுக்கிலுள்ள கிருமிகளிடமிருந்து உங்கள் ஆரோக்கியத்தை காத்துக் கொள்ளுங்கள். புத்துணர்ச்சியைத் தருவதும் அதுவே.



L. 260-50 TM

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



நரை மயிர்
உங்கள்
வயோதிகத்தை
எடுத்துக்
காட்டுகிறது

உண்மையில் நீங்கள் எவ்வளவு வாலிபமாய் இருந்த போதிலும் நரை மயிர் உங்கள் வயதை அதிகப்படுத்தியே காண்பிக்கும். இந்த நிலைமையிலிருந்து தப்ப ஹென்ருல் ஒன்று தான் நம்பகமான சாதனம். சக்தி வாய்ந்த சரக்குகளினால் தயாரிப்பாகிய ஹென்ருல் நரையை நிரந்தரமாக அகற்றுகிறது.

ஹென்ருல் எண்ணெய் ரூபத்திலும் (Oily) எண்ணெய் பசையற்றதாயும் (Nongreasy) கிடைக்கும்.
முதிர்ந்த நரைக்கு சக்தி வாய்ந்த ஹென்ருல் போமேட் உபயோகியுங்கள். ஹென்ருல் நரையை ஒழிக்கிறது. எங்கும் கிடைக்கும்.

PEARLINE PARIS PRIVATE LIMITED, P. O. Box 493, Bombay-1

ஹென்ருல்
நரையை அகற்றுகிறது

இதன் பரிசுத்தம் ஓட்டினால்



பாதுகாக்கப்படுகிறது

துஷார்

விடமின்கொண்ட
வனஸ்பதி

இதன் பரிசுத்தம்
சீல் செய்யப்பட்ட
டப்பாவினால்
பாதுகாக்கப்படுகிறது.



2 பவுண்டு,
5 பவுண்டு,
10 பவுண்டு
டின்களில்
கிடைக்கிறது

துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட்., கர்நூல்



மலர் 17 | இதழ் 7

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

ஹேவிளம்பி | ஆவணி 30

புதிய வரிகளின் கொடுமை

நிதி மந்திரி டி. டி. கே. தமது பிடிவாதத்தின் எல்லையைக் கண்டு விட்டார். புது வரிகள் சம்பந்தமாக நாட்டில் பலமான எதிர்ப்பிருந்தது. பொது மக்கள் ஆதரிக்கவில்லை. சட்டசபை அங்கத்தினர்கள் ஆதரிக்கவில்லை. காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் ஆதரிக்கவில்லை. மந்திரி சபையிலுள்ள சகாக்கள் ஆதரிக்கவில்லை. இப்படி தேசமே எதிர்த்த வரிகளைப் பிடிவாதமாக, நேருஜியின் செல்வாக்கைக் கொண்டு நிறைவேற்றி விட்டார் நமது நிதிமந்திரி டி. டி. கே.

"சொத்து வரியும் செலவு வரியும் பணக்காரர்களுக்குத்தானே விதித்திருக்கிறேன்! இந்த வரிகளினால் பாதிக்கப்படாதவர்கள் எல்லாம் அந்த வரிகளை ஏன் எதிர்க்க வேண்டும்?" என்று டி. டி. கே. கேட்கிறார்.

செல்வம் படைத்தவர்களை ஒட்டி லட்சக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். செல்வந்தர்கள் கண்மூடித்தனமான இவ்வரிகளினால் பாதிக்கப்பட்டால் அந்த லட்சக்கணக்கான மக்களின் வாழ்வு படு நாசமாகிவிடும்! செல்வம் படைத்தவர்களை நசுக்கி விடுவதனால் ஏராளமான பேர் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு உள்ளாவார்கள். திட்டங்களுக்குப் பணம் வேண்டும் என்று பணக்காரர்களைச் சூறையாடிவிட்டு, பணக்காரர்களை அண்டிப் பிழைக்கும் மக்களின் வாழ்க்கையைப் படுநரகமாக்கிவிடுவது சுபிட்சத் திட்டங்களின் நோக்கத்தையே பழிப்பதாகும்!

இந்த வரிகளினால் வருமானவரி இலாக்காவின் தொந்தரவுதான் அதிகமாகும் என்று சொல்லும்போது, வருமானவரி செலுத்தாமல் ஏமாற்றுபவர்கள்தான் இப்படிச் சொல்லுகிறார்கள் என்கிறார் நமது நிதிமந்திரி.


செல்வவரி என்று விதித்தபின், அதை வசூலிக்க வருமானவரி அதிகாரிக்கு 'எது செல்வம்?' என்று நிர்ணயிக்கும் அதிகாரமும் கொடுக்கப்படுகிறது. வருமான வரி உத்தியோகஸ்தர் தம் கடமையைச் செய்ய சொத்துடையவர்களின் ரகசியங்களையெல்லாம் துருவித் துருவி ஆராயக் கடமைப்பட்டிருக்கிறார்.

ஒரு வியாபாரி தாம் கையில் ஒரு தங்க செயின் அணிந்திருப்பது வழக்கம் என்று வைத்துக் கொள்ளுங்கள். சமய சந்தர்ப்பம் காரணமாக ஒரு பித்தளை செயினையே அவர் அணியும்படி நேரிட்டால், அந்தச் சமயம் பார்த்து வருமான வரி அதிகாரி அவர் இல்லத்துக்கு வரலாம். இந்த நகை, என்ன நகை என்று கேட்டால், தாம் பரம ரகசியமாகப் போற்றிவந்த இவ் விஷயத்தை வெளியிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது அல்லவா? ஆனால் வருமானவரி அதிகாரி, "நீ வேண்டுமென்றே உண்மைத் தங்க நகையை உள்ளே வைத்துக் கொண்டு ஏமாற்றப் பார்க்கிறாய்" என்று சொல்லுவார்.

இதைவிட இன்னொரு படுமோசமான நிலை ஏற்பட வழியிருக்கிறது. பணத்தைச் சேமித்து வைக்கவேண்டும், சொத்துக்களைக் காப்பாற்றி வைக்கவேண்டும் என்ற உணர்ச்சி மக்களுக்குச் சர்வ சாதாரணமாகவே இருக்கிறது. அதனால் தங்க நகைகள், வைர நகைகள் வைத்துக் கொண்டிருப்பவர்கள், வருமான வரி இலாகாவினர் வந்தால், இவை யாவும் உண்மைத் தங்கமல்ல, உண்மை வைரமல்ல என்று பொய் சொல்ல வைக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு மக்களைக் கொண்டுவிடும் இந்த வரிகள்.

ஸ்திரீகளின் நிலையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இந்த வரிகள் அமுலுக்கு வந்த சில நாட்களுள் இந்த அநியாயத்தைப் பார்ப்போம்.

அமெரிக்க உதவி



தக்க சூழ்நிலை ஏற்பட்டால் அமெரிக்க உதவி கிடைக்கும் என்கிறார் அமெரிக்க தூதர் பங்கர்

ஆனால் நமது நிதி மந்திரியோ, "பணக்காரர்கள் நம் நாட்டில் ஒரு சிலர்தானே? அவர்களைத் தொந்தரவுகளுக்கு உள்ளாக்கினால் என்ன?" என்று கேட்கிறார். சர்க்கார், ஒரு சில பணக்காரர்களைப் பொய்யர்களாக்கி விட்டால், பிறகு தேசத்தை அது விரைவில் கெடுத்து விடும்.

இப்படி வரி இலாக்காவினரால் எத்தனை எத்தனை தொல்லைகள் ஏற்படும் என்று சொல்லத் தேவை இல்லை.

மொத்தத்தில் செலவு வரி, சொத்து வரி, மரண வரி, வருமானவரி ஆகிய பல வரிகள் மூலம் பணம் படைத்தவர்கள் வாழ்வு கசந்து போகப்போகிறது. அவர்களுக்கு எப்பக்கம் திரும்பினாலும் வரிகள் என்றதும், பணம் திரட்ட வேண்டும் என்ற உற்சாகமும் ஊக்கமும் அழிந்துபோகப் போகிறது. அதுமட்டுமன்றி, எந்த எந்த வரிக்கு என்ன மாதிரி பொய்கள் சொல்லி சர்க்காரை ஏமாற்றலாம், சரிக்கட்டலாம் என்பதிலேயே தங்கள் நேரம் பொழுது எல்லாம் செலவழிக்க வேண்டியிருக்கும். வர்த்தகத் துறையிலீடுபட்டுள்ள பல தொழிலதிபர்கள், வர்த்தகத்தைப் பெருக்குவதற்குப் பதில், இந்த வரிகளைச் சமாளிக்கப் பணத்தை எப்படிக் கண்டு பிடிப்பது என்பதிலேயே கவனம் முழுதும் செலுத்த வேண்டியிருக்கும். இந்நிலையில் நமது வர்த்தகமும் உள்நாட்டுத் தொழில்களும் பெருகுவதற்கு வழி ஏது?

ஆனால் இப்பொழுது சர்க்கார் தொழில்கள் நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழில்களை நடத்த இப்படிப்பட்ட வரிகள் மூலந்தான் பணம் திரட்ட வேண்டியிருக்கிறது என்கிறார்கள். ஆனால் உண்மையில் இந்தப் பணம் எல்லாம் நமது ராணுவ தளவாடங்களைப் பெருக்கிக் கொள்ளத்தான் உபயோகமாகின்றது என்பது பட்ஜெட்டைப் பார்த்தால் தெளிவாகத் தெரிகிறது.

பணக்காரர்களுக்குச் சொத்து வரியும், செலவு வரியும், மரண வரியும் போடுவதன் மற்றொரு நோக்கத்தைப் பற்றி டி. டி. கே. விளக்கியிருக்கிறார். பணம் படைத்தவர்களின் பிற்கால சந்ததிகள் தங்கள் முன்னோர் சம்பாதித்த ஆஸ்தியை வைத்துக் கொண்டு சுகமாகச் சாப்பிடலாம் என்ற எண்ணத்துக்கு முற்றுப் புள்ளி வைப்பதுதான் என்று கூறியிருக்கிறார். பணம் படைத்தவர்களின் பிள்ளைகளும் உழைத்துப் பிழைக்க வேண்டும் என்ற நிலைமையை உண்டாக்குவதுதான் நோக்கம் என்றும் கூறியிருக்கிறார்.

"வேலை-வேலை" என்று நாட்டில் லட்சோப லட்சம் மக்கள்-படித்தவர்களும் சரி, படியாதவர்களும் சரி தவித்துக் கொண்டிருக்க, அந்தக் கோஷ்டியில் பணம் படைத்தவர்களின் பிள்ளைகளையும் சேர்ப்பதைத் தவிர வேறு பயன் இந்த வரிகளினால் ஏற்படும் என்று தோன்றவில்லை. பணம் படைத்தவர்களை

நேருஜியைப் பிடித்த கிரகணம்



மோட்ச காலம் எப்பொழுதோ?

இறுக்கிப் பிடித்துத் திரட்டும் பணத்தினால் பிரமாதமாக வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தக் கூடிய திட்டங்களை வகுத்துவிட முடியாது. "சும்மா கிடக்கிற சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி" என்ற கதையாக முடியும்!

திரு டி. டி. கே. ஒரு விஷயத்தைத் தெளிவாகச் சொல்லி விட்டார். "திட்டம் போட்டாகி விட்டது. அதற்குப் பணம் திரட்டித் தர வேண்டியது என் பொறுப்பு. அதைச் செய்து விட்டேன்" என்கிறார்.

கிணற்றில் தண்ணீர் இருக்கிறது. அந்தத் தண்ணீரை எடுக்க வேண்டுமாயின், கயிற்றில் செம்பைக் கட்டி மெள்ள இழுத்துத்தான் ஆக வேண்டுமே தவிர, அதற்காகக் கிணற்றுக்கே ஒரு வெடிவைத்துத் தண்ணீரை மேலேஎழுப்ப முயல்வது மடமையல்லவா? அப்படி வெடி வைத்துக் கிணற்றை நாசமாக்குவது அந்தக் கிணற்றை நம்பி வாழ்ந்து கொண்டிருந்தவர்களுக்குப் பெரு நஷ்டத்தை யல்லவா உண்டாக்கி விடும்? கிணற்றை யொட்டியுள்ள வீடுகளையும் அல்லவா அழித்துவிடும்? அதைப் போலத்தான் இருக்கிறது டி. டி. கே. யின் வரித் திட்டம்.

'பணம் திரட்டுவது என் வேலை' என்று சொல்லிக் கொண்டு, திரு டி. டி. கே. இரண்டு மூனைத் தாக்குதல்கள் நடத்தி யிருக்கிறார். அதாவது நாட்டிலுள்ள ஏழைகள் அன்றாடம் உபயோகிக்கும், நெருப்புப் பெட்டி. சர்க்கரை முதலான பொருள்களின் மீது ஒரேயடியாக வரிகளை உயர்த்தி யிருக்கிறார். இவற்றின் காரணமாக அந்தப் பொருள்களின் விலைகள் மக்கள் தாங்க முடியாத அளவுக்கு ஏறி யிருக்கின்றன. மற்றொரு முனையில் செலவு வரி, சொத்து வரி என்று உலகில் எந்த நாட்டிலும் கண்டும் கேட்டுமிராத வரிகளை விதித்துப் பணம் படைத்த தொழிலதிபர்களின் தொழில்களை நாசமாக்கப் பார்த்திருக்கிறார்!

இப்பொழுது திட்டத்துக்கு இன்னும் எழுநூறு கோடி ரூபாய் அதிகமாகத் தேவைப்படும் என்று திட்ட மந்திரி நந்தா கூறுகிறார். இவ்வளவு வரிகளை விதித்துப் பணக்காரர்களிடமிருந்து பறிக்கப்படும் தொகையோ ஒரு சில கோடிகள்! ஆனைப் பசிக்குச் சோளப் பொறி கொடுத்தாற் போலத்தான் இருக்கும்! பின் பணக்கார சமுதாயத்தை ஒரேயடியாக அழிந்து விடும்படியான இந்த வரித் திட்டத்தைக் கொண்டு வந்து என்ன பயன்? ஒரு சில பணக்காரத் தொழிலதிபர்களின் தொழில்களை அழித்து விடுவதுதான் சோஷலிஸப் பாணியா? சோஷலிஸம் என்பது மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்று சோஷலிஸத்தைப்பற்றி அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால், மக்களை ஆண்டிகளாக்குவதுதான் நிதி மந்திரி திரு டி. டி. கே. வகுக்கும் சோஷலிஸ சமுதாயமாக இருக்கிறது!

எவ்வளவு பணக்காரர்களாயினும், பாங்கு உதவிகள் இருந்தால்தான் அவர்கள் அலுவல்கள் நடக்கும். பாங்கு உதவிகள் என்னும்

போது பணக்காரர்கள் பாங்குகளிலிருந்து கடனுகப் பெறும் பணவசதியைத்தான் குறிக்கிறேம். ரிஸர்வ் பாங்கியின் கவர்னர் திரு எச். வி. ஆர். அய்யங்கார் அவர்கள் மற்ற பாங்குகளுக்கு "உணவுப் பொருள்களின் மீது கடன் கொடுக்காதீர்கள்" என்று உத்தரவு போட்டிருக்கிறர். இன்னும் "தொழிலதிபர்களுக்கும் வர்த்தகப் பெரு மக்களுக்கும் கடன் கொடுக்காதீர்கள். கட்டுப் படுத்துங்கள்" என்றும் உத்தர விட்டிருக்கிறர். இதனல் வர்த்தகப் பிரமுகர்கள் கடன் வாங்கியாவது இந்த அநியாய வரிகளைச் செலுத்தலாம் என்ருல் அதற்கும் வாய்ப்பில்லாமல் போகிறது.

இப்படி ஒருபுறம் ரிஸர்வ் பாங்கியினர் தொழிலதிபர்களைத் தொந்தரவுகளுக்கு உள்ளாக்கினலும், மற்ருெரு புறம் சர்க்காரின் பொருளாதாரக் கொள்கையைப்பற்றி அவர்களே எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

சிலதினங்களுக்குமுன், ரிஸர்வ் பாங்கு வெளியிட்டிருக்கும் அறிக்கையானது ஐந்தாண்டுத் திட்டத்தை முழுதும் நிறைவேற்ற முடியாது என்று கூறுகிறது. திட்டத்தில் பலவற்றைக் குறைத்துத்தான் தீரவேண்டும் என்று நாட்டின் பொருளாதார நிலைமை நன்கு உணர்ந்து ரிஸர்வ் பாங்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

நாமும் பலமுறை 'திட்டம்' 'திட்டம்' என்று சொல்லிக் கொண்டு, இன்றைய மக்களின் வாழ்வைக் கெடுத்துவிடக் கூடாது என்று சொல்லி வந்திருக்கிறேம். ரிஸர்வ் பாங்கியின் எச்சரிக்கையையாவது ஏற்றுக்கொண்டு, திட்டத்தைப் பெரிதளவு குறைத்து இன்றைய மக்களை வாழும்படி செய்ய வேண்டியது சர்க்காரின் கடமையாகும்.

கௌடில்யர் எழுதிய அர்த்த சாஸ்திரம் என்னும் பொருளாதார சாஸ்திரத்திலே, சர்க்கார் மக்களிடம் எப்படி வரி வாங்க வேண்டும் என்பதைப் பற்றி மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

"புஷ்பத்திலிருந்துதான் வண்டு தேனைச் சேகரிக்கிறது. ஆனல் வண்டு தேன் எடுக்கும் போது புஷ்பத்தை நோகச் செய்யாமல் வெகு லாகவமாக எடுத்து விடுகிறது. அதைப் போலவே மக்கள் மனம் சிறிதும் நோகாமல் அவர்களுக்கு வரி விதித்து வசூலிக்க வேண்டும்" என்று கூறப்பட்டிருக்கிறது.

நமது நிதி மந்திரி கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தைப் படித்திருப்பதாகச் சொல்லுகிறர். ஆனல் இந்த உண்மையை அவர் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை!

நாட்டுக்குச் சேவை செய்யும் நோக்கம் கொண்ட வர்த்தகப் பிரமுகர்களை, தொழிலதிபர்களை இப்படி வதைப்பதால் நாட்டிலே அறம் பழுதுபட்டுப் போகும். மக்கள் சொல்லி முடியாத கஷ்டத்துக்கு உள்ளாவார்கள். அதிகார வர்க்கத்தின் அட்டகாசம் தலை தூக்கிவிடும். மக்களின் வாழ்வு வாழத் தகுந்ததாக இராது. 'இதற்காகவா நாம் சுதந்திரம் பெற்ருேம்?' என்று மக்கள் எண்ணத் தலைப்படுவார்கள்!

கல்கி தீபாவளி மலர்-1957

புகழ்பெற்ற பெரியார்கள், கவிஞர்கள், கதாசிரியர்கள் இவர்களின் அருமையான கட்டுரைகள், கவிதைகள், கதைகளுடனும், பிரபல சித்திரக்காரர்களின் கண்கவரும் பல வர்ணச் சித்திரங்கள், ஹாஸ்யச் சித்திரங்களுடனும் 'கல்கி' தீபாவளி மலர் அக்டோபர் மாதம் 22-ந் தேதி தீபாவளித் திருநாளில் மணம் வீசித் திகழும். இருநூற்று ஐம்பது பக்கங்களுக்குமேல்கொண்ட இக் கலைமணங்கமழும் மலர் பெரிய அளவில் உயர்ந்த கிளேஸ் தாளில் அச்சாகிறது. வர்ணக் காட்சி வரிசைகளும், மூவர்ணச் சித்திரங்களும் உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் அச்சாகின்றன.

விலை ரூ. 3-00

உங்கள் பிரதிகளுக்கு உள்ளூர் ஏஜண்டிடம்
பதிவு செய்து கொள்ளுங்கள்

தபால் மூலம் தீபாவளி மலரைப் பெற விரும்பும் சந்தா நேயர்கள் தபால் செலவு உள்பட ரூ. 3-65 நயா பைசா அனுப்பி வைக்க வேண்டும். பர்மா, மலேயா மற்றும் வெளிநாட்டுச் சந்தா நேயர்கள் ரூ. 4-00 அனுப்பி வைக்க வேண்டும்.

மானேஜர்,
கல்கி காரியாலயம்



காஞ்சியில் கனகாபிஷேகம்

"எனக்குக் கனகாபிஷேகமே பிடிக்கவில்லை. பெரியவர்கள் எல்லாரும் சேர்ந்து வற்புறுத்தியதால் நான் ஒப்புக்கொண்டேன்" என்றார் பெரியவர். அந்த அவையடக்கமான பேச்சில் அவர் இமயமலையைவிட உயர்ந்து காணப்பட்டார்! ஆம். 'பெரியவர்களை' விடப் பெரியவர் இன்று உலகில் யார் இருக்கிறார்கள்?

காஞ்சி காமகோடிபீடத்தை அலங்கரிக்கும் ஜகத்குரு சங்கராச்சாரிய ஸ்வாமிகள் தவத்தின் உறைவிடம்; அன்பின் பொக்கிஷம்; அடக்கத்தின் பெட்டகம். இந்த மகான் பட்டத்துக்கு வந்து ஐம்பது ஆண்டுகளாகி விட்டன. இவர் வந்தபின் காமகோடிபீடத்தின் புகழ் நாடு முழுதும் பரவியது. பக்தர்களின் தொகை பெருகியது. நாஸ்திகவாதிகள் குழப்பம் தெளிந்து சிலர் நிறைந்த வாழ்க்கையின் சிறப்பை அறிந்தனர். அப்படிப்பட்ட பக்தர்கள் ஆசாரிய ஸ்வாமிகள் பட்டத்துக்கு வந்து ஐம்பதாண்டு நிறைவை 1008 பொன் மோகராக்களால் கனகாபிஷேகம் செய்து மகிழ வேண்டும் என்று தீர்மானித்ததில் வியப்பில்லை.

அந்தக் கனகாபிஷேக வைபவம் காஞ்சிபுரத்தில் சென்ற வெள்ளிக்கிழமை ஆறாந் தேதியன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பக்தர்கள், கடும் வெய்யிலையும் பசியையும் களைப்பையும் பாராமல், ஆசாரிய ஸ்வாமிகளுக்கு இளைய ஸ்வாமிகள் தங்க மோகராக்களையும், புஷ்பங்களையும் சேர்த்து அர்ச்சித்த காட்சியை கண்களில் நீர் மல்கப் பார்த்து மகிழ்ந்தனர்.

கனகாபிஷேக வைபவம் முடிந்தவுடன், ஆசாரிய ஸ்வாமிகள் பக்தர்களுக்கு நான்கு வார்த்தைகள் பேசினார். கனகாபிஷேகத்துக்குத் தாம் முதலில் மறுத்ததையும் பின்னர் இணங்கியதையும் கண் இழந்திருந்த ஒரு முதியவர் மீண்டும் கண்பார்வை பெற்றுவிட்ட அதிசயத்தையும் எடுத்துரைத்தார். அதைக் கேட்டவர்கள் மெய்சிலிர்த்தனர்!

ஸ்ரீமான் கே. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள், ஆசாரிய ஸ்வாமிகள் இந்தக் கனகாபிஷேகத்துக்கு இணங்கியமைக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்தார்!

பின்னர் சிலர் ஆசாரிய ஸ்வாமிகள்மீது செய்திருந்த துதி ஸ்லோகங்களை வாசித்தனர்.

முடிவாக ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள், தீட்சிதர் யாத்துள்ள 'ஸ்ரீ சங்கராசார்யம்' என்ற அற்புத கீர்த்தனத்தையும் "கைலாயம், காலடி, காமகோடி என்று மூன்று வழிகளில் பாயும் சங்கரம் என்னும் கருணை நதி சாந்தியையும் சந்தோஷத்தையும் அருள்வதாக!" என்று ஆசாரிய ஸ்வாமிகள் மீது டாக்டர் வே. ராகவன் இயற்றியுள்ள ஸ்லோகத்தையும் பாடினார்.

நிதி தேடும் யாத்திரை

கோயிற் பூசை செய்வோன்—சிலையைக்
  கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன—வீட்டை
  வைத்திழத்தல் போலும்
ஆயிரங்க ளான—நீதி
  அவை உணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான்—சிச்சீ!
  சிறியர் செய்கை செய்தான்!

— பாஞ்சாலி சபதம்

ஒருவரிடம் ஒரு பொருளுக்குத் தாட்சிண்யப் பட்டுவிட்டால், பிறகு ஆயுள் முடிய அவர்களுக்கு அடிமையாகவே போய்த் தொலைய வேண்டிய நிலைமையை அன்றாட வாழ்க்கையில் கண்கூடாகப் பார்க்கிறோம். இது தனிநபர் விஷயத்தில் மட்டும் அல்ல, தேசங்களின் நடவடிக்கைகளிலும் உண்மை.

நமது நிதிமந்திரி டி. டி. கே. அவர்கள் பிட்சா பாத்திரத்தை ஏந்திக் கொண்டு பாரத நாட்டின் சுயமரியாதையைப் பணயம் வைத்து அமெரிக்கா செல்லப் போகிறார் என்ற செய்தியைப் படித்ததும் மேற்கண்ட பாரதியாரின் பாஞ்சாலி சபதப் பாடல்தான் நினைவுக்கு வருகிறது.

நமது கையாலேயே பஞ்சின் கொட்டை யடித்து, நூல் நூற்று, நெய்து நமது துணியை நாமே தயாரித்துக் கொள்ள வேண்டும் என்று காந்தி மகான் கூறிவந்தார். எதற்கும் அந்நியர்கள் தயவை எதிர்பார்க்கக்கூடாது என்று காந்திமகான் போதித்து வந்தார். அப்படிப்பட்ட காந்திமகான் வளர்த்த, சுயமதிப்பு நிறைந்த காங்கிரஸ் அரசாட்சியின் சார்பில் நமது நிதிமந்திரி டி. டி. கே. அந்நிய மூலதனத்துக்காக அமெரிக்காவுக்குச் செல்கிறார் என்பது எவ்வளவு வேதனை!

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் பிறரிடம் பொருள் வாங்குவது தீது என்றார். அது மட்டுமல்ல, பிறரிடம் பொருளை வாங்குவது நல்ல காரியத்தைக் கருதித்தான் என்றாலும் கூடத் தீது, பாவம் என்றார். "நல்லாறெனினும் கொளல் தீது" என்று மிக வன்மையாகக் கூறியிருக்கிறார்.

பயங்கர ராக்ஷஸ அணுகுண்டுச் சோதனைகளை நடத்தி உலகத்து நீரையும் காற்றையும் விஷமயமாக்கி வரும் அமெரிக்காவின் மனத்தை மாற்றி அதன் தார்மிக உணர்ச்சியை எழுப்ப வேண்டுமானால் பாரததேசம் அமெரிக்காவிடமிருந்து ஒரு உதவியையும் பெறக் கூடாது! அமெரிக்கா அளிக்க விரும்பும் உதவியை மறுதளிக்க வேண்டும் என்று ராஜாஜி திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார். இந்த விஷ குண்டுகளினால் பெரிதும் பாதிக்கப் படுபவர்கள் ஆசிய மக்கள்தான். ஆசிய நாட்டிலேயே தர்மத்தின் அடிப்படையில், சத்தியத்தின் அடிப்படையில், காந்தி மகான் தலைமையில் சுதந்திரம் பெற்ற நாடு நமது பாரதம்தான். அதனால்தான் ஆசியாவிலும் மேனாட்டிலும் நமது செல்வாக்கு அபரிமிதமாக ஓங்கி இருக்கிறது. நமது செல்வாக்கைக் கண்டே ஜப்பான் முதலிய ஆசிய நாடுகளும் மற்ற ஐரோப்பிய தேசங்களும் அணுகுண்டுச் சோதனைகளை நிறுத்த, உலக நீதிமன்றத்தில் பாரதம் வழக்குத் தொடரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றன! இத்தகைய சூழ்நிலையில், பாரதத்தின் புகழ் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் இவ்வேளையில், இந்தியாவின் சார்பில் நமது நிதி மந்திரி பிட்சா பாத்திரத்தை ஏந்திக் கொண்டு அமெரிக்காவுக்குச் செல்கிறார். அதன்காரணமாக பாரதநாட்டின் சுயகௌரவம் இடர் என்று கீழ் நோக்கிச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை. இனிமேல் அணுகுண்டைப்பற்றி இந்திய சர்க்காருடைய கண்டனத்தின் உறுதி குறைந்துதான் போக வேண்டும். இது உலகத்துக்குப் பெரும்நஷ்டம்.

எல்லைக் குளறுபடி

படாஸ்கர் அறிக்கையில் தமிழ் நாட்டின் வட எல்லையிலுள்ள அரணியாறு நீர்ப்பாசனத் திட்டம் ஆந்திர நாட்டுக்குச் சேர வேண்டியது என்று கூறி யிருப்பதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அரணியாறு நீர்ப்பாசனத் திட்டத்தினால் பயன் அடையக் கூடிய நிலங்கள் ஏராளமாகத் தமிழ் நாட்டில் இருக்கின்றன. அதனால் அரணியாறு அணையையும் ஏரியையும் ஆந்திர நாட்டில் சேர்த்தால் பாசனத் தண்ணீர் சம்பந்தமான சச்சரவுகளுக்கு இடம் ஏற்படும். ஆகவே, அரணியாறு அணை தமிழ் நாட்டுடன் இணைக்கப் பட்டால்தான் எல்லைப் பகுதியிலுள்ளவர்கள் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வாழ்வதற்கு வழி ஏற்படும்! படாஸ்கர் அறிக்கை மீண்டும் குழப்பத்தைத்தான் உண்டாக்கியிருக்கிறது. சென்னை சர்க்காரோ, எல்லைகளை ஒன்றும் மாற்ற வேண்டாம்; இருக்கிற நிலைமையே இருந்து விட்டுப் போகட்டும் என்று ஒரு சமயம் கூறுகிறார்கள். வேறொரு சமயம் படாஸ்கர் அறிக்கையைத்தான் ஏற்றுக் கொள்வோமே என்று கூறுகிறார்கள். மற்றொரு சமயம் இந்தத் திட்டத்தில் சிறு மாறுதல்கள் செய்த பின்னர்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லி வருகிறார்கள்.

திருத்தணி தமிழ் நாட்டுக்குச் சேருவது பாஷாவாரி நியாயத்தின்படி சரியான முடிவாகும். திரு படாஸ்கர் இதைத் தமது எல்லை அறிக்கையில் ஒப்புக் கொண்டிருப்பது திருப்தியைத் தருகிறது. ஏரி நீர்ப்பாசனம் முதலிய விஷயங்கள் வேறு அடிப்படையில் முடிவடைய வேண்டும். அவை பாஷைக்குச் சம்பந்தமில்லை. பாசனத் தகராறுகள் வளராதபடி எல்லைப் பிரச்னையை முடிவு செய்யவேண்டும்.



ஏஜண்டுகள்: மெஸர்ஸ் நாமகிரி டிரேடிங் கார்ப்பொரேஷன், 1, டாக்கர் சத்திரம் லேன், மேற்கு புலிவார் ரோடு, திருச்சி. ○ மெஸர்ஸ் J. C. மன்சந்தா, பிளாக் செ. 1, 15-A/38, கரோல்பாக புது டில்லி ○ மெஸர்ஸ் கோகுல் ஸ்டோர்ஸ், 179/1, லான்ஸ டவுன் ரோடு, கல்கத்தா-26



காக்காய் இலக்கணம் கற்ற கதை

மகாகவி பாரதியார்

ஒரு நாள் மாலையில் குற்றாலத்துக்கு அருகே ஒரு சிறு குன்றின்மீது ஒரு பெரிய விஸ்தாரமான ஆலமரத்தின் கிளைகளில் ஒன்றின்மேல் ஒரு காக்கை மிகவும் விசனத்துடன் உட்கார்ந்திருந்தது. அப்பொழுது அதன் மனைவி அதன் சமீபத்தில் வந்து, ''நீ எதன்பொருட்டு விசாரப்படுகிறாய்?'' என்று அன்போடு கேட்டது.

அப்போது ஆண் காகம் தன் பெண்டாட்டியிடம் சொல்லுகிறது: ''இன்று காலை எனக்கு மிதமிஞ்சிய திவனம் கிடைத்து விட்டது. அளவறியாமல் உண்டு தீர்த்து விட்டேன். எனவே இப்போது வேட்டைமீது செல்லவும் மனம் கொள்ளவில்லை. சும்மா உட்கார்ந்திருப்போமென்றால் பொழுது போகவில்லை. மற்றச் சிநேகிதக் காகங்கள் இன்னும் வேட்டையிலிருந்து திரும்பி வரவில்லை. அவர்கள் வந்தால் கூட்டம்கூடி வம்பளப்பதில் பொழுது போகலாம். சும்மா காற்று வழியாகச் சுற்றிப் பறந்து கொண்டு நான்கு பக்கங்களிலும் நடக்கும் வேடிக்கைகளைக் கண்டு திரும்பலாம் என்று உத்தேசம் பண்ணுமிடத்து, சிறகு, கால், உடம்பு, தலை எல்லாம் ஒரே விதமான உளைச்சலும் கனமும், சகிக்க முடியவில்லை. ஜுரம் வந்து விடும்போல் இருக்கிறது. தொண்டை ரணகளமாக இருக்கிறது. வலி பொறுக்க முடியவில்லை. பலமான ஜலதோஷம் பிடித்திருக்கிறது. நேற்றும், முந்தின நாளும், பக்கத்துக் காடுகளில் சரியான தீனி கிடைக்கவில்லை. ஆகையால், கிழக்கே ஜனவசதிகளில் நெடுந்தூரம்வரை சோற்றுக்காகப் போகும்படி நேரிட்டது. இருந்தும் மாலை வரை அரை வயிற்றுக்குக்கூட உணவு போதவில்லை. மழை, இரவும் பகலும் இடைவிடாமல் பெய்தது. கோடை மழை. அதில் மிதமிஞ்சி நனைந்து போனேன். அதனாலேயே, உடம்புக்குப் பலமான ஜாட்டியம் வந்து கொண்டிருந்தது. அதனுடன் இன்று காலை அஜீர்ணமும் கூடிவிட்டது. இந்த நிலையில் பொழுது போக்குவதற்கு என்ன செய்வேன் என்பதைக் குறித்து விசனப் பட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்றது.

இது கேட்டுப் பெண் காகம் சொல்லுகிறது: ''பல வருஷங்களுக்கு முன்பு நீ என்னை விவாகம் செய்து கொண்ட காலத்தில் உனக்கு இவ்வுலகிலுள்ள எல்லா இன்பங்களைக் காட்டிலும், என்னுடன் கூடி அளவளாவிக் கொண்டிருப்பதே பெரிய இன்பமாகத் தோன்றுகிற



தென்றும், எல்லாவிதமான பொழுது போக்குகளைக் காட்டிலும் என்னுடன் விளையாடிக் கொண்டிருப்பதிலேயே பொழுது போக்குவதுதான் அதிகப் பயனுடையதும், சுவையுடையதுமாக இசைந்திருக்கிறதென்றும், நீ என்னிடத்தில் லக்ஷம் தரம் சொல்லி யிருக்கிறாய். இப்போது என்னைப் புறக்கணித்து விட்டு நான் பக்கத்தில் இருக்கும் போது பொழுது போகவில்லை யென்று என்னிடத்திலேயே அழத் தொடங்கி என்னை அவமானப்படுத்துகிறாய். நான் பல நீர்ச் சுனைகளில் நாள்தோறும் என் முகத்தைப் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன். நமக்குள் விவாகம் நடந்த காலத்தைக் காட்டிலும் இப்போது என் முகம் அழகாகத் தெரிகிறதே அல்லாமல் குறைந்த அழகுடையதாகத் தெரிய வில்லை. என்னுடைய சிநேகிதர்களிடமும் கேட்டேன். அவர்களும் நான் இப்போது முன்னைக் காட்டிலும் அதிக அழகு வாய்ந்திருப்பதாகவே சொல்லுகிறார்கள். உனக்கு மாத்திரம் என்னிடம் இப்படி வரம்பில்லாத அருவருப்பு உண்டாயிருப்பதன் காரணம் யாது?'' என்று (பெண்டாட்டி) கேட்டது.

இதைக் கேட்ட காகப் புருஷன், ''நீ முன்னைக் காட்டிலும் இப்போது அழகில் மிகுந்திருப்பதாகச் சொல்லுகிறவர்கள் யார்? உன்னுடைய பெண் மித்திரர்களோ, ஆண் மித்திரர்களோ?'' என்று வினவிற்று

''என்னுடைய அருமைச் சகிகளே அவ்விதம் சொல்லுகிறார்கள். எனக்கு ஆண் சிநேகிதர்களே கிடையாது'' என்று காகப்பேடு கரைந்தது.

இதைக் கேட்டவுடன் ஆண் காகம் சிறகுகளைப் புடைத்துக் கொண்டு ஆலமரக் கிளையினின்றும், புறப்பட்டுத் தென் திசையை நோக்கிப் பறந்து சென்றது. 'காகா' என்று கத்திக்கொண்டு பின்னே வந்த பெண்டாட்டியைக் காத்து நின்று சந்தித்து ஆண்காகம், ''நீ ஏன் என் பின்னே வருகிறாய்?'' என்று கேட்டது. ''நீ உடம்பு நோய் மிகுந்து இருக்கையில் தனியாகப் போகிறாயே. இடைவழியில் உனக்கு ஒருவேளை தலைக் கிறுக்கலுண்டாகி நீ கீழே விழுந்துவிடக் கூடும். இவ்விதமான சமயங்களில் உன் பக்கத்தில் நான் இருந்தால் அவ்வித விபத்துக்களைத் தடுத்து விடக்கூடுமாதலால் நானும் உன்னுடன் வருகிறேன்'' என்று பெண் காகம் சொல்லிற்று.

''ஓகோ! என்னைக் காக்கும் பொருட்டாகவா வருகிறாய்?'' என்று ஆண் கேட்டது. ''ஆம்'' என்றது பேடு. ''அப்படியானால் நீ வரவேண்டிய அவசியமில்லை. எனக்குச் சிறிது நேரத்துக்கு முன் உடம்பிலே இருந்த கடுப்பும், வலியும், ஆயாசமும் இப்போது முற்றிலும் நீங்கிப்



போய் விட்டன. நான் பரிபூர்ண ஆரோக்கியத்துடன் இருக்கிறேன். எனக்கு வழியில் மயக்கமும் தோன்றாது. கீழே விழவும் மாட்டேன். என்னை நரி தின்னவும் செய்யாது. நீ என்னைக் காப்பாற்றவும் வேண்டியதில்லை. தயவு செய்து வீட்டிலேயே இரு'' என்று ஆண் காகம் சொல்லிற்று.

''நீ எங்கே போகிறாய்?'' என்று பேடு கேட்டது. ''பக்கத்திலே விக்கிரமசிங்கபுரத்துக்குப் போகிறேன்'' என்று ஆண் சொல்லிற்று.

''ஹோ? விக்கிரமசிங்கபுரம் பாபநாசத்துக்குப் பக்கத்திலன்றோ இருக்கிறது? நெடுந்தூரம் ஆயிற்றே?'' என்று கேட்டது பேடு.

''நான் ஓர் இமைப்பொழுதில் அங்கு போய் மீண்டும் வந்து விடுவேன். நீ கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. வீட்டுக்குப் போ'' என்று சொல்லி ஆண் வர்புறுத்திற்று.

''நீ அங்கே இந்தச் சமயத்தில் எதன் பொருட்டுப் போகிறாய்?'' என்று பேடு மீண்டும் வினவிற்று.

இதைக் கேட்ட ஆண் காகம் சொல்லுகிறது: ''விக்கிரமசிங்கபுரத்தில் வீரமாகாளப் புலவர் என்றொரு கவிராயர் இருக்கிறார். அவர் இந்த நேரத்தில் தமது வீட்டுப் பெண் குழந்தைகளுக்கும், ஆண் குழந்தைகளுக்கும், தமிழ் செய்யுள் கட்டும் வழிகள் கற்றுக் கொடுக்கிறார். எனக்கு மனித பாஷை பேசத் தெரியாதே யொழிய அவர்கள் பேசுவ தெல்லாம் நன்றாக அர்த்தமாகுமென்ற விஷயம் உனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே அவர் வீட்டுக் கூரை மேலே போய் ஏறி இருந்து கொண்டு அந்தக் கவிராயர் சொல்லும் விஷயங்களை யெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டு அப்பால் தமிழ் பாஷையில் இருப்பது போலவே நமது காக பாஷையில் கவிதை யமைவதற்குரிய விதிகள் ஏற்படுத்தி நமது பாஷையைக் காவியங்களும், பாட்டுக்களு முடையதாகச் செய்யப் போகிறேன். ஸ்வதேசாபிமானமும், ஸ்வபாஷாபிமானமு மில்லாத காகத்தை ஒரு காகமென்று சொல்லுதல் தகுமா? அதைப் பறந்து தினி தின்று திரியும் கரும் சிறு பிணமென்றுதான் சொல்ல வேண்டும். இந்தக் குற்றாலத்துக் காட்டைப் போல் பரிசுத்தமும், பசுமையும், செழிப்பும், எக்காலமும் அழியாத தன்மையுமுடைய காடு இந்த உலகத்தில் வேறு எங்கும் கிடையாது. நமது காக பாஷையைப் போல் மாண்புயர்ந்த பாஷையும் கிடையாது. நான் பிறந்த அளவில் இந்த பாஷைக்கும் இந்தக் காட்டுக்கும் என்னால் இயன்ற உபகாரம் செய்யுமுன்பு உயிர் துறப்பேனானால் எனக்கு நெஞ்சு வேகாது. ஆகையால் இந்தக் காக பாஷையைக் கவிதையுடையதாகச் செய்யும் கடமையை நிர்வகித்திருக்கிறேன்'' என்றது.



இது கேட்ட பெண் காகம் ''ஒரு வினாடிக்குமுன்னே காக பாஷை ஒப்பில்லாத பாஷை என்று சொன்னாய். இப்போது தமிழைப் பார்த்துத் தமிழ் மொழியைத் தழுவிச் செய்யுள் சேர்ப்பதாகிய சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்கிறாயே? எனவே தமிழைக் காட்டிலும் காக பாஷை குறைந்ததென்று அங்கீகாரம் செய்கிறாயா?'' என்றது.

இது கேட்ட ஆண் காகம், ''தமிழ் மனுஷ்ய பாஷை. அதற்குச் சமானமாக நமது பாஷை ஏற்படுதல் சாத்தியப்படுமா? இதர ஜந்துக்களெல்லாவற்றைக் காட்டிலும் நமது காக பாஷை சிறந்ததென்றன்றோ நான் சொன்னேன்? சரி, நேரமாகி விட்டது. நான் போக வேண்டும். நீ வீட்டுக்குப் போ'' என்றது.

அப்போது பெண் காகம் சொல்லுகிறது. ''நீ இந்த விஷயத்துக்காக விக்கிரமசிங்கபுரத்துக்குப் போக வேண்டாம். என்னுடன் வீட்டுக்கு வா. நான் கற்றுக் கொடுக்கிறேன். எனக்குத் தெரியும்'' என்றது.

''உனக்கென்ன தெரியும்?'' என்று ஆண் காகம் சற்று சினத்துடன் வினவிற்று. ''கவி பாடுவதற்குரிய விதிகள்'' என்றது பேடு. ''அவற்றை நீ அறிந்து கொண்ட தெங்ஙனம்?'' என்று ஆண் காகம் கேட்டது.

பெண் காகம் சொல்லுகிறது:-''உனக்குத் தோன்றிய எண்ணம் உனக்குத்தான் முதன்முதலில் தோன்றியதென்று நீ நினைக்கிறாய் போலும். ஆனால் உண்மை அப்படியில்லை. என்னுடைய பிதாவும் இதே விருப்பமுடையவராக இருந்தார். ஒரு மனுஷ்ய கவிராயர்

அழகிய பளபளப்பான கூந்தலின் ரகசியம் ...



அழகுமிக்க பளபளப்பான கூந்தலைப் பெற்றிருப்பதன் ரகசியம் ஒழுங்கான பாதுகாப்பு மட்டுமல்ல, சரியான தலைமயிர்த் தைலம் தேர்ந்தெடுப்பதும் கூட.

கால்கெமிகோவின் காஸ்டரால் உபயோகிப்பதால் கூந்தல் நன்கு வளருகிறது. நரை தடுக்கப்படுகிறது. மயிர் உதிர்வது நிற்கிறது என்றுணர்ந்தவர்கள் அதை தேர்ந்தெடுக்கிறார்கள்.

சுத்தப்படுத்தப்பட்ட விளக்கெண்ணெயினால் தயாரிக்கப்பட்ட இந்த ரம்மிய வாசனை கொண்ட கூந்தல் தைலம் தலைமயிருக்குப் புது பளபளப்பு தருகிறது.

5, 10 அவுன்ஸ் வசீகர புட்டிகளில் கிடைக்கும்

காஸ்டரால்

தனிப்பட்ட குணம் பெற்ற கூந்தல் தைலம்



தி கல்கத்தா கெமிகல் கம்பெனி, லிட்,
கல்கத்தா - 29.

தென் இந்திய கிளை - 5/149, பிராட்வே, மதராஸ்-1

Tamil-55

ஏற்றுமதிகள் இப்போது இருவிதத்தில் பலன் அளிக்கின்றன

அவை, தற்போது ஆபத்தான அளவுக்குக் குறைந்துள்ள அன்னிய நாணயக் கையிருப்பை அதிகப்படுத்துகின்றன

அதிக ஏற்றுமதிகளால் தொழில்துறை அலுவல்கள் அதிக மும்முரமாக நடைபெறுகின்றன. அதன் பலனாக ஐந்தாண்டுத் திட்டம் சுலபமாக நிறைவேறுவது சாத்தியமாகிறது

ஏற்றுமதி, வர்த்தக சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் உங்களுக்கு உதவி அளிக்கவும், ஆலோசனைகள் கூறவும் சகல வசதியுடன் எமது பாங்கு இருக்கிறது

தி இந்தியன் பாங்க் லிட்.

தலைமை ஆபீஸ்:
வடக்கு பீச் ரோடு, சென்னை-1



தென்னாடு முழுவதும் மற்றும் இந்தியா, சிலோன், மலேயா, சிங்கப்பூர் நாடுகளில் முக்கிய நகரங்களிலும் கிளைகள் இருக்கின்றன.

உலகின் எல்லா பாகங்களிலும் பிரதிநிதிகள் உள்ளனர்.

காரியதரிசி
S. P. பார்த்தசாரதி

KJ-22

பாதி விலைக்கும் குறைவு

15 நாட்களுக்கு மட்டும்

எல்லாக் கெடிகாரங்களும் புகழ் பெற்ற தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டவை

ஒவ்வொன்றும் பத்து வருட உத்தரவாதம்

இனம்: ஒரே சமயத்தில் மூன்று கைக்கெடிகாரங்கள் வாங்குபவர்களுக்கு ஒரு கைக் கெடிகாரமும், இரண்டு கைக் கெடிகாரங்கள் வாங்குபவர்களுக்கு ஒரு பாக்கெட் கடிகாரமும், ஒரு கைக் கடிகாரம் வாங்குபவர்களுக்கு ஒரு பவுண்டன் பேனாவும் இலவசமாக அளிக்கப்படும்




NO.894 SIZE 10½"

	பழைய விலை	புது விலை
21 ஜு. வாட்டர்புரூப் குரோம்	85/-	40/-
21 ஜு. ,, ரோ. கோ.	90/-	44/-
15 ஜுவல்ஸ் வாட்டர்புரூப்	80/-	38/-



NO.895 SIZE 10½"

	பழைய விலை	புது விலை
21 ஜு. வாட்டர்புரூப் குரோம்	95/-	45/-
21 ஜு. ,, ரோ. கோ.	100/-	48/-
17 ஜுவல்ஸ் வாட்டர்புரூப்	88/-	42/-



NO.896 SIZE 7½"

	பழைய விலை	புது விலை
15 ஜு. ரோ.கோ.	80/-	38/-
15 ஜு. ,, 10 மைக்ரோன்ஸ்	88/-	42/-



NO.897 SIZE 10½"

	பழைய விலை	புதிய விலை
5 ஜுவல்ஸ் ரோ. கோ.	68/-	28/-
15 ஜுவல்ஸ் ரோ. கோ.	75/-	35/-

○★○

PIONEER WATCH CO

POST BOX No. 11428 - CALCUTTA-6

நீரிழிவு

குணமாகும்

சிறு நீரில் சர்க்கரை காண்பது நீரிழிவு (DIABETES) நோயின் முக்கிய அறிகுறி. உங்களுக்குப் பசியும் தாகமும் அதிகமாயிருந்தாலும், உடல் உருகிக் கொண்டு வந்தாலும் அடிக்கடி நீர் இறங்கினாலும் உங்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இக் கொடிய உடல் உருக்கி நோய், தான் பற்றினவர்களைக் கடைசி மூச்சு உள்ள வரையில் விடுவதில்லை; கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை மரண வாயிலுக்கு இழுத்துச் செல்லும் நீரிழிவு வியாதியைக் குணப்படுத்த இஞ்செக்ஷன்கள் போடப்படுகின்றன: ஆனால் அவற்றினால் வியாதி கொஞ்சமும் குணமாவதில்லை. இஞ்செக்ஷன்கள் நீரில் சர்க்கரையைக் குறைக்கின்றன — அதுவும் மருந்துச் சக்தி உள்ள வரையில்தான். ஆகவே, உபாதைகளைத் தடுக்க வாழ்நாள் முழுவதும் ஊசிகள் போட வேண்டியதுதான். இதனால் அதிகச் செலவு ஏற்படுவதோடு கஷ்டமும் உண்டாகிறது. நோய் குணப்படுத்தாது போனால் நீங்கள் புண்களினாலும், கண் நோய், பல் நோய், வயிற்றுக் கோளாறு முதலிய பலவித வேதனைகளால் சிரமப்பட நேருகிறது.

நீரிழிவு வியாதியை, வீனஸ் சார்ம் மாத்திரைகளை உபயோகித்து, சிக்கனமாகவும், சுலபமாகவும் நிச்சயமாகவும், பத்திரமாகவும் சிகிச்சை பெறுங்கள்.

பண்டைக்கால யுனானி வைத்திய முறைகளைக் கொண்டு அரிய மூலிகைகளின்சேர்க்கையுடன் தயார் செய்யப்படும் வீனஸ் சார்ம் மாத்திரைகள், நோயை அடியோடு அகற்றுவதுடன், எத்தனையோ பேர்களை இன்செக்ஷன் அல்லது ஒருவிதமான பட்டினி இல்லாமல் குணமாக்கியிருக்கிறது. இதை உபயோகித்துப் பல ஆயிரக் கணக்கானவர்கள், இந்நோயின் மரணப் பிடியிலிருந்து தப்பியிருக்கிறார்கள். இம் மருந்தை உபயோகிக்கத் தொடங்கிய இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம், நீரில் சர்க்கரை குறைகிறது; அத்துடன் அதிக நீர் இறங்குவதும் நிற்கிறது. சில நாட்கள் உபயோகித்தாலே நோய் தணிந்து திருப்தி ஏற்படுகிறது. வீட்டிலிருந்தபடி வீனஸ் சார்ம் சிகிச்சையைத் துவங்குங்கள். விசேஷ பத்தியம் எதுவும் இல்லை. நீங்களே அதன் குணத்தை அறிவீர்கள். இதுபற்றிய விரிவான இலவச ஆங்கிலப் பிரசுரத்தை வரவழைத்துப் பாருங்கள்.

50 மாத்திரைகள் கொண்ட புட்டி ஒன்றின் விலை 6-12-0

(பாக்கிங் தபால் செலவு இனம்)

வீனஸ் ரிஸர்ச் லாபரேட்டரி (K. M.)

தபால் பெட்டி நெ. 587 கல்கத்தா

அருள் வாக்கு

சங்கீதம் கேட்ட அப்பொழுதுதான் இன்பத்தைத் தரும். காய்ந்த மணலில் தீர்த்தத்தை விட்டால் விழுந்ததைப் பார்ப்பதற்குள் வற்றி விடும். அது போல, சங்கீதம் கேட்ட மாத்திரத்திலேயே காதுக்குள்ளே வற்றிவிடும். கவியினுடைய நல்ல வார்த்தைகள் அமிருதத்தைப் போன்றவை. அந்த அமிருதம் சாகாது. கவியின் பாவத்தை இருதயத்தில் வாங்கினால் அது சாகாது. உள்ளுக்குள்ளே இருந்து நினைக்க நினைக்க இன்பத்தைத் தரும்.

ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

தமது சீடர்களுக்குக் கற்றுக் கொடுக்கையிலே அவர் வீட்டுக் கூரைமேலே போய் என் பிதா தினந்தோறும் கேட்டுப் படித்து வந்தார். இப்படி ஒருநாள் தவறாமல் ஆறுமாதம் சென்று வந்தார். கடைசியாக, இவருக்குத் தமிழ்ச் செய்யுளின் இலக்கணம் பிடிபட்டுப் போய் விட்டது. அப்பால் என் பிதா தமிழ்ச் செய்யுள் முறைகளையனுசரித்துக் காக பாஷையில் பாட்டுக்கள் ஆயிரம் வகைகளிலே பாடுவதற்குரிய விதிகள் ஏற்படுத்தியிருந்தார். அதையெல்லாம நமது காகராஜன் சந்நிதியில் அரங்கேற்றுவதற்கு முன்னதாகவே அவர் இறந்து போய்விட்டார். ஆதலால் புதிய சாஸ்திரம் எங்கள் வீட்டுக்குப் புறம்பே வர வழியில்லாமல் போய் விட்டது. என் பிதாவுக்கு நான் ஒரு மகள் தான் பிறந்தேன். என்னைத் தவிர வேறு பெண் குழந்தையேனும், ஆண் குழந்தையேனும் ஜனிக்கவில்லை. நான் பெண் ஜன்மமாதலால் ராஜ சபையில் இந்தப் புதிய சாஸ்திரத்தைக் கொண்டுபோய், அரங்கேற்றிக் காக பாஷைக்கொரு புதிய ஒளியையும் எனக்குத் தீராத கீர்த்தியும் ஏற்படுத்திக் கொள்ள இடமில்லாமல் தடுக்கப்பட்டிருக்கிறேன். அதை நான் உனக்குக் கற்றுக் கொடுக்க மிகவும் சம்மதமுடையவளாக இருக்கிறேன். நீ என்னிடம் கற்றுக்கொண்டு ராஜ சபையில் போய் அரங்கேற்றலாம். அதனால் உனக்கு ராஜ சபையில் மிகுந்த சன்மானமுண்டாகும். உலகத்திலும் பெரிய கீர்த்தியுண்டாகும். என்னுடன் வீட்டுக்கு வா. இன்று முதல் உனக்குத் தினந்தோறும் இரண்டுமணி நேரம் கற்பிக்கிறேன். இரண்டு மாதங்களில் ராஜாவின் சபையில் உனக்கு உயர்ந்த சன்மானங்கள் கிடைக்கும்'' என்றது.

இதுகேட்ட ஆண் காகம், ''நான் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவன். ராஜ சபையில் வாங்கும் சன்மானங்கள் எனக்கு அவசியமில்லை!'' என்றது. ''சரி, அது வேண்டாவிட்டாலும் நீ ஆரம்பத்திலே சொல்லியபடி உன்னாலே காக பாஷைக்கு ஒருபுதிய மகிமையும் உனக்கு என்றுமழியாத கீர்த்தியும் கிடைக்குமன்றோ! அதற்காக வேனும் என்னுடன் வா. நான் உனக்குக் கவிதைத் தொழில் கற்பித்துக் கொடுக்கிறேன்'' என்றது.

அவ்விரண்டும் தம் வீட்டுக்கு. அதாவது தமது கூட்டுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருக்கையில் அவற்றின் தலைக்கு மேலே சிறிது தூரத்தில் மன்மதன் பறந்து கொண்டிருந்தான். ஆணும் பெண்ணும் கூடி இருக்க விரும்புமாறு வற்புறுத்த விரும்பும் இயற்கையின் சாட்டையடி போல் மேற்கு மலைச் சாரலில் மழை தூறிக் கொண்டிருந்தது.

மன்மத தேவனுக்கு இப்படிப்பட்ட பருவங்களில், இப்படிப்பட்ட பிரதேசங்களில், வேலை மூச்சை முட்டுமாதலால் அன்று மாலை அவன் சீக்கிரமாகவே தன் தூணியிலிருந்த அம்புகளில் பெரும் பகுதியைச் செலவிட்டு விட்டு, தன் காதலியாகிய ரதி தேவியின் சல்லாபத்தை வேண்டித் தன் உலகத்துக்குச் சென்று கொண்டிருந்தான். இரண்டே இரண்டு கணைகள் மாத்திரமே அவன் கூட்டில் மிஞ்சியிருந்தன. அவற்றை லீலார்த்தமாக, மேலே சொல்லப்பட்ட ஆண் பெண் காகங்களின் மீது தலைக்கொன்றாக அழுத்திவிட்டுப் போனான்.

கூட்டுக்குப் போகு முன்னமே ஆண் காகமும் பேடும் ஒன்றையொன்று முத்தமிட்டுக் கொஞ்சத் தொடங்கி விட்டன. கூட்டுக்குள் நுழைந்த மாத்திரத்திலே காதல் வெறி வரம்பு கடந்து போய் விட்டது. கவிதைத் தொழில் படிக்க வேண்டுமென்ற ஞாபகமே ஆண் காகத்தின் உள்ளத்தினின்றும் எடுபட்டுப் போய் விட்டது. காலை சூரியோதயம் வரை அவை மதனமான லீலா போகங்களிலே பொழுது போக்கிக் கொண்டிருந்தன. மாலையில் இரண்டும் கோரமான நித்திரைக்குட்பட்டு மறுநாள் காலையிலே கண் விழித்தன. சற்றே இரை தேடுமுன் அன்றைக்கும் மன்மதன் அந்த வழியே போனான். அன்றையக் கதையும் முதல்நாள் போலவே ஆயிற்று. இங்ஙனம் நெடுநாள் நடந்து வந்தது. ஆண் காகத்துக்குக் காக பாஷையில் யாப்பிலக்கணம் கற்க வேண்டுமென்பதிலிருந்த ஆவலில்லாமலே ஒரேயடியாக மறந்துபோய் விட்டது. காகம் கவிதைத் தொழில் படிக்கவே இல்லை மதன சாஸ்திரம் படிக்கத் தொடங்கிவிட்டது.

இந்தக் கதை பேராசிரியர் வ. ரா. அவர்கள் தஞ்சையிலிருந்து நடத்தி வந்த ''சுதந்திரன்'' பத்திரிகையில் வெளியானது. இது வரை பாரதி நூல் தொகுதிகள் எதிலும் வெளிவரவில்லை. உதவியவர்: திரு ரா. அ. பத்மநாபன்.

வட்ட மேஜை

பாவை விளக்கு

அகிலன் என்ற இதழ்ப் பெயரில் ஓர் அற்புத மணம். அந்த மணத்தினுமினிய மணம் ஒன்று அவர் எழுதிய 'பாவைவிளக்கு'. அகிலனின் அற்புத, பிரம்மாண்டமான, அழகுச் சிருஷ்டிகள் பல. ஒவ்வொன்றிலும் அவர் அமைத்த கதா பாத்திரங்கள் உயிருள்ளவைகளே.

அவர் நடை துள்ளியோடும் மானின் நடையை ஒத்தது. அழகுத் தமிழிலே, இலக்கணப் பிழையேதுமில்லாமல், தெள்ளிய நீரோட்டம் போல, எழுதுவதில் அகிலனைப் போல் தமிழகத்தில் வேறு எந்த எழுத்தாளரும் இருக்கவே முடியாது.

அகிலனை ஏதோ முகஸ்துதி பண்ணுவதாக எண்ண வேண்டாம். அவருடைய கதைக் கோவைகளைப் படித்து, புத்துணர்ச்சிப் பெற்ற என் நெஞ்சின் உணர்ச்சி என்னை இப்படியெல்லாம் எழுதத் தூண்டுகிறது.

திருவாரூர்
30-8-57

வெ. சீதாராமன்

★

அகிலனால் ஏற்றிவைக்கப் பட்ட 'பாவை விளக்'கின் ஒளியில் வழி நடந்துவருகின்றேன். சுடர் சிறிது சிறிதாக விரிந்து ஒளிர்கின்றது.

ஆத்மீக உணர்வை அளிக்கும் ஆலயத்தின் முன் எதனை மறைக்க முடியும்? ஆங்கே இருளில் மறைந்திருக்கும் சம்பிரதாய நெளிவுகள் புலனாகின்றன. இது வரை சந்தித்த முக்கிய பாத்திரங்களான தேவகி, தணிகாசலம் ஆகியோரின் குணப் பண்புகள் நிதர்சன உலகின் உண்மைகளே.

விறுவிறுப்பாக, புதிய உத்திகளின் கட்டுக்கோப்புடன் சுடர் விடுகிறது பாவை விளக்கு.

இலங்கை
30-8-57

ஆர். நாகராஜன்

★

திரு அகிலன் அவர்களின் "பாவை விளக்கு" நெஞ்சைத் தொடும் எத்தனையோ காட்சிகளை தத்ரூபமாகச் சித்திரிக்கிறது.

தணிகாசலத்தின் தந்தை பரமசிவத்தின் மரணப் படுக்கைக்கு அவர் நம்மை இட்டுச் செல்லும் விதமும், அங்கு நாம் காணும் காட்சியும் கல்நெஞ்சினரையும் கரைந்துருகச் செய்யும் சோக சித்திரங்களன்றோ!

பரமசிவத்தின் மரணப் படுக்கையிலிருந்து நம்மை வெளியே அழைத்துக் கொண்டு வரும் கட்டத்தில் ஆசிரியர் நம்மையும் பரமசிவத்தின் குடும்பத்தாரோடுசேர்ந்து 'கோ'வென்று கதறியழச் செய்து விடுகிறார்.

வாழ்க்கையின் எத்தனையோ சம்பவங்களை எத்தனையோ கோணங்களில் சித்திரித்துக் காட்டும் ஆசிரியரின் அனுபவ மிக்க கற்பனா சக்தியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

பரமக்குடி
24-8-57

டி. நாராயணசாமி

இலக்கியச் செல்வம்

"கல்லூரி மாணவர்களுக்கு ஓர் நற்செய்தி" என்ற தலைப்பில் செப்டம்பர் முதல் தேதி கல்கி இதழிலே வெளியாகியிருக்கும் கட்டுரையைப்படித்து நான்-மாணவன் அல்ல, ஆசிரியர் - மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

பேராசிரியர் திரு அ. சீநிவாசராகவன் மாணவர்களுக்கு ஆங்கிலத்திலே பாடமாக வைக்கப்பட்டிருக்கும் சில பாடல்களுக்குக் கல்கி இதழிலே தொடர்ந்து விமர்சனம் செய்ய இசைந்துள்ளார் என்ற செய்தி பெரிதும் வரவேற்கத் தக்கது.

மேலும், ஆங்கிலத்தை — இங்கிலாந்திலே ஜெர்மன், லத்தீன் போன்ற பிற நாட்டு மொழிகள் ஆங்கிலத்தின் மூலம் புகட்டப் படுவது போல—தமிழில் சொல்லித் தந்தால் என்ன என்று கேட்டிருக்கிறீர்கள். அவ்வாறு செய்வது தற்பொழுது இருக்கும் சூழ்நிலையிலே மிகவும் அவசியம்.

இதனால் பெரிய பயன் ஏற்படும். மாணவர்களுக்கு மட்டும் அல்ல. மற்ற எல்லாத் தமிழ் அன்பர்களுக்கும்கூட. தற்பொழுது மாணவர்களிடத்திலே ஆங்கில மொழியின் மீது இருக்கும் கசப்புத் தன்மையும், வெறுப்பும் அகன்றுவிடும். ஏன், ஆங்கில மொழியினிடத்துப் பற்றும், ஈடுபாடும் ஏற்படும் என்று கூறினும் மிகையாகாது. இது நான் ஓரளவுக்கு என் அநுபவத்திலே கண்ட உண்மை. தமிழ் மொழி தன்னுடைய பரப்பை, திறமையை, ஆழ்ந்த நுணுக்கமான நவீன உண்மைகளை எடுத்துரைப்பதில் பன்மடங்கு பெருகிக் கொள்ள வாய்ப்பு கிடைக்கும்.

சேலம்
30-8-57

கோ. சீனிவாசன்

உண்மை ஜனநாயகம்

செப்டம்பர் முதல் தேதி கல்கியின் "மொழி விஷயத்தில் ஜனநாயகம்" தலையங்கம் சிறப்பாக உள்ளது. குறிப்பாக: "....இந்தி வெறியர்களின் ஆக்கிரமத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது என்ற டாக்டர் அம்பேத்காரின் உருக்கமான குரல். ..ஒரு நாட்டுக்கு ஒரு மொழிதான் தேசிய மொழியாகவோ, அரசாங்க மொழியாகவோ இருக்க வேண்டுமென்பதில்லை. சான்றாக சுவிட்சர்லாந்து, தென் ஆப்பிரிக்கா, பின்லாந்து போன்ற நாடுகளைச் சுட்டிக் காட்டியும்.... ஆங்கிலமும் மத்திய சர்க்கார் மொழியாக இருக்க 'வேண்டும்" என்று ஆய்ந்துள்ள முடிவு. ஜனநாயக மக்கள் ஆட்சி, மொழிப் பிரச்னையில் கடைப்பிடிக்க வேண்டிய செயலைக் 'கல்கி' அறுதியிட்டுக் காட்டுகிறது.

மதுரை
30—8—57

மதுரை மகிழ்ச்சி மன்றம்

கேரளத்தில் நடக்கும் கூத்துகள்

அண்மையில் கேரளத்தில் நடந்து வரும் கூத்துகள் யாவர் கவனத்தையும் கவர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. காங்கிரஸ்காரர்களும், அவர்களுக்குத் துணையாக எதிர்க் கட்சிக்காரர்களும் சேர்ந்து நடத்தும் கிளர்ச்சிகளும், பார்லிமெண்டில் கேரள அரசாங்கத்

தைக் குறை கூறுவதையே தம் குறிக்கோளாகக் கொண்ட சில உறுப்பினர்களது போக்கும் மிகவும் விசித்திரமாகக் காணப்படுகிறது.

நிலச் சீர்திருத்தம் கொணர்வதற்கு முன் கல்வி மசோதா கொணர்ந்ததை ஒரு காரணமாகக் காட்டி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதும், கீழ்த்தரமான கிளர்ச்சிகள் நடத்துவதும் அருவருக்கத் தக்கன. புனிதமான காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு மாசு உண்டாக்கியுள்ளதை, பொறுப்பு வாய்ந்தவர்கள் உணரத் தவறி விட்டனர். 'தமிழகத்'தில் சில குறுகியபோக்குள்ள கட்சிகள் நடத்தும் கிளர்ச்சிகளையே இது நினைவு படுத்துகிறது. கல்வி மசோதாவில் சில குறைகள் இருக்கலாம். கத்தோலிகப் பாதிரிகள் இதுகாறும் நடத்தி வந்த உதேச்சாதிகாரப் போக்கு, தங்கள் மதப் பிரசாரங்கள் இவைகளுக்கு இம்மசோதா முடிவு கட்டி விட்டது என்பதற்குக் கூச்சலேசான்று. இதற்கு ஒத்துப் பாடிக் கேரள கம்யூனிஸ ஆட்சியையே கவிழ்ப்பதற்காகச் செய்யும் சதியோ என மக்கள் கருதும்படி காங்கிரஸ் கட்சி செய்யும் செயல்கள் இருக்கின்றன. தார்மீக அடிப்படையில் பரந்த மனப்பான்மை கொண்ட காங்கிரஸ் ஸ்தாபனம் இச்செயல்களால் எந்த அளவு தன் பெருமைக்குக் குந்தகம் விளைவித்துக் கொண்டது என்பதை அறிய வேண்டும். 'மக்கள் கருத்துக்கு மதிப்பு' என உலகம் முழுதும் நம் நாட்டு ஜனநாயகத்தைப் போற்றும் இந்நிலையில் மத்திய ஆட்சிக் கட்சி தவிர வேறு கட்சி ஒரு பகுதியில் ஆட்சி நடத்துவதைப் பெருமையாக நினைப்பதிருக்க இம்மாதிரி கேலிக் கூத்துகள் நடத்தலாமா?

தேதியூர்
3—9—57

தேதியூர் பாலு

பாரதி பண் வளர்ப்போம்!

தமிழழகன்

காவியக் கோவிலில் கொலுவிருந்தான் ;—வான்
கற்பனைத் தேரில் உலவி வந்தான் !
மேவி யிலமும் சொந்தம் என்றான் ;-கவி
மேதையால் யாவும் நிறைந்து நின்றான் !

சக்திக் கழலில் திறலடுத்தான் ;-பாஞ்
சாலி சபதக் குரல் கொடுத்தான் !
கத்தும் குயிலின் கதையிசைத்தான் ;-தெய்வக்
கண்ணனை ஏவல் கொண்டுற விசைத்தான் !

உரிமைக்குப் புதிதோர் விளக்கமிட்டான் ;-வானின்
ஒளியிங்கு மலர முழக்கமிட்டான் !
இருமைக்கும் சாகாக் கவிபுனைந்தான் ;-அதில்
'எழுவீர் புதுயுகம்!' என முனைந்தான் !

காக்கை கடலொடு சொந்தம் கொண்டோன் ;—நீள்
ககன மலையொடும் பந்தம் கொண்டோன் !
யாக்கை உயிர்த்தொடர் பறிந்து கொண்டோன்;—அன்பே
யாவுமெனக்கண் டிணைந்து கொண்டோன் !

ஊரெலாம் அவன்பேர் ஒலித்திடுவோம் ;-நம(து)
உணர்வெலாம் அவனை அஞ்சலித்திடுவோம் !
பாரெலாம் பாரதி பண்வளர்ப்போம் ;-தமிழ்ப்
பாட்டாலிவ் வையம் பாலித்திடுவோம் !

உயிரோடு வதைக்கும் திட்டம்

எனது குமாரன் பழனியப்பன் பட்டணம் முனியப்பம்பாளையம் கிராமத்தில் இருந்து வந்து தினமும் இராசிபுரம் நகரசபை கல்லூரியில் இரண்டாம் படிவம் படித்து வருகிறான். அவனுக்கு ஜூலை மாதம் 18, 19, 20 தேதிகளில் பி. ஸி. ஜி ஊசி போட்டிருக்கிறார்கள். அதுமுதற் கொண்டு சிறுநீர் ரத்தமாகவே போகிறது. ஊசி போட்ட இடத்திலும் சீழ் பிடித்துப் புருபோல் கட்டி விட்டது. இதற்காக இராசிபுரத்தில் இருக்கும் டாக்டர் எல். கண்ணன் எம். பி. பி. எஸ். அவர்களிடம் வைத்தியம் செய்து வருகிறேன். சமீபத்திலே எனது மூத்த மகன் கிணற்றில் ஏற்றம் இறைத்து வரும்போது இயற்கை சதி செய்ததனால் கால் இடறிக் கிணற்றில் வீழ்ந்து உயிர் துறந்து விட்டான். இந்த மனக்கவலையுடன் நான் இருக்கும்போது நம் காருண்ய சர்க்கார் எனது ஒரே மகன் பழனியப்பனுக்கு பி. ஸி. ஜி ஊசி போட்டு உயிருடனே சாக அடிக்கிறார்களே!

பட்டணம்
முனியப்பம் பாளையம்
21—8—1957

செல்லப்பகவுண்டர்

தென்னாடு வளம்பெற

வட இந்தியாவில் பெரிய பெரிய நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அநேக கிராமங்கள் சின்னாபின்ன மடைந்திருக்கின்றன. அதைத் தீர்க்க ஒரே ஒரு வழியுண்டு.

வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் பெரிய பெரிய வாய்க்கால்கள் வெட்டினால்தான் மிகவும் நல்லது. இல்லையென்றால் வருஷா வருஷம் இம்மாதிரியே அவல நிலைதான்.

வடக்கே அடிக்கடி வெள்ளப் பெருக்கு. தெற்கே சதா வறண்ட நிலை. ஏன்?

பாரதிமுதல் காந்திமகான் வரையிலும் ஏக இந்தியா போன்ற உயர்ந்த லட்சியங்களுடன் வாழ்ந்து மறைந்தார்கள். ஆனால் இன்றுள்ள தலைவர்களுக்கு இது தெரியவில்லை போலும்!

லட்சுமிபுரம்
27—8—57

பி. கிருஷ்ணன்

சுதந்திர மலாய் நாட்டின் சிறந்த தலைவர்

ரா. நா.

கால் பந்தாட்ட நிபுணர் கமிட்டிக் கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. அக் கமிட்டி அங்கத்தினர்களில் மூவர் இந்தியர்கள். அம் மூவருக்குள் பந்தாட்ட விஷயமாகக் காரசாரமாக விவாதம் நடந்து கொண்டிருந்தது. அவர்களுடைய விவாதத்தை நிறுத்தக் கமிட்டித் தலைவர் செய்த முயற்சியெல்லாம் வீணாயின.

" ஐயா! உங்களை மன்றாடி வேண்டிக் கொள்கிறேன். வாயை மூடிக் கொண்டிருக்க மாட்டீர்களா? எனக்குக் காந்தி மகானிடத்திலும் ஜவாஹர்லால் நேருவிடத்திலும் மிகுந்த மதிப்பு உண்டு" என்றார் கமிட்டித் தலைவர் திடீரென்று.

" அவர்களுடைய பெயர்களை இங்கே ஏன் இழுக்கிறீர்கள்? எங்கள் தலைவர்களுக்கும் கால் பந்தாட்டக் கமிட்டிக்கும் என்ன சம்பந்தம்?" என்றார்கள் இந்தியப் பிரமுகர்கள்.

" மிகுந்த சம்பந்தம் உண்டு. காந்திஜியும் ஜவாஹர்லால் நேருவும் முப்பத்தைந்து கோடி இந்திய மக்களைத் தங்கள் சொற்படி கேட்டு நடக்கும்படி செய்தார்கள். ஆனால், இந்தக் கமிட்டியில் உள்ள இந்த மூன்று இந்தியர்களை என் சொற்படி கேட்கச்செய்ய முடியவில்லையே. இதிலிருந்து அவ்விருவரும் எவ்வளவு திறமையும் ஆற்றலும் உறுதியும் வாய்ந்த மாபெரும் தலைவர்கள் என்பது தெரியவில்லையா?" என்றார் கமிட்டித் தலைவர்.

அதன்பிறகுதான் அம் மூவரும் விவாதத்தை நிறுத்திக்கொண்டார்கள்.

மேற்படி கமிட்டித் தலைவர் யார் என்று நினைக்கிறீர்கள்? அவர்தான் தற்போது சுதந்திரம் பெற்றுள்ள மலாய் நாட்டின் பிரதம மந்திரியான துங்கு அப்துல் ரஹ்மான்!

துங்கு அப்துல் ரஹ்மான் 1903-ம் ஆண்டில் பிறந்தார். இவர் மலேயாவைச் சேர்ந்த கெட்டா சுல்தானின் சகோதரர். இவருடைய மூதாதையர் பல நூற்றாண்டுகளாக நிலப் பிரபுக்களாக இருந்து வந்துள்ளனர். செல்வக் குடும்பத்தில் பிறந்த மற்றச் சிறுவர்களைப் போலவே அப்துல் ரஹ்மானும் படிப்பதற்குச் சீமைக்குச் சென்றார். அங்கே தேசிய ஆர்வம் மிக்க இந்திய மாணவர்களுடன் தொடர்பு கொண்டதனால் இவருக்கும் மலேயாவின் எதிர் காலத்தைப் பற்றிய சிந்தனை அப்போதே ஏற்பட்டது. படித்து முடிந்ததும் தாய்நாட்டுக்குச் சென்று அரசாங்க உத்தியோகம் ஏற்று ஜில்லா நிர்வாகியாக வேலை பார்த்தார்.

இரண்டாவது உலக யுத்தம் 1939-ல் தொடங்கியது. மலேயா 1941-ல் ஜப்பானிய ஆட்சிக்குட்பட்டது. 1945-ல் யுத்தம் முடிந்து மீண்டும் பிரிட்டிஷார் ஆட்சிக்கு வந்தனர். ஆனால் மலேயாவின் ஆட்சி முறையில் எவ்வித மாறுதலும் ஏற்படாததால், மக்கள் மனமுடைந்து போராட்ட இயக்கத்தைத் தோற்றுவித்தனர். சமரச வழிகளிலேயே நாட்டின் சுதந்திரத்தைப் பெற முடியும் என நினைத்த அப்துல் ரஹ்மான் மலேயாவிலிருந்து பிரிட்டன் சென்றார். 1949-ல் பாரிஸ்டர் பட்டம் பெற்றார். 1951-ல் தாய்நாட்டுக்குத் திரும்பினார். அச்சமயம் மால்கம் மக்டானல்டு மலேயாவில் பிரிட்டிஷ் ஹைகமிஷனராக இருந்தார். அப்துல் ரஹ்மானின் செல்வாக்கையும் திறமையையும் அவர் உணர்ந்தார். பிரிட்டிஷாரைச் சமரச வழிக்குக் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கை துங்குவுக்கு இருந்தது. ஆட்சிப் பொறுப்பு மலேயர்களின் கைக்கு வந்தால் கம்யூனிஸ்ட்கள் பலமிழந்து விடுவர் எனப் பிரிட்டிஷ் ஆட்சியினர் அறியும்படி செய்தார். கம்யூனிஸ்ட்கள் மேலோங்கினால் நாட்டில் பெரும் நெருக்கடியும் கொந்தளிப்பும் ஏற்படும் என்பதை அவர்கள் உணரும்படி செய்தார்.

இவ்வாறு இரு தரத்தாரும் துங்குவின் திறமையை உணர்ந்ததனால் மலேயாவின் இணையற்ற தலைவராவது சாத்தியமாயிற்று. பிறகு அவர் மலேயா ஐக்கிய தேசிய ஸ்தாபனத்தின் தலைவரானார். இந்த ஸ்தாபனம் மலாய் சீனர் சங்கம், மலாய் இந்திய காங்கிரஸ் ஆகிய இரு ஸ்தாபனங்களுடன் சேர்ந்து ஒரு கூட்டணியை அமைத்தது.



துங்கு அப்துல் ரஹ்மான்

இவ்வளவு ஆதரவும் செல்வாக்கும் படைத்த தலைவருடன் சமரசம் செய்து கொள்வதே சிறந்தது என்பதை பிரிட்டிஷாரும் உணர்ந்தனர். அதன் பலனாகத்தான் அவர்கள் அந்நாட்டு மக்களுக்கு வாக்குரிமை யளித்து 1955-ல் பொதுத் தேர்தல் நடத்தினர்.

இந்தத் தேர்தலில் துங்கு அப்துல்ரஹ்மானின் கட்சி பெருமித வெற்றி பெற்றது. திரு ரஹ்மான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்திலே அவர் பிரிட்டன் சென்று பிரிட்டிஷ் மந்திரிகளுடன் பேசி மலேயாவுக்கு ஓரளவு சுய ஆட்சியும், 1957 ஆகஸ்டில் பூரண சுதந்திரம் அளிப்பதாக வாக்குறுதியும் பெற்றுத் திரும்பி வந்தார் என்பது யாவரும் அறிந்ததே.

திரு ரஹ்மானின் மகன் இந்தியாவிலே புனாவில் உள்ள ராணுவக் கல்லூரியில் பயிற்சி பெற்று வருகிறார்.

துங்கு அப்துல் ரஹ்மான் கால் பந்து விளையாடுவதில் மிகவும் நிபுணர்.

நமது நாட்டுத் தலைவர்களில் அவர் நேருவையும் நேதாஜியையும் சந்தித்திருக்கிறார். 1937-ல் நேருஜி அந்நாட்டுக்குச் சென்ற போது சர்வதேசப் புகழ் பெறவில்லை. சிறை செல்லுவதே நேருஜியின் தொழில் என அவரை அப்போது கேலி செய்தவர்களும் மலேயாவில் உண்டு. அவர் மலேயா சென்ற போது துங்கு ஜில்லா அதிகாரியாக இருந்தார். அவருக்கு நேருஜியை வரவேற்று உபசரிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த சில நாள் பழக்கத்திலேயே நேருவிடம் இவருக்கு மிகுந்த மதிப்பு ஏற்பட்டது.

யுத்த காலத்தில் திரு ரஹ்மான் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸைச் சந்தித்தார். இந்திய சுதந்திரத்துக்கு ஜப்பானின் உதவியைப் பெற்ற போதிலும், நேதாஜி ஜப்பானின் கையாளாக இருக்கவில்லை என்பதை துங்கு நேரில் அறிந்து கொண்டார்.

"சுதந்திர மலேயாவில் இந்தியர் நிலை என்ன? அவர்களுக்குச் சம உரிமை மறுக்கப் படுமா? அவர்கள் அன்னியர்களாகக் கருதப் படுவார்களா?"

இந்தக் கேள்விகளைக் கேட்ட நிருபருக்கு மலாயா பிரதமர் தெளிவான பதில் கூறினார்.


"இங்கு ஏழு லட்சம் இந்தியர்கள் இருக்கின்றனர். அவர்களெல்லாம் மலாய் நாட்டின் சிறந்த பிரஜைகள். அவர்கள் சலியாத உழைப்பாளர்கள். அவர்களுக்குச் சம உரிமை வழங்கப்படும். அவர்களுக்கும் மலாயர்களுக்கும் எவ்விதத் தகராறும் வேற்றுமையும் கிடையாது" என்று கூறினார்.

ஆசிய மக்களின் சுதந்திர ஆர்வம் இந்திய மண்ணில்தான் பிறந்தது என்பது துங்கு அப்துல் ரஹ்மானின் கருத்தாகும்.

மலாய் நாடு சுதந்திரம் பெறும் விஷயத்தில் இந்தியா காட்டி வந்த அநுதாபமும் ஆதரவும் மிகவும் போற்றத்தக்கவை என்று அவர் சமீபத்தில் கூறியது அவரது நன்றி உணர்ச்சியைக் காட்டுகிறது.


மலாய் நாடு கல்வியில் மற்ற நாடுகளைப் போல் முன்னேற்றம் அடைந்திருப்பதாகக் கூற முடியாது. எனவே, சென்ற சில வருஷங்களாக மலாய் நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்திய சர்க்கார் உதவிச் சம்பளம் கொடுத்து, அவர்கள் இந்தியாவில் உயர்தரக் கல்வி பெற வசதி அளித்திருப்பது மலாய்ப் பிரதமரின் மனத்தைக் கவர்ந்ததொரு விஷயமாகும்.

துங்கு அப்துல்ரஹ்மான் ஆடம்பரமற்றவர்; சாந்த சுபாவமும் பரந்த நோக்கமும் உள்ளவர்; திறமை வாய்ந்த ராஜதந்திரி என்றும் அவர் புகழ் பெற்றுள்ளார். இவ்வாறு ஒரு தலைவருக்கு இருக்கவேண்டிய குணநலன்கள் வாய்க்கப்பெற்றுள்ள துங்கு அப்துல்ரஹ்மான் தென்கிழக்கு ஆசியாவின் எதிர்காலத்தை உருவாக்கும் சிறந்த சிற்பிகளில் ஒருவராகத் திகழ்வார் என்று பலரும் கருதுகின்றனர்.



கிரேக்க மகா கவியான ஹோமர், ஒதஸ்ஸே என்ற காவியத்தில் விசித்திரமான நாடு ஒன்றைக் குறிப்பிடுகிறான். அந்தநாட்டில், லோடஸ்* என்ற அதிசயச்செடி எங்கும் மண்டிக் கிடக்கிறது: அதன் பூவையும், கனியையும், அந்நாட்டு மக்கள் உணவாகக் கொள்கிறார்கள்; அதனால், செயலாற்றும் முனைப்பை இழந்து, சோம்பிக் கிடப்பதையே சுகமாகக் கருதி விடுகிறார்கள். நாடு ஒரு சோம்பல் அம்பலம் ஆகி விடுகிறது. வினைத்திறன் மழுங்கிய சோம்பல் சமுதாயம் ஒன்று அங்கே நடைபெறுகிறது. இது மகாகவி ஹோமர் தருகின்ற குறிப்பு. ஆனால் ஹோமருடைய காவியத்தில், இந்தக் குறிப்பு மிகச்சுருக்கமாக இருக்கிறது.

லோடஸ் நாட்டைப் பற்றியோ அங்குள்ள மக்களைப் பற்றியோ, துயிற்கனி அருந்தியவர் மன நிலையைப் பற்றியோ விரிவான வருணனை எதுவுமில்லை. நாடு துயிற்கனி



நாடு, அந்நாட்டு மக்கள் துயிற்கனி உண்ணுகிறார்கள். துயிற்கனியோ உண்பவன் ஊக்கத்தை உண்டு விடுகிறது; இவ்வளவுதான் ஹோமர் பேசுவது.

இது, 2700 ஆண்டுகளுக்குப் பிறகு, ஆங்கிலக் கவிஞன் ஒருவன காதில் விழுந்தது. அவன் கற்பனைக்கு வித்தாக அமைந்தது.

சோம்பலையே வளர்க்கும் துயிற்கனி நாடு, இலட்சியச் சோம்பல் அம்பலமாக அல்லவா அமைந்திருக்கும்? அது எப்படிக் காட்சி அளிக்கும்?

துயிற்கனி உண்டவர்கள் செயலில் ஈடுபடுவதை வெறுத்துச் சும்மா இருந்தால் போதும் என்று எண்ணினார்களே, இந்த மனநிலையின் விசித்திரத்தைப் பற்றி அவர்கள் பேசினால் என்ன சொல்வார்கள்?

இப்படியெல்லாம் எண்ணமிட்டான், பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தென்னிஸன்* என்ற ஆங்கிலக் கவிஞன். இந்தக் கேள்விகளுக்கு விடை தேடி அவன் செய்த கற்பனைப் பிரயாணமே 'துயிற்கனி அருந்தியவர்' **என்ற அற்புதமான பாடல். அதை இப்போது பார்ப்போம்.

இதாகா தீவின் அரசனான ஒதஸூஸ் என்ற கிரேக்க வீரனுடைய கப்பல்கள் பலநாட்கள் நடுக்கடலில் புயலால் அலைக்கழிக்கப் பெற்று, கரையை நெருங்குகின்றன. எதிரே தென்படும் கரை எந்த நாட்டைச் சேர்ந்தது என்பது ஒதஸூஸுக்குத் தெரியாது. தன்னுடைய போர் வீரர்களைப் பார்க்கிறான். புயலில் அடிபட்டு, காற்றோடும் கடலோடும் மல்லாடி உயிருக்கு மன்றாடி மன்றாடி, உள்ளமும் உடலும் சோர்ந்து, துடுப்பைத் தூக்கவும் இயலாமல் தள்ளாடி விழும் வீரர்களைப் பார்க்கிறான். அணுகி வரும் நாடு

---

* துயிற்செருந்தி அல்லது துயிற்பூண்டு என்று இந்தச் செடியை நாம் குறிப்பிடுவோம்.

*Alfred Tennyson **The Lotos-eaters.

எதுவானால் என்ன? கடலின் பேயாட்டத்திலிருந்து தப்பி, கப்பலென்ற சிறையிலிருந்து விடுபட்டு, நாலடியாவது காலாறத் தரையில் நடக்க மாட்டோமா என்றல்லவா இவ்வீரர்கள் ஏங்குகிறார்கள்? தலைவனான ஒதஸூஸ் இதைக்காண்கிறான். அவனுக்குச்சோர்வு இல்லையா, புயலில் மற்றவர்களைப்போல, அவனும் வருந்தவில்லையா? வருந்தினான், சோர்ந்தும் இருக்கிறான்—ஆனாலும் அவன் தலைவன். உண்மையான தலைவனுக்குத் தன்னைப் பற்றிய எண்ணம் ஏது? வீரர்களைப் பார்த்துக் கம்பீரமான குரலில் பேசுகிறான் ஒதஸூஸ். இங்கிருந்து தொடங்குகிறது 'துயிற்கனி அருந்தியவர்' என்ற ஆங்கிலப் பாடல்.

'துணிவுடன் இருங்கள். இதோ கரை வந்து விட்டது. விம்மி எழும் இந்த அலை, கண நேரத்தில் நம்மைக் கரை சேர்த்துவிடும்' என்று நெருங்கும் கரையைத் தன் வீரர்களுக்குச் சுட்டிக் காட்டுகிறான் ஒதஸூஸ்.

கப்பல்கள் கரையைத் தொடுகின்றன. கிரேக்க வீரர்கள் இறங்கி, அந்தப் புதிய நாட்டைக் கடற்கரையிலிருந்து பார்க்கிறார்கள். பிற்பகல் நேரம். நீண்ட நிழல்கள் எங்கும் படிகின்றன. எங்கும் ஒரே அமைதி. இந்த அமைதியைக் கலைக்க மனமில்லாதது போல, ஒய்ந்து அலைகிறது காற்று. தொலைவிலே, மலையின் மேலிருந்து விழும் அருவிகள், புகை போல் மிதந்து செல்வதாகத் தோன்றுகிறது. மலைகளின் இடையே உள்ள பள்ளத்தாக்கின் மேல், மழுங்கிய ஒளியோடு சந்திரனுடைய வட்ட முகம் தென்படுகிறது. இந்நாட்டில், எப்போதும் பிற்பகலின் அமைதியும், மங்கல் ஒளியுந் தானோ என்று நினைக்கும்படி இருக்கிறது நாட்டின் தோற்றம். இதைத் தென்னிஸன் சொல்லுகிறான்:

பின்பகலில் வந்தடைந்தார், பின்பகலே எப்போதும்
நின்றதோ அங்கு என்னநிகழும் நிழல்நாடு.
பேய்க்கனவு கண்டு பெருமூச்செறிபவன் போல்
ஒய்ந்து மயங்கும் உணங்கும் கடற்காற்று
தாழ்வரையின் மேலே தவழ்ந்துநிற்கும் வட்டமதி
கீழே இழியும் புகைபோல் வரைமார்பில்
வீழ்ந்து தியங்கித் தயங்கிவிழும் மெல்லருவி

[உணங்கும் - வருந்தி முனகும்]

நாட்டை இன்னும் சிறிது கூர்ந்து நோக்குகிறோம். எங்கே பார்த்தாலும் சிலுசிலு வென்று பாயும் மெல்லருவிகள் புகையைப் போல, மெல்லிய மிக மெல்லிய மஸ்லின் துணியைப் போல, மலை முகட்டிலிருந்து சில அருவிகள் தவழ்ந்து வருகின்றன. வேறு சில சோலைக்குள்ளே அலையும் ஒளியின் வழியே ஊடுருவி வந்து, நுரை துயிலும் புனற்பரப்பாய் விரிந்து மெல்லச் சுழலும் ஆறு ஒன்று, சலனமற்ற மார்பிலே ஒளி மின்ன, கடலை நோக்கி அமர்ந்த நடையிட்டுச் செல்கிறது. தூரத்தில், எத்தனையோ காலத்து உருகாவெண்பனி சுமந்து, அந்தி வானச் சிவப்பு முடியிலே படிய, மூன்று மலைகள் அசையாமல் நிற்கின்றன. அடிவாரத்தில் உள்ள சோலைகளின் பச்சைச் செறிவுக்கு



கி. பி. 1832-ம் ஆண்டில் இப்பாடல் முதலில் வெளி வந்தது. பிறகு தென்னிஸனே பல திருத்தங்கள் செய்து, செப்பனிட்டு, அந்தப் பாடலை இப்போது வழங்கும் வடிவத்தில் தந்தான்.



மேலே, நிமிரும் சாரலில், நிழல்போலப் பைன் மரங்கள் அசைகின்றன.

எங்கும் அருவி இழியும் புகையைப் போல்
துங்கமென் சல்லா துவள விழுவதுபோல்
மெல்ல இழையும் மெலிந்த தளிர் அருவி
நில்லாது உழலும் ஒலி உருவிப் போந்து நுரை
தூங்கும் புனற்கழலாய் தூங்கும் சில அருவி
தேங்கு கடல் நோக்கித் தவழும் ஒலி ஆறு.
ஆன்ற பனிக் கோபுரமாய் அந்திச்சிவப்பேந்தி
மூன்று கிழமலைகள் மோனத்து உறும் சேணில்
சோலை நெசவிற்கு மேலே நிமிர்சாரல்
நீலத்தில் ஏறி நிழலாடும் பைன் மரங்கள்

[ஆன்ற - நிலைபெற்ற; சேணில் - தொலைவில்; பைன் - ஒருவகை மரம்; நமது சவுக்க மரத்தைப் போன்றது.]

அழகிய நாடு. அமைதி நிரம்பியது. இயற்கை வளமுடையது. அப்படியா? பாருங்களேன். அந்தி வானத்துச் செக்கர், சிறிதும் மங்காமல், ஏதோ மந்திரத்தால் கட்டுண்டதுபோல் நிற்கிறது. சூரியன் மேற்கே சாய்ந்து விட்டான். என்றாலும், சலனமில்லாமல் நிற்கிறான். இந்த நாட்டில் என்றும் பிற்பகல் தானோ? எப்போதும் சூர்யாஸ்தமனந் தானோ? மலைகளுக்கு இடையே நீண்ட பள்ளத்தாக்குகள். ஒவ்வொன்றிலும், கமுகும், கோரையும், புல்லும், புனல் அருவியும் மாறாத இயற்கை வளம் உடைய நாடோ? இங்கே ஒரு பொருளும் தன் நிலையிலிருந்து விலகாதோ?

மந்திரத்தால் மாழாற்றது என்னத் தொடுவானில்
அந்திவான் செக்கர் அசையாமல் நின்றதுவால்
பைங்கமுகவேலிசூழ் பொன்திடரும் எங்கெங்கும்
கோங்கு உதிரும் கோரைவரிசையும் சேண் அளவி
ஓங்குபசும் புல்வெளியும் ஒண்மருதப் பூரிப்பும்
ஓங்கல் இடைப்பிளவின் ஊடே தெரிந்தனவால்
எப்பொருளும் தந்நிலையும் என்றென்றும் மாறுமல்
அப்படியே நின்ற என ஆர்ந்த துயில்நாடு.

[பைங்கமுக-பச்சைக் கமுக மரத்தால் ஆன; திடர் - மேட்டு நிலம்; கோங்கு - வாசனை; சேண் அளவி-நெடுந்தூரம் வரையில் பரந்து; ஒண்மருதம் - ஒளி பொருந்திய மருத நிலம் ஓங்கல் - மலை.]

வளம் நிறைந்த இந்நாட்டில் எதற்காக உழைக்க வேண்டும்? ஓய்வில் அழுந்தி, சும்மா இருப்பதற்காகவே இந்நாடு படைக்கப் பெற்றதோ? 'ஆம்' என்று சொல்பவர் போல் துயில் நாட்டு மக்கள் வருகிறார்கள். அந்தியின் ரோஜா வண்ண ஒளியில், அவர்களுடைய கறுத்த முகம் வெளிர்த்துச் சோகை பிடித்தது போல் தோன்றுகிறது. அவர்கள் விழியிலே மென்மை, தீராத ஓய்விலே பயிராகும் இனம்புரியாத மயக்கம், அவர்கள் உள்ளத்திலே நித்தியச் சோம்பலில் விளையும் மெலிவு, சிந்தனை போல் தோன்றும் கலக்கம், துயில் நாட்டின் சோம்பற் சூழ் நிலைக்குக் கட்டியம் கூறுவதுபோல், கனியும் மலரும் குலுங்கும் துயிற்செருந்திக் (லோடஸ்) கிளைகளை ஏந்தி வருகிறார்கள்.

வந்தவர்கள், துயிற்கனியை, கிரேக்க வீரர்களுக்குத் தருகிறார்கள். அந்த மாயக் கனியை உண்டதும், தின்றவரின் உயிர், மெலிந்த சுருதியில் இழையத் தலைப்படுகிறது. அருகிலே புரளும் கடலின் ஓசை, எங்கேயோ நெடுந் தொலைவில் உள்ள நாடு ஒன்றில் பேசும் அலைகளின் முனகலாகத் தோன்றுகிறது. பக்கத்திலே நண்பன் ஒருவன் ஏதோ சொல்கிறான். அவன் பேச்சு, சாவுக்கப்பால் என்ற தேசத்தில் அருவங்கள் தமக்குள்ளே பேசிக்கொள்ளும் ஒலி தேய்ந்த குரலைப் போல் இருந்தது. துயிற் கனியைத் தின்ற கிரேக்கர்கள் தூக்கத்தில் அழுந்தியவர்போல விழித்திருந்தார்கள். தூக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையே உள்ள பாதி உறக்கத்தில், அவர்கள் ஆழ்ந்தார்கள். மார்த்துடிப்பு காதில் இசையாகப் பெருகியது. அந்த அளவுக்கு, புலன்களால் ஏற்படும் வெளி உலகத் தொடர்பு கழன்றது (தொடரும்)

காஞ்சங்காடு ஆனந்தாசிரம நிர்வாகி எழுதுகிறார்:

மாதர்குல திலகங்கள் என்ற மகுடத்தின் கீழ் ஜூலை இருபத்தோராம் தேதி கல்கி இதழில் அன்னை கிருஷ்ணாபாயைப் பற்றியும் காஞ்சங்காடு ஆனந்தாசிரமத்தைப் பற்றியும் சில விவரங்கள் வெளியாகியுள்ளன. அவ்விஷயமாக "கல்கி" வாசகர்களின் மனத்தில் ஏற்பட்டுள்ள சில சந்தேகங்களை அகற்ற விரும்புகிறோம். மேற்படி ஆசிரமத்தில் முன்பு ஒரு சமயம் அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் புகலிடம் அளிக்கப்பட்டு வந்தது ஆனால் இப்போதெல்லாம் அத்தகையோரை ஆசிரமத்தில் எடுத்துக் கொள்வதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவ்வாறு எடுத்துக் கொள்வது பலனளிப்பதாகவும் இல்லை. விரும்பத்தக்கதாகவும் இல்லை. ஆத்மவிசாரம் செய்ய விரும்பும் பக்தர்களாயிருந்தாலும்கூட ஆசிரமத்திலேயே நிரந்தரமாக தங்கியிருக்க அனுமதிப்பதில்லை விரும்புகிறவர்கள் எல்லாரும் ஆனந்த ஆசிரமத்துக்கு வந்து இங்கேயே நிரந்தரமாகவோ, அல்லது நீண்ட காலமோ தங்குவது என்பது சாத்தியப்படாது. ஆத்மவிசாரத்தில் மனம் ஈடுபட்டுள்ளவர்கள் ஆசிரமத்தில் சில நாட்கள் வந்து தங்க விரும்பினால், அவர்கள் அன்புகூர்ந்து முன் கூட்டியே ஆசிரம நிர்வாகிக்கு எழுதி அவரது அனுமதி பெறவேண்டுகிறோம்.



...ஆம் அது ட்ரேயோபேனில் சுற்றப்பட்டுள்ளது

ட்ரேயோபேன்

ட்ரேயான்ஸ் ட்ரான்ஸ்பேரன்ட் தாளின் புதிய பெயர்

- ட்ரேயோபேன் உங்கள் சரக்குகளுக்கு அழகையும், கவர்ச்சியையும் அளிக்கிறது.
- ஒளி ஊடுருவிச் செல்லும் ட்ரேயோபேன் தாளின் மூலம் சரக்குகளைத் தெளிவாக பார்க்கலாம்.
- ட்ரேயோபேன் தூசி, தும்பு, எண்ணெய் படியாமல் சரக்குகளைப் பாதுகாக்கிறது
- அதன் பிரகாசமான நிறங்கள் விற்பனையைத் துரிதமாக்குகிறது.
- ஒரு ரீம் (ஒவ்வொன்றும் 30"×20" அளவுள்ள 500 தாள்கள் கொண்டது) ட்ரேயோபேன் விலை ரூ. 44-00.

சரக்குகளை ட்ரேயோபேனில் பாக் செய்து விற்பனையை அதிகரியுங்கள்! இலவச சாம்பிள் புத்தகத்திற்காக எங்களுக்கு எழுதுங்கள்.



கண்ணைக் கவருகிறது — விற்பனையை துரிதமாக்குகிறது!

தி திருவாங்கூர் ரேயான்ஸ் லிட்.,


பாக்டரி: ரேயான்புரம் போஸ்ட், கேரள ராஜ்யம்
ஸேல்ஸ் ஆபீஸ்: 2/6, செகண்ட் லேன் பீச், மதராஸ்-1



When He Whispered "You Look Lovely..."

I thanked my lucky stars I had discovered Max Factor Pan-Cake Make-Up. It's the fabulous make-up for flawless complexion beauty that makes heads turn and hearts throb! You'll be amazed at how much smoother and fresher your skin looks and feels with lanolin-enriched Pan-Cake Make-Up. And it's the perfect cover-up for ugly blemishes and minor skin imperfections. For that look of sheer glamor try Pan-Cake Make-Up today.

PAN-CAKE*
MAKE-UP



MAX FACTOR
HOLLYWOOD

* Pan-Cake (trademark) means Max Factor Hollywood cake make-up.

Available at all Cosmetic & General Stores

SOLE AGENTS IN INDIA


ORIENT COSMETICS PRIVATE LTD.

MADRAS - BOMBAY - CALCUTTA

சுலேகா

ரிஜிஸ்டர்டு
பேனாக்கள்

திருப்திகரமான
சேவைக்கு



Sole Distributors:

PENMAN'S INDUSTRIAL SERVICES

KANDIVLI, BOMBAY (S. D.)



சகிக்க முடியாத உபாதை: தூக்கமும் கிடையாது: சுகமான நித்திரைக்கும் உபாதை நிவர்த்திக்கும்

எப்ரிலைம்
EPHRILIME

U.D

நீண்ட காலப்பட்டதும், மிக்க உபாதை தரக்கூடியதுமான மார்ச்சளி, ஆஸ்த்மா முதலிய நோய்களுக்கு ஓர் சிறந்த ஹானியற்ற மருந்து.

யூனியன் டிரக் கம்பெனி லிமிடெட்.

மதராஸ் டிப்போ

2, ஜோன்ஸ் லேன் :: மதராஸ்-1

அத்தியாயம் 9

விருந்தில் விஷம்!

கண்ணபுரத்தை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருந்த தணிகாசலத்தின் மனம் முதல் நாள் மத்தியானம் நடந்த விருந்தை நோக்கிப் பிரயாணம் செய்தது: பார்க்கப் போனால் மிகவும் சாதாரண விஷயம்தான். நினைத்துக் கவலைப்பட வேண்டிய அளவுக்கு அதில் ஒன்றுமில்லை. என்றாலும் வாழ்க்கையில் அடிபட்டுப் பக்குவம் அடையாத தணிகாசலத்தின் மனத்துக்கு அது சிறிதளவும் தாங்க முடியாதபடி மனவேதனையைக் கொடுத்தது.

மத்தியானம் மூன்று மணிக்குச் சாப்பாட்டுக்கு இலை போட்டார்கள். அது வரையில் அங்கிருந்து சமையலுக்கு உதவி செய்த மங்களத்துப் பாட்டி, தன் வேலையை முடித்துக் கொண்டு மகள் வீட்டுக்கு வந்து விட்டாள். வீரம்மாள் பாட்டி முகத்தை இழுத்துக் கொண்டு



பாவை விளக்கு




மூலையில் உட்கார்ந்திருந்தாள். தன்னுடைய கிராமத்துக்கு ஆள் அனுப்பித் தன் பேரன் சங்கரலிங்கத்தையும் வரச் சொல்லியிருந்தாளாம் வீரம்மாள். அவனுக்காகக் காத்திருந்து விட்டு, வராததால், தங்கசாமியும் தணிகாசலமும் இலைகளுக்கு முன் உட்கார்ந்தார்கள்.

அத்தை ரங்கநாயகி பரிமாறினாள். சமையலும் முதல்தரமாக இருந்து, நாழிகையும் ஆகிவிட்டதால் மாமாவும் மருமகனும் சுறுசுறுப்பாகச் சாப்பாட்டுப் போட்டியில் இறங்கினார்கள். பருப்பும் சாம்பாரும் முடிந்தன. தணிகாசலத்தின் கண்களில் இதுவரை கௌரி படாமல் ஒளிந்து கொண்டிருந்ததால் அவனுக்கு அவளைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. மெல்ல அடுக்களைப் பக்கம் திரும்பினான். அங்கே தெரிந்த அவளுடைய சிரித்த முகம் அவன் கண்கள் பட்டவுடன் உள்ளே இழுத்துக் கொண்டது. திரும்பவும் எட்டிப் பார்த்துச் சிரித்தது.

இந்தச் சிறு காட்சி வீரம்மாளுக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்க வில்லை.

''கழுத்து கருக்கப் போகிறது: இலையைப் பார்த்துச் சாப்பிடு'' என்றாள்.

அகிலன்




சுருக்கென்று தைத்தது தணிகாசலத்துக்கு. மாமா இதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. மூன்றாவது வடையை அவர் முழுசாக உள்ளே தள்ளிக்கொண்டிருந்தார்.

கௌரி இப்போது வேண்டுமென்றே அவன் கண்களில் படும்படி எதிரிலே வந்து நின்று கொண்டாள். தணிகாசலமும் வேண்டுமென்றே அவளைப் பார்த்துச் சிரித்தான். வீரம்மாளுக்குச் சவால் விடுவதுபோலிருந்தது அந்தச் சிரிப்பு.

பொறுக்குமா அவளுக்கு? " ஆசை இருக்கு ராஜவாக, அதிர்ஷ்டம் இருக்கு ஆண்டியாக! உன்னைத் தாண்டாப்பா சொல்றேன்; நாலுபேர் நாலைச் சொல்லி, கல்யாணம் காட்சின்னு உன் மனசைக் கெடுக்கப் பார்ப்பாங்க. அதையெல்லாம் காதிலே போட்டுக்காமல் முதலில் அரை வயிற்றுக் கஞ்சிக்கு வழியைப் பார். நீங்க படுகிற கஷ்டம் பத்தாதுன்னு இன்னொருத்தி பாவத்தையும் கொட்டிக்காதீங்க. இப்பக் கல்யாணத்துக்கு உனக்கு என்ன அவசரம்?"

வாய்க்குள் போன சாதத்தை விழுங்க முடியவில்லை தணிகாசலத்தால். வெறுப்போடு கிழவியின் பக்கம் திரும்பினான். கிழவி அதைச் சட்டை செய்யவில்லை.

" பணம் பந்தியிலே, குணம் குப்பையிலே! நீயாச்சும் உன் அப்பாவைப் போல் அவந்தரைப் பிழைப்புப் பிழைக்காமல் சமர்த்தாய் நடந்து கொள். உன்அப்பாவைக் கட்டிக் கொண்டு உன் அம்மா என்ன சுகத்தைக் கண்டாள்? கௌரிக்கு நீ ஆசைப்பட்டால் அவளுக்கும் அந்தக் கதி





தான். — நீ படிப்பை இத்தோடு நிறுத்தினது சரி. பட்டாளத்துக்கு ஆள் எடுத்துக்கொண்டு இருக்காங்களாம். பேசாமல் அதில் போய்ச் சேர்ந்து முன்னுக்கு வா! சண்டைக்குப் போகிறவனெல்லாம் செத்தா போகிறான்? இல்லையே!''

வாய்க்குள்ளிருந்த சோறு வெளியில் நழுவாமலிருப்பதற்காக வெகு பாடுபட்டான் தணிகாசலம். கண்களில் நீர் முட்டியது. தங்கசாமி பக்கத்தில்தான் இருந்தார். ஆனால் அவர் மனம் இலையைச் சுற்றிக் கொண்டிருந்தது. சேமியாப் பாயச வெள்ளத்தில் அப்பளத்தையும் வடைகளையும் நொறுக்கிப் போட்டு ஒரு இழுப்பு இழுத்தார்.

சரேலென்று கௌரி பாய்ந்து வந்து பாயசப் பாத்திரத்தைக் கையிலெடுத்தாள். ''பாட்டி!'' என்று வீரம்மாளிடம் திரும்பி ஒரு அதட்டு அதட்டினாள். தணிகாசலத்தின் முன்னால் வந்து, ''பாட்டிக்கு வயசாகி விட்டது; எதையாவது பேசிக்கொண்டு போகட்டும்; நீங்கள் சாப்பிடுங்கள்'' என்று கரண்டியால் பாயசத்தை ஊற்றினாள். மறுக்க மறுக்கப் பிடிவாதமாய் இலையை நிரப்பினாள். தணிகாசலம் தன்னை மறந்து தன் மாமாவாக மாறினான்!

சாப்பாடு முடிந்து இருவரும் வெளித் திண்ணைக்கு வந்தார்கள். அரைக் கவுளி வெற்றிலைக்கு உலை வைத்து விட்டு, மாடத்தில் இருந்த சீட்டுக் கட்டை எடுத்துப் பிரித்தார் மாமா. அவரிடம் இந்தப் போலி கௌரவம் மரியாதையெல்லாம் கிடையாது. படித்த பிள்ளைக்குச் சீட்டு விளையாடத் தெரியாமலா இருக்கும்? ''ஒரு கை இறக்கலாமா? வருகிறாயா?'' என்று கேட்டு வைத்தார். தனக்குத் தெரியாதென்று ஒதுங்கிக் கொண்டான் தணிகாசலம். பிறகு பாய், தலையணை எடுத்துப் போட்டுக் கொண்டு நிம்மதியாகக் கட்டையை நீட்டிவிட்டார். இரண்டே நிமிஷத்தில் குறட்டையின் இனிய ஒலி எழும்பியது.

மாமாவைப் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது. கடவுள் இரும்பினால் வார்த்தெடுத்தது போன்ற அங்க




அவயவங்களை அவருக்குக் கொடுத்திருந்தார். ஆனால் தலைக்குள் வைக்க வேண்டிய பகுதியை மட்டிலும் வைக்க மறந்து விட்டார் போலும்! இரண்டு சாக்கு நெல் மூட்டைகளை இரண்டு கைகளாலும் தூக்கக் கூடியவர் தங்கசாமி. காலையில் பழையது சாப்பிட்டு விட்டு, வயல்காட்டுப் பக்கம் போனால் பிற்பகல் இரண்டு மூன்று மணிக்குத் திரும்புவார். விளைச்சல் இல்லாத காலங்களில் தெருத் திண்ணையில் சீட்டுக் கச்சேரி நடக்கும்—காசு வைத்து விளையாடாததால் தோல்வியால் அவருக்கு எந்த நஷ்டமும் கிடையாது. ஆட்டத்துக்குக் காலணா என்றால் கூட இன்றைக்கு அரைப் பங்கு சொத்து பறி போயிருக்கும். சீட்டாட்டத்துக்குக் கூட சுய சிந்தனை தேவைப் படுகிறதல்லவா?

சலங்கைச் சத்தத்துடன் தெரு வாசலில் பளபளப்பான ஒரு வில் வண்டி வந்து நின்றது. கம்பீரமான காளை மாடுகள் இரண்டு வாய்களில் நுரை தள்ளிக் கொண்டு காட்சி தந்தன. வீட்டுக்குள்ளே இருந்து வீரம்மாள் பாட்டி விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தாள். வண்டியிலிருந்து குதித்துத் திண்ணையை நோக்கி வந்தான் அவள் பேரன் சங்கரலிங்கம்.

"வாடாப்பா, சங்கர்! ஏன் இத்தனை நேரம்? உனக்காகப் பசியோடு காத்திருந்து உன் மாமா இப்பத்தான் சாப்பிட்டுப் படுத்துக் கொண்டார்."

மாமா எழுந்திருக்கவில்லை.

பையன் ஒரு விநாடி தணிகாசலத்துக்குப் பக்கத்தில் வந்து நாணிக் கோணிக் கொண்டு உட்கார்ந்தான். தணிகாசலத்தை விட அவனுக்கு இரண்டு மூன்று வயது குறைவாக இருக்கும். ஆனால் பணத்தின் செழுமையும் மினுமினுப்பும் அவனுடைய தேகத்தில் பரவி அவனைத் தோற்றத்தில் பெரியவனாக்கின. விரலுக்கு விரல் மோதிரம், காதில் கடுக்கன், கழுத்தில் மைனர் சங்கிலி, அவன் தலையைப் பின்னால் சீவி விட்டுக் கொண்டு பெண்மை கலந்த அழகுடன் விளங்கினான். கிளாஸ்கோ மல் சட்டைக்குள் வலைப்பனியன் தெரிந்தது. பட்டுக்கரை வேஷ்டியும், புதுச் செருப்புக்களும், சந்தன அத்தர் வாசனையும் அவன் பிறந்த இடத்துப் பெருமையைப் பறைசாற்றின.



சங்கரலிங்கத்தை உள்ளே அழைத்துக் கொண்டு போய் இலை போட்டாள் வீரம்மாள். தானும் அவன் அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

ஏனோ அந்த நிமிஷத்தில் பணத்தின் அருமையைத் தணிகாசலத்தால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. பணம் வாழ்க்கையில் மிக மிக முக்கியமான சாதனந்தான். பணம் இருந்திருந்தால் தகப்பனார் பரமசிவம் ஐந்து மைல் மழையில் நனைந்து போய்ச் சாவைத் தேடிக் கொண்டிருக்க மாட்டார். பணம் இருந்திருந்தால் இந்தப் பாழாய்ப் போன வீரம்மாளின் பழிச் சொல்லுக்கு ஆளாகாமலாவது இருந்திருக்கலாம்! பணமில்லாத வாழ்க்கை எவ்வளவு கேவலமான வாழ்க்கை?

உள்ளே வீரம்மாளின் குரல் கேட்டது.

"ஏண்டி கௌரி, என்னடி உனக்குப் புதுசா வெட்கம் வந்திடுச்சு? இந்த வெட்கத்தை அப்போ காணோமே? என்னை வந்து அதட்டினியே! வா, வந்து பரிமாறு. பின்னே ஊரிலேயிருந்து உன்னைப் பார்க்க ஆசையோடு வந்திருக்கான். வா, சொல்கிறேன்...."

தணிகாசலம் திரும்பிப் பார்த்தான். கௌரி அறையை விட்டு வெளியில் வரவில்லை. பாட்டி மறுபடியும் கூப்பிட்டாள்.

"ஏண்டி அம்மா! ஏன், உனக்கு இவனைக் கண்டால் பிடிக்கலையா? ஆள் என்ன அழகிலே குறைச்சலா, அந்தஸ்திலே குறைச்சலா? இல்லை, சொந்தத்திலே குறைச்சலா? நாளைக்கு இவனைத்தானே நீ கல்யாணம் பண்ணிக்கப்போறே! உம். சீக்கிரமா வாடி, இங்கே."

பளீரென்று ஒரு மின்னல் வெட்டியது தணிகாசலத்தின் மனத்தில். எத்தனை உறுதியுடன் இந்தக் கிழவி கௌரிக்கும் அந்தப் பையனுக்கும் முடிச்சுப் போட்டுப் பேசுகிறாள்? மங்களத்துப் பாட்டியின் எச்சரிக்கையில் சிறிதும் பொய்யில்லை. வீரம்மாள் மங்களத்தை மட்டிலுமா சாகச் சொல்லிக் காளிக் கோயிலுக்கு விளக்கு போடுவாள்; தன்னையே பட்டாளத்துக்குப் போகச் சொல்லும் புண்ணியவதியல்லவா அவள்!

தணிகாசலத்துக்கு அங்கே இருக்கப் பிடிக்கவில்லை. மெதுவாகத் திண்ணையை விட்டு இறங்கினான். அதற்குள் வீட்டுக்

குள்ளிருந்து அம்பெனப் புறப்பட்டு அவனிடம் ஓடி வந்தாள் கௌரி. தலையைக் குனிந்து கொண்டாள்; தயங்கினாள்; தடுமாறினாள். கடைசியில் தன் வெட்கத்தை விட்டு, ''நீங்கள் சண்டைக்குப் போய் விடாதீர்கள், அத்தான்!'' என்று கண்ணீர் மல்கக் கேட்டுக் கொண்டாள்.

தணிகாசலத்துக்குச் சிரிப்பு வந்தது. ''நான் போகவில்லை. நீ இங்கே நடந்ததைப் போய் அங்கே யாரிடமும் சொல்லி விடாதே. வீண் சண்டை வந்துவிடும்.''



உள்ளே வீரம்மாள் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தாள். கௌரி திரும்பவும் தன் வீட்டில் நுழையாமல் தணிகாசலத்தின் வீட்டுக்குச் சென்றாள். கௌரி அங்கு சென்றதால் தணிகாசலம் முன்போலவே திண்ணையில் உட்கார்ந்தான். அவனுக்கு, எங்கே தன் சொல்லையும் மீறி இதைக் கௌரி மங்களத்திடம் பற்ற வைத்து விடுவாளோ என்று பயம்.

பிறகு பாட்டியும் பாட்டியும் மோதிக் கொள்வார்கள்; அம்மாளும் அத்தையும் மோதிக் கொள்வார்கள்; மாமா வழக்கம்போல் நடுநிலைமை வகிப்பார். விஷயம் அத்துடன் போனாலும் தேவலாம். ஆனால் போகாது. மங்களத்துப் பாட்டி திடீரென்று தன் கையில் ஒரு தாலிச் சரட்டைக் கொண்டு வந்து கொடுத்து, கௌரியைக் கொண்டு வந்து முன்னால் நிறுத்தி, உடனடியாகத் தாலி கட்டச் சொன்னாலும் சொல்லுவாள்!

ரயிலில் கண்ணபுரத்தை நெருங்கிக் கொண்டிருந்த தணிகாசலத்துக்கு, பொன் வயலை விட்டு வெகுதூரம் வந்தவுடன், கௌரி ஒரு பிரச்னையாகத் தோன்றவே இல்லை. கௌரியின் கல்யாணம் என்பது அவனுக்கு முக்கியமில்லை. எந்தப் பெண்ணையுமே கல்யாணம் செய்து கொள்ளும் நிலையிலும் அவன் இல்லை. எதிர்பாராத போட்டி ஒன்று முளைத்ததால் அவனுக்கு ரோஷம் பொங்கியது. அவ்வளவுதான்!

வீரம்மாள் பாட்டி அவனை மாத்திரமா அவமதித்தாள்? அவன் தாயை, தந்தையை, குடும்பத்தையே அவமதித்தாள். இந்தச் சிறுமை அவனை மிகவும் வாட்டி யெடுத்தது.

ஏழைமையை அவன் பொறுத்துக் கொள்ளத் தயார். ஆனால் அதனால் ஏற்பட்ட அவமானத்தை அவனால் பொறுக்க முடியவில்லை. தனக்குள் பொங்கிக் கொண்டு வந்த கோபமென்னும் நெருப்பால் இந்த உலகத்தின் வறுமைத் துன்பத்தையே சுட்டெரிக்கத் துடித்தான் தணிகாசலம். எதை எதையோ இந்த உலகத்தில் பாவமென்று சொல்கிறார்கள். ஆனால் ஏழையாக இருப்பதைப் போலப் பாவம் வேறெதுவுமே இருக்க முடியாது.

பெண்கள் எக்கேடு கெட்டுப் போகட்டும்; கௌரியாக இருந்தாலும் சரி, தேவகியாக இருந்தாலும் சரி, அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி. காதலாவது, கல்யாணமாவது, கத்திரிக்காயாவது! முதலில் ஆண்பிள்ளை தேடிக்கொள்ள வேண்டியது காசு, காசு! காசு கிடைத்தால் பிறகு எல்லாமே கிடைத்து விடும்.

கண்ணபுரத்தில் இறங்கி, சுப்பையாவின் வீட்டுப் படியில் காலெடுத்து வைத்தவுடன் ஓடி வந்து அவன் கையிலிருந்த பெட்டியை வாங்கினாள் தேவகி. அவளையும் அவள் தாயாரையும் தவிர வீட்டில் வேறு யாருமில்லை. தாயார் மட்டும் முன்போலவே படுக்கையோடு படுக்கையாய்க் கிடந்தாள்.

''நான்தான் உனக்குத் தந்தி கொடுத்தேன். அண்ணா வெறும் கடிதம் எழுதிப் போடச் சொன்னார். கடிதம் எழுதினால் நீ வரமாட்டாய் என்று தெரியும். நாளைக்கு அவர் வந்து கேட்டால் கடிதம் வந்ததாய்ச் சொல்.''

''அண்ணா ஊரில் இல்லையா?''

''வெளியூருக்குப் போயிருக்கிறார். நாளைக்குக் காலையில் வந்து விடுவார்!''

''இன்னும் ஒரு மணி நேரத்தில் நான் புதுப்பட்டிக்குப் புறப்பட வேண்டும். தந்தி கொடுத்த காரணம் என்ன? விவரத்தைச் சொல்லுங்கள்.''

தேவகி அவனுடைய அவசரத்தைக் கண்டு நகைத்தாள். ''நீ எந்தப் பட்டிக்கும் இப்போது போக முடியாது; எப்போதுமே போக முடியாது'' என்று அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லி, ''பேசாமல் உள்ளே வந்து உட்கார்'' என்று நாற்காலியைக் காண்பித்தாள்.

மறுக்க முடியாத ஆணை போல் தணிகாசலத்துக்குத் தோன்றியது. 'பணிந்துவிடக் கூடாது' என்று நினைத்துக்கொண்டே நாற்காலிக்குச் சென்றான்.

அத்தியாயம் 10

செங்கமலம்

தேவகியும் விட்டுக் கொடுக்கவில்லை; தணிகாசலமும் பணிந்து கொடுக்கவில்லை. அவனுடைய வற்புறுத்தலுக்காக அன்றைக்கு அங்கே தங்கி, மறுநாள் காலையில் சுப்பையா வந்தவுடன் சொல்லி விட்டுப் புறப்பட நினைத்தான். தேவகி அவனிடம் அழாக் குறையாக மன்றாடி, மேல் படிப்பை அங்கிருந்து கொண்டே தொடர்ந்து நடத்தச் சொன்னாள். தணிகாசலம் கேட்கவில்லை.

" புதுப்பட்டியில் எனக்கு வேலை கிடைத்திருக்கிறது. அதை நான் ஒப்புக் கொள்ள வேண்டும். பொன் வயலில் என் தாயாரையும் தங்கையையும் விட்டு வைத்திருக்க விருப்பமில்லை. நான் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியது என் பொறுப்பு."

இதைத் தேவகி நம்பவில்லை.

" என்னால்தான் நீ இப்படி உன்னை மாற்றிக் கொண்டிருக்கிறாய் " என்றாள் தேவகி. " என்னை உனக்குச் சரியாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. நான் உன் வழிக்கே இனி வரமாட்டேன். நீ படிக்காவிட்டால் உனக்கு நான் தீங்கு செய்து விட்டதாக இந்த உயிருள்ள வரையில் நினைத்து அவதிப்படுவேன். என்னிடம் இரக்கம் காட்டு."

" உங்களுக்கும் என் முடிவுக்கும் சம்பந்தமே இல்லை " என்று அடித்துக் கூறினான் தணிகாசலம். " இல்லாத ஒன்றைக் கற்பனை செய்துகொண்டு நீங்களே உங்களை வருத்திக் கொள்ளாதீர்கள்."

தன்னையே தான் நம்பவில்லை என்பதை எப்படி அவளிடம் சொல்வது? உலகமறியாத பிள்ளையாக, கள்ளமில்லாத வெள்ளை மனம் கொண்டிருந்த அவன் உள்ளத்தில் ஒரு சிறு கீறல் விழுந்து விட்டதை எப்படி அவளிடம் தெரிவிப்பது? கீறல் விழுந்துவிட்ட இசைத்தட்டு திரும்பத் திரும்ப ஒரே வரியைப் பாடுவது போல், தன் மனம் அடிக்கடி அந்த நிகழ்ச்சியையே அல்லவா எண்ணி எண்ணிப் பார்க்கிறது!

இரவில் நீண்ட நேரம் அவர்களுக்குள் வாக்குவாதம் நடந்தது. தணிகாசலம் பிடிவாதமாக மறுத்து விட்டான். மறுநாள் காலை திரும்பிய சுப்பையாவிடமும் தேவகியிடம் சொல்லியதையே கூறி நம்ப வைத்தான்.

"விரைவில் சமஸ்தானத்தில் எனக்கொரு வேலை தேடித் தாருங்கள், அண்ணா! அது வரையில் நான் புதுப்பட்டி வேலையைப் பார்க்கிறேன்" என்று கூறித் தணிகாசலம் பிடிவாதமாகப் புதுப்பட்டிக்குப் புறப்பட்டு விட்டான்.

புதுப்பட்டிக்கு அவன் அடிக்கடி இதற்கு முன்பு போனதில்லை. எப்போதாவது தேர்த் திருநாள், கோடை விடுமுறை, சித்தப்பா வீட்டு நிகழ்ச்சிகள் இவற்றுக்குச் சென்று நாலு நாட்களோ ஒரு வாரமோ தங்கியிருக்கிறான். ஒரு வாரத்துக்கு மேல் அந்த ஊரில் படித்த பையன்களுக்குத் தங்குவதற்குப் பிடிக்காது. ஆனால் தணிகாசலத்துக்குத் தன்னையறியாத பற்றுதல் அந்த மண்ணிடம் இருந்தது. ஊரில் மழை பெய்தால், குளங் குட்டைகளில் நீர் நிரம்பி, பயிர் பச்சை செழித்து, கால் நடைகள் துள்ளி விளையாடி, பார்ப்பதற்குப் பரவசமாக இருக்கும். கிராமவாசிகளும் நிமிர்ந்த நடையுடன் சிரித்துப் பேசுவார்கள். மழை பெய்யா விட்டாலோ நெருப்பால் பொசுங்கிய பாலைவனக் காட்சிதான். செம்புழுதி பறந்துபோய் வீட்டுக் கூரைகளிலும், மரம் மட்டைகளிலும், மனிதர் முகங்களிலும் ஒட்டிக் கொண்டு பரிதாபத் தோற்றம் கொடுக்கும். கண்ணபுரம் சமஸ்தானமே வானம் பார்த்த பூமி. ஒரு வருடம் மழை பெய்தால் மறு வருடம் பெய்யாது. இந்த வருடம் வானம் கருணை காட்டியதால் புதுப்பட்டி தன் அழகையெல்லாம் வெளிப்படுத்திக் கொண்டு தணிகாசலத்தைப் புன்னகை பூத்த முகத்துடன் அன்புடன் வரவேற்றது.

சித்தப்பாவும் சிறியதாயாரும் அவன் வரவால் மகிழ்ந்தார்கள். அவர்களுடைய நான்கு குழந்தைகளும் அவனைச் சுற்றி ஆட்டம் போட்டன. நெல் விளைந்து களஞ்சியம் நிரம்பியதால் தணிகாசலத்தின் வருகை அவர்களுக்குப் பாரமாகத் தோன்றவில்லை.

மத்தியானச் சாப்பாடு முடிந்தவுடன் சித்தப்பா அவனிடம் கூறினார் :

" உனக்கு மேற்கொண்டு பண உதவி செய்து படிக்க வைக்க வேண்டுமென்று எனக்கு ஆசை. ஆனால் நிலைமை இடம் கொடுக்கவில்லை. இப்போதைக்குக் கண்டிராக்டர் கண்ணுச்சாமியிடம் கணக்கு வேலை பார்த்துக் கொண்டிரு. இருபது ரூபாய் தருவார். அதை நீ வீட்டுக்கு அனுப்பலாம். சமஸ்தான வேலை கிடைத்தவுடன் குடும்பத்தை அழைத்து வைத்துக் கொள். கண்டிராக்டர் கண்ணபுரத்துக்குப் போயிருக்கிறார்! நாளைக்கு அவர் வந்தவுடன் வேலை ஒப்

யுக் கொள்ளலாம். தினம் இரண்டு மூன்று மணி நேரம் கணக்கு எழுதினால் போதும்'' என்று நினைக்கிறேன்.

மாலையில் கிராமத்தைச் சுற்றி உலவி வரக் கிளம்பினான் தணிகாசலம்.

ஊருக்கு மத்தியில் சிவன் கோயில் தெற்கு வாசலை ஒட்டினாற்போலிருந்தது. அவனுடைய சித்தப்பாவின் வீடு. பழைய காலத்துத் தார்சுக் கட்டடம். முன்னால் தாழ்வாரத்துக்கு ஓடு வேய்ந்திருந்தார்கள். பெரிய பெரிய திண்ணைகளும், அறைகளும், கூடங்களுமாக ஒரே குடும்பமாய் முதல் தலைமுறையில் சேர்ந்து வாழ்ந்த வீடு. பெருங்காயம் இருந்த பாண்டம்; செல்வம் கொழித்த பேழை. இப்போது பாண்டத்தில் பெருங்காயம் இல்லை; வாசனை மட்டிலும் மிஞ்சி நின்றது. பொன்வயலைப் போல் இல்லாமல் இந்தக் கிராமத்தில் தணிகாசலம் கோயில் தர்மகர்த்தா வீட்டுப் பிள்ளை என்ற கர்வத்துடன் தலைநிமிர்ந்து நடக்கலாம். கிராமவாசிகள் அவனுக்கு மரியாதை செய்தார்கள்.

அந்தத் தெருவில், அவனுடைய சித்தப்பாவின் வீட்டை ஒட்டினாற் போல், புதிய மாடி வீடு ஒன்று முளைத்திருந்தது. மற்ற வீடுகளில் எந்த மாற்றமும் இல்லை. பொதுவாக, அங்கு பல இசைவேளாளர் குடும்பங்கள் வாழ்ந்தன. பலர் குடியும் குடித்தனமுமாக விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள். சிலர் கோயிலுக்கு அடிமைப்பட்டுச் சம்பளத்திலும் மானியத்திலும் வாழ்ந்தார்கள். கோடி வீட்டுக் குப்புசாமி என்ற வாலிபன் காலையிலும் மாலையிலும் மேளம் கற்றுக் கொள்வதாக நினைத்துக் கொண்டு அந்தத் தெருவையே அதிர அடித்துக் கொண்டிருந்தான்.



தணிகாசலம் கோயிலுக்குப் பின்புறம் இருந்த தாமரைக் குளத்தைச் சிறிது நேரம் வேடிக்கை பார்த்து விட்டு, வயல் வரப்பெல்லாம் சுற்றிக் கொண்டு வந்தான். பச்சைப் பசேலென்ற வயல்களுக்கப்பால் பயிர்களுக்குப் பால் சுரக்கச் செய்த ஏரிக்கரைகள், தண்ணீர்த் தாயின் மார்பகங்களைப் போல் விம்மிப் பூரித்திருந்தன. அந்தக் கரைகளில் நடந்து விளிம்பைத் தொட்டு நிற்கும் புது மழைத் தேங்கலையும், அதனுடன் விளையாடிக் களித்த கொக்கு, நாரை முதலிய நீர்ப்பறவைக் கூட்டத்தையும் அவன் கண்டு களித்தான். ஏரிக்கரையில் நின்று பார்த்தபோது அவன் வீட்டுக்குப் பக்கத்திலிருந்த சிவன் கோயில் கோபுரம் தெரிந்தது.

அந்தக் கிராமத்து மண்ணும், காற்றும், மழையும், பயிர் பச்சையும், கோயில் கோபுரமும் அவனுக்குள் ஏதோ இனம் புரியாத நினைவுகளையெல்லாம் எழுப்பி விட்டன. தங்களிடம் ஓர் ரகசியச் செய்தி மறைந்து கிடப்பது போலவும், அதை அவனிடம் சொல்வதற்கு அவைகள் ஆசைப்படுவது போலவும் அவனுக்குத் தோன்றின. ஆனால் என்ன செய்தி என்பது அவனுக்குப் புலனாகவில்லை. நாள்தோறும் அவற்றுடன் பழகி, தன்னாணத்தைப் போக்கி, மெல்ல அந்த ரகசியத்தைத் தெரிந்து கொள்ள விரும்பினான்.

மறு நாள் அவனைக் கண்டிராக்டர் கண்ணுச்சாமி தம்முடைய வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய் அவன் எழுத வேண்டிய கணக்குகளை விளக்கினார். வேலை ஒன்றும் கடினமாக இல்லை. ஆனால் அந்த வேலையின் நிலைமை தான் அவனுக்கு ஒரு மாதிரி கசப்பைத் தந்தது. கசப்பைப் பார்த்தால் இருபது ரூபாய் ஊதியம் கிடைக்குமா?

கண்ணுச்சாமிக்கு விவசாயம், கள்ளுக் கடைக் குத்தகை, சமஸ்தான 'காண்டிராக்ட்' சில்லறை லேவாதேவி- இப்படிப் பல வேலைகள். சமஸ்தானத்துக்குள் அப்போது மதுவிலக்குச் சட்டம் நுழையவில்லை. வெளியூர்க்குடிகாரர்கள் பலர் ஐந்து மைல் — பத்து மைல் நடந்து வந்து கும்மாளம் அடித்தார்கள். யாருக்கும் இல்லையென்று சொல்லாமல் வழங்கினார் கண்ணுச்சாமி. லேவாதேவி விஷயத்திலும் அவர் தாராளந்தான். ஐந்து கொடுத்துப் பத்துக்கு நோட்டு எழுதி வாங்கிக் கொள்வார்; ஐம்பது கொடுத்து நூறுக்கு வாங்கிக் கொள்வார்; வட்டியை எடுத்துக் கொண்டது போக நாலோ—நாற்பதோ அவர்களுக்

குப் போய்ச் சேரும். இதற்கெல்லாம் கிராமத்தார் முணுமுணுக்க மாட்டார்கள். திரும்பவும் பணம் கொடுக்க முடியா விட்டால் மாடுகளை ஓட்டி விடுவார்கள்; அல்லது நிலத்தை எழுதிக் கொடுத்து விட்டு அதே நிலத்தில் அவரிடம் வந்து கூலி வேலை செய்வார்கள்.

"நாய் விற்ற காசு குரைக்கவா செய்யும்?" என்ற அவருடைய வாதத்தை அப்படியே ஏற்றுக் கொண்டு கணக்கு எழுதி வந்தான் தணிகாசலம். அவனிடம் அவர் பிரியமாக நடந்து கொண்டார். தவிரவும் ஊருக்கெல்லாம் மொந்தைக் கள்ளைக் கொடுத்த அவர், ஒரு சொட்டுக் கூடத் தம்முடைய பல்லில் ஊற்றிக் கொள்வதில்லை.

"தம்பி! பி. ஏ. படிச்சிட்டு இந்த வேலைக்கு வந்தோமென்று கவலைப் படாதே. என்கிட்டேயே வேலை பார்த்தால் சீக்கிரம் முன்னுக்கு வரலாம். உனக்குக் கல்யாணம் காட்சின்னு சொன்னா அப்போ தேவையானதைக் கடனாகக் கொடுக்கிறேன். மெள்ளக் கடனைக் கட்டு. நீ எங்கே ஓடிப்போறே?"

"கல்யாணமும் வேண்டாம்; கடனும் வேண்டாம்" என்றான் தணிகாசலம்.

"சே! அப்படிச் சொல்லாதே. மற்றவங்களுக்குக் கொடுக்கிற மாதிரி உனக்குப் பாதிப் பணம் தரமாட்டேன். நீ நம்ப பிள்ளை. நாணயத்தைச் சேர்க்கணும்னு நாணயக் குறைவாகத்தான் நடந்து கொள்ள வேண்டியிருக்கு. ஆனால் எல்லா இடத்திலேயும் அப்படி இருக்க மாட்டேன்."

தணிகாசலத்துக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் முதலாளி என்பதால் அதை அடக்கிக் கொண்டான்.

மற்றப்படி அவனுக்கு வீட்டிலும் வெளியிலும் புதுப்பட்டி வாழ்க்கை இன்பகரமாகவே இருந்தது. சிறிய தாயார் தன் குழந்தைகளைப் போலவே அவனைப் பாவித்து நடத்தினாள். அவளுடைய குழந்தைகள் அவள் பேச்சைக் கேட்பதில்லை; ஆனால் தணிகாசலம் கேட்டு நடந்தான். இதில் அவனிடம் அவளுக்குத் தனிப் பிரியம்.

அவள் பேச்சைக் கேட்பதில் யாருக்குமே சிரமம் இருக்காது. வாரத்துக்கு இரண்டு முறை எண்ணெய் தேய்த்துக் கொள்ள வேண்டும்; நாளுக்கு பார்க்காமல் நிறையச் சாப்பிட வேண்டும்; மாதம் ஒரு முறை விளக்கெண்ணெய் சாப்பிட வேண்டும். இந்தக் கடைசி விஷயத்தில்தான் தணிகாசலம் தன் விருப்பத்துக்கு விரோதமாக உடன்பட்டான்! ஒரே வாரத்தில் தான் கொண்டு வந்திருந்த புத்தகங்களையெல்லாம் படித்துத் தீர்த்தான் தணிகாசலம். ஒரு புத்தகத்தில்சாமியார் ஒருவர்எழுதியிருந்தபடி வாழ்க்கையை நடத்தவும் முடிவாயிற்று. சோப்பு போட்டுக் குளிப்பதற்குப் பதிலாகப் புற்று மண்ணை உடம்பில் தேய்த்துக் குளிக்கச் சொல்லியிருந்தார் அந்த சுவாமிகள். இன்னும் பஸ்கி, தண்டால், தலைகீழ் நிற்றல், மூக்கைப் பிடித்தல், வயிற்றைச் சுற்றுதல் முதலிய விவகாரங்களுக்கும் போதிய பொழுது இருந்தது.

பத்தே நாட்களில் அவன் கொண்டு வந்திருந்த புத்தகங்கள் யாவும் தீர்ந்து விட்டன. சிறிய தாயார் வைத்திருந்த பெரிய எழுத்து மதனகாமராஜன் கதை, சிறிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை, புலந்திரன் களவுமாலை, அல்லி-அர்ச்சுனன் லீலை முதலிய நூல்கள் எல்லாம் அவனுடைய படிப்பாகிய யானைப் பசிக்கு இரண்டு நாட்களுக்குக் கூடக் கட்டி வரவில்லை. 'இனி எங்கே போய் இரவல் வாங்குவது?' என்று யோசிக்கத் தொடங்கினான் தணிகாசலம்.

இரவல் வாங்குவதற்கு அந்த ஊரில் வழியில்லை என்று தெரிந்ததால், சோர்வுடன் ஒருநாள் மத்தியானம் திண்ணையில் சாய்ந்து கொண்டே அல்லியையும் அர்ச்சுனனையும் பற்றி நினைத்தான். அல்லியின் அழகும், சாகசமும், மிடுக்கும் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தன. அர்ச்சுனன் கொடுத்துவைத்தவன்தான்!

"தர்மகர்த்தா ஐயா இல்லீங்களா?" என்று கேட்டுக் கொண்டே வந்து உட்கார்ந்தார் தபால்காரக் கிழவர்.

தணிகாசலத்துக்குத் தபால்காரக் கிழவரின் கையிலிருந்த தபால் கட்டைக் கண்டவுடன் உற்சாகம் பிறந்தது. அந்தக் கட்டிலிருந்து நாலைந்து பத்திரிகைகளை எடுத்துத் தனியே வைத்தார் கிழவர். அத்தனையும் சென்னையிலிருந்து வெளிவரும் மாத-வாரக் கதைப் பத்திரிகைகள். 'சித்தப்பா பத்திரிகை கூட வரவழைக்கிறாரா?' என்று நினைத்து ஆச்சரியப்பட்டான்.

ஆனால் என்ன ஏமாற்றம்! ஒரு பத்திரிகையைக் கூட அவனிடம் கொடுக்காமல் ஒரே ஒரு கார்டை எடுத்து அவனிடம் நீட்டினார். அதுவும் அவனுடைய சித்தப்பாவுக்கு வந்த கார்டு.

இரவல் ஆசை அவனுடைய பிடரியைப் பிடித்து உந்தியது. "யாருக்கு இவ்வளவு பத்திரிகையும்?" என்றான்.

"அடுத்த வீட்டுக் குட்டி செங்கமலத்துக்கு. கண்ணபுரத்திலிருந்து அவள் இங்கே வந்தால், தபாலும் அவளைத் தேடிக் கொண்டு வரும். அவள் அங்கே போனால் தபாலும் அவள் பின்னால்

போகும். வந்து நாலைந்து நாட்கள் ஆகிறதே, தெரியாதா?'' என்றார் கிழவர்.

தணிகாசலத்துக்கு வியப்பு தாங்க வில்லை. ''பத்திரிகை படிக்கும் பெண் கூடவா இந்த ஊருக்கு வந்திருக்கிறாள்? எனக்கு இங்கே பொழுது போகவே இல்லை. ஏன், தாத்தா, இவ்வளவையும் நாளைக்குக் கொண்டுபோய் அவளிடம் கொடுங்களேன். ஒரே மூச்சில் முடித்து விட்டுத் தருகிறேன்.''

தாத்தா கேலியாகச் சிரித்தார்.

''நான் ஒழுங்காய் வேலை பார்க்கிறது உங்களுக்குப் பிடிக்க வில்லையாக்கும். விஷயம் தெரிந்தால் எனக்குச் சீட்டு கிழிந்து போகும். நீங்களே அவளிடம் கேட்டு வாங்கிக் கொள்ளலாம். இந்தக் கிழவன் கையால் வாங்குகிறதை விட அந்தக் குமரி கையால்...''

''போங்கள், தாத்தா!''

''இல்லா விட்டால் பணம் கட்டினால் உன்னைத் தேடித் தன்னால் வருகிறது.''

தணிகாசலம் உதட்டைப் பிதுக்கினான். முதல் மாதச் சம்பளமே இனி மேல்தான் வரப்போகிறது. எப்போது பணம் வந்து, எப்போது கட்டி, எப்போது படிப்பதாம்?— கிழவர் தன் உயிரையே சுமந்து கொண்டு போய், தான் கண்ணால் காணாத அந்த அடுத்த வீட்டு யமனிடம் ஒப்படைப்பது போல் இருந்தது. காசு கொடுத்து வரவழைக்கிறவர்களுக்கு இல்லாத 'ஓசி' வாசகர்களின் வழக்கமான உரிமை அது!

உடனே தன் சித்தியின் மூலமாக அந்த அடுத்த வீட்டு யமனைக் காக்காய் பிடித்துக் கொள்ள அவன் திட்டமிட்டான். அவள் முகத்தைக் கூட அவன் பார்க்கத் தயாரில்லை. இனி இந்த ஜன்மத்துக்கு எந்தப் பெண்ணின் வம்புமே வேண்டாம். ஒரு பெண் தன் படிப்பைக் கெடுத்தாள். இன்னொருத்தி சொந்தக்காரர்களுக்குள் கலகம் ஏற்படக் காரணமாக இருக்கிறாள். புத்தகம் எழுதிய சுவாமிகள் பெண்களின் நினைவையே களைந்து எறிந்து விட வேண்டுமென்கிறார். இந்தப் பெண் என்னும் அடுத்த வீட்டு மாயை, பத்திரிகைகளை இரவல் கொடுத்தால் போதும். அதிலும் சின்னம்மாவின் மூலமாகக் கொடுத்தாலே வாங்கிக் கொள்வது!

திண்ணை ஓரத்துத் திண்டுச் சுவரில் சாய்ந்து கொண்டு மேலே முகட்டு வளையைப் பார்த்தான் தணிகாசலம். இருபது ரூபாய்க்கும் பத்திரிகைகளே வாங்கி விடுவதென்ற ஆவேசம் அவனுக்கு.

பின்னால் பூங்குயில் ஒன்று இனிய குரல் எடுத்துக் கூவுவது போல் கேட்டது.

''இந்தாருங்கள்!''

அவன் திரும்பவில்லை. பூங்குயிலாவது மண்ணாங்கட்டியாவது!

''இந்தாருங்கள், உங்களைத்தான்!''

தணிகாசலம் மெல்லத் திரும்பினான்; திகைப்புண்டான்; பிறகு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான். அவனுடைய கண்களை அவனால் நம்ப முடியவில்லை. உண்மையிலேயே நம்ப முடியவில்லை!

பூங்குயில் இல்லை அது; தோகை மயில்! இல்லை, இல்லை, குயிலும் மயிலும் கலந்த ஓர் அற்புதப் பெண் பிறவி. 'மயில் குயிலாச்சுதடி!' என்று ராமலிங்க சுவாமிகள் பாட வில்லையா? அந்தப் பாட்டு ஓர் உருக் கொண்டு அவன் முன்னே வந்து நிற்கிறது.

பேச நா எழவில்லை தணிகாசலத்துக்கு. தர்மசங்கடப்பட்டுத் தலையைக் குனிந்து கொண்டான். ஆனால் பார்க்க வேண்டும் போலவும் தோன்றியது.

பத்திரிகைகளை அவனிடம் நீட்டி, ''படித்து விட்டு மெதுவாய்க் கொடுங்கள்; தபால்காரத் தாத்தா சொன்னார்'' என்று நிதானமாகக் கூறினாள்.

தணிகாசலத்தின் இரண்டு கரங்களும் நீண்டன. நான்கு கண்கள் சந்தித்தன. அவள் மெல்லத் தன் மேல்உதட்டின் கோணம் நெளியச் சிரித்தாள். தணிகாசலத்துக்குச் சிரிக்கத் தெரியவில்லை. அவனுக்குக் 'குப்' பென்று வேர்த்தது. கரங்கள் லேசாக நடுங்கின.

அவள் மெல்லத் திரும்பி நடந்தவுடன், தைரியமாக அவள் முதுகுப் புறத்தை ஏறிட்டுப் பார்த்தான் தணிகாசலம். வண்ண மயில் போலவே அவள் நிதானமாக நடந்தாள். மயிலைப் போன்ற நெடிய உருவம், மெல்லிய கழுத்து, மயில் கழுத்து நிறத்தில் வெல்வெட் ஜாக்கெட், செந்தாழம்பூ நிறத்தில் பட்டுப் புடவை....அது என்ன முதுகில் அடர்த்தியாக நெளிந்து புரள்வது பின்னல் சடையா? அல்லது கருநாகப் பாம்புகள் பிணைந்து முழங்கால் வரை தொங்குகின்றனவா? எத்தனை அடர்த்தி! எத்தனை கருமை! எத்தனை நீளம்!

தணிகாசலம் பார்த்துக் கொண்டே நின்றான். அவள் சட்டென்று ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டு, அவனுடைய நிலையை அறிந்து கொண்டவள் போல் ஒரு கணம் தாமதித்து நின்று, பிறகு வேகமாய்த் தன் வீட்டுக்குள் சென்று மறைந்து போய் விட்டாள்.

அவள் கண்களை விட்டு மறைந்த பிறகே தணிகாசலத்துக்குச் சுவாமிகள் தமது புத்தகத்தில் எழுதியிருந்த அரிய உபதேசங்களெல்லாம் ஞாபகத்துக்கு வரத் தொடங்கின. (தொடரும்)

பாருங்கள்!

ஒரு 'கோடக்' காமிரா உபயோகிப்பது

மிதமான விலையுள்ள இந்த உயர்தர 'கோடக்' காமிராக்களில்

இந்த சேர்த்தியான 'கோடக்' காமிராக்களில் எதைக் கொண்டும் அழகான படங்களை எடுக்கலாம். கீழ் கூறியவாறு செய்யவும்:

1. எடுக்கப்போகும் காட்சியின் பிரதிபிம்பத்தை வியூபைண்டரில் பார்க்கவும்
2. காட்சியிலிருந்து குறைந்தது 6 அடி தூரத்தில் நிற்கவும்
3. பித்தானை மெதுவாக அழுத்தவும்



வீட்டிற்குள் படங்கள் எடுக்கவோ அல்லது பகட்டான வர்ணப்படங்கள் எடுக்கவோ, ஒரு பிளாஷ்ஹோல்டரைப் பொருத்தி, பல்பை மாட்டி, குறிபார்த்து மேற்கூறியவாறு படம் எடுக்கலாம். எவ்வளவு சுலபம் பாருங்கள்! கோடக் கம்பெனியார் மிதமான விலையுள்ள பலதரப்பட்ட அற்புதமான காமிராக்களை வழங்குகிறார்கள். இங்கு ஒரு சிலவையே காண்பிக்கப்பட்டுள்ளன. எந்த கோடக் வியாபாரியிடமும் இன்னும் எத்தனையோ இனங்களைக் காணலாம். உங்களால் கொடுக்கக்கூடிய விலைக்கு உங்கள் தேவைக்குத்தகுந்த காமிராவைத் தேர்ந்தெடுக்க அவர் உதவி புரிவார்!


ப்ரௌனி 'க்ரெஸ்டா' காமிரா போர்ட்ரெய்ட் எடுக்க க்ளோஸ்-அப் லென்ஸ், வெளிப்புறக் காட்சிகளை சேர்த்தியாக எடுக்க பில்டர், ப்ளாஷ் இணைக்க வசதி, இம்மூன்று விசேஷ அம்சங்களுள்ள இந்த அழகிய காமிரா கொண்டு எவ்வித காட்சிகளையும் எளிதில் சேர்த்தியாக படம் எடுக்கலாம்.

விலை	ரூ. 31/8
கேஸ்	ரூ. 5/12
ப்ளாஷ்ஹோல்டர்	ரூ. 31/-

'ப்ரௌனி' 127 காமிரா | **ஸிக்ஸ்-20**



கைக்கு அடக்கமாயிருப்பதற்கு விலையுயர்ந்த மினியேச்சர் காமிரா போல் உருவாக்கப்பட்ட இதைக் கொண்டு சேர்த்தியான படங்களை சுலபமாக எடுக்கலாம். இதற்கு ஒரு ஐ-லெவல் வியூபைண்டர் உள்ளது. இது தூக்கிச் செல்வதற்கு இலேசானது. கழுத்தில் மாட்டிக்கக்கூடிய பின்னிய கயிறு உள்ளது. விலை .. ரூ. 18/12
கான்வஸ் கேஸ் .. ரூ. 3/8



விலைகளில் விற்பனை வரி அடங்கவில்லை

நல்ல தெளிவான படங்கள் எடுக்க 'கோடக்'

மிகவும் எளிது!


ஒன்றை வாங்குங்கள்



'ப்ரௌனி' காமிரா, மாடல் I

உலகெங்கும் நன்மதிப்புப் பெற்ற ஃபிக்ஸ்-20 'ப்ரௌனி' காமிராக்கள் நான்கு அற்புதமான மாடல்களில் உள்ளன! இந்த காமிராக்கள் ரூ. 28/-லிருந்து மேற்கொண்டு உயர்ந்த விலைகளிலும் கிடைக்கும். மூன்று மாடல்களில் பிளாஷ் இணைக்க வசதிகளும் க்ளோஸ்-அப் லென்ஸுகளும் உள்ளன. இரண்டு மாடல்களில் மஞ்சள் பில்டர்கூட உள்ளது.

'ப்ரௌனி' ரிப்லெக்ஸ் காமிரா



இந்த இரட்டை-லென்ஸ் காமிராவின் மிகப் பெரிய வியூபைண்டர், காட்சிகளின் பிரதிபிம்பத்தைத் திட்டத்திட்ட விழப்போகும் படத்தின் அளவில் காண்பிக்கும். வீட்டிற்குள்ளோ அல்லது இருட்டிய பிறகோ படமெடுக்க 'கோடக்' பிளாஷ்ஹோல்டரை பொருத்தவும். விலை ரூ. 45/4

கேஸ்	ரூ. 3/4
பிளாஷ்ஹோல்டர்	ரூ. 31/-

கோடக் லிட். (இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது. கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது) பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்

பிலிமையே எப்பொழுதும் உபயோகியுங்கள்!

கலை கண்ட மலேயா (3)

நாகைத் துறை முகத்தில்

கப்பலில் உயர்வகுப்புப் பிரயாணிகளுக்கு உரிய அறைகளில் எல்லா வசதிகளும் உண்டு. விசாலமான கட்டில், சுத்தமான மெத்தை—தலையணைகள், செருகு அறைகளுடன் கூடிய நேர்த்தியான மேஜை, அதன்மேல் அழகான கண்ணாடி, பெரிய பீரோ, பிரம்பு நாற்காலி, குழாய் வசதிகளுடன் சுவரிலே பொருத்தப் பட்ட முகம் அலம்பும் கோப்பை, குடி தண்ணீர்ச் செம்புகள், குவளைகள், மின்சார சாதனங்கள், உயிர்காக்கும் ஜாக்கட்டுகள், அவற்றைப் பயன்படுத்தும் முறையை விளக்கும் படம் — இத்தனை வசதிகளும் பொருந்திய அறையிலே ஒரே ஒரு குறை மட்டும் இருந்தது. இந்தக் குறை பிரயாணிகளை மிரட்டியது; அறையை விட்டு வெளியே செல்லும்படி விரட்டியது என்று கூடச் சொல்லலாம்.

''அறையிலே எத்தனை வசதிகள் இருந்தால் தான்என்ன?மெல்லிய பூங்காற்று இல்லையே!'' எங்களுடைய உடம்பு வெப்பத்தால் வியர்த்தது. நாங்கள் பிரயாணம் செய்த காலம் கடுங் கோடை அல்லவா?

காற்று வசதிக்காகச் சுழலும் மின்விசிறி தவிர, ''புளோயர்'' என்ற பெயருடைய இரண்டு காற்றுக் குழாய்களும் ஒவ்வொரு அறையிலும் பொருத்தப்பட்டுள்ளன என்பது உண்மைதான்; இயந்திர உதவியால் காற்றைக் குழாய்களின் வழியே ஏவி விடும் ஏற்பாடு அருமையானதுதான்; ஆனாலும் அறையிலே பொங்கும் வெப்பத்தைத் தணிக்கும் ஆற்றல் செயற்கைக் காற்றுக்கு இல்லையே!

அறைக்குள்ளே உறக்கம் கொண்ட நாங்கள் வெப்பம் தாங்காமல் விழித்தெழுந்தோம். அறையைப் பூட்டி விட்டு ஒவ்வொருவராகக் கப்பலின் வெளித்தளத்துக்கு வந்தோம்.

களிப்பு மிகுந்த கடலானது தன் அலைக்கரங்களை உயர்த்தி ''வருக, வருக!'' என்று அழைப்பதுபோல் மென்மையாகவே ஆரவாரம் செய்தது. அலைகளோடு கலந்து விளையாடி எங்கள் மீது வீசிய காற்று 'குளு குளு'வென்று வெகு சுகமாக இருந்தது.

''இன்றைக்கு ஏது கடலுக்கு இத்தனை உற்சாகம்?'' என்று வானத்தை ஏறிட்டுப் பார்த்தோம். வான வெளியில் மிதந்த கட்டழகு வட்ட நிலாவைக் கண்டுதான் கடல் குதூகலம் அடைந்தது என்பதை உணர்ந்தோம். அன்று சித்திரா பௌர்ணமி. நீல வானிலே நிலவின் கோலமும் அதனை எட்டிப் பிடிக்கத் துடியாய்த் துடித்த கடலின் ஓலமும் எங்கள் இதயத்தைக் கொள்ளை கொண்டன. இயற்கையின் வனப்பை அநுபவித்துக் கொண்டே, வெளித்தளத்தில் போடப்பட்டிருந்த சாய்மான நாற்காலிகளிலே சயனம் கொண்டோம். தூக்கத்திலே அப்படியே சொக்கிப் போனோம்.

அதிகாலையில் நங்கூரம் பாய்ச்சும் சத்தம் கேட்டுக் கண் விழித்தோம். நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்தில் கப்பல் நிறுத்தப்பட்டதை உணர்ந்து கொண்டோம்.

சென்னையிலிருந்து நாகைவரை நூற்றைம்பது மைல்களைக் கடந்து விட்டோம். சிங்கப்பூரை அடைவதற்கு இன்னும் ஆயிரத்து அறுநூறு மைல்களுக்கு மேல் செல்ல வேண்டுமே!

பொழுது நன்கு விடிவதற்குள் காலைக் கடன்களை முடித்துவிட விரும்பினோம்.

குளிக்கும் அறைக்குச் சென்ற திரு பகவதி, ''பிரமாதம்! பிரமாதம்! இரண்டரை அங்



ஹலக் குழாய் வழியே தண்ணீர் அருவி போலக் கொட்டுகிறது!'' என்று அளவற்ற ஆனந்தத்துடன் குரல் கொடுத்தார்.

நீர்வளத்தைக் காண்பதற்காக நாங்களும் அறைக்குள் சென்றோம். குழாயிலே பொழிந்த தண்ணீரைக் கையிலே ஏந்தி ஆவலோடு வாயிலே ஊற்றிக் கொண்டார் திரு பகவதி. உடனே அவர் முகத்தை ஒரு மாதிரியாகச் சுளித்துக் கொண்டார். வாயில் இருந்த நீரைப் 'புளிச்'சென்று கீழே கொப்புளித்து விட்டார்! கொப்புளிக்காமல் வேறு என்ன செய்வார்? சரியான உப்புத் தண்ணீர்!

''நல்ல தண்ணீர்தான் இவ்வளவு ஜோராக வருகிறது என்றல்லவா எண்ணி விட்டேன்!...'' என்று தம் ஏமாற்றத்தை வெளியிட்டார் திரு பகவதி.

''சரிதான்! கடலிலிருந்து நேரிடையாகக் குழாய்த் தொடர்பு ஏற்படுத்தி, மோட்டார் மூலம் உப்புத் தண்ணீரை விநியோகிக்கிறார்கள்! ஆசை தீர எவ்வளவு குளித்தாலும் தண்ணீர்ப் பஞ்சமே வராது!'' என்று அவரே சமாதானமும் சொல்லிக் கொண்டார்.

கடல் நீரில் எவ்வளவுதான் குளிக்கமுடியும்? ஒரு செம்புத் தண்ணீரை ஊற்றிய உடனேயே உடல் பிசுபிசுவென்று ஒட்டுகிறதே!

உப்புத் தண்ணீரில் தாராளமாகக் குளித்து விட்டுப் பின்னர் இரண்டு வாளி நல்ல தண்ணீரில் உடம்பின் பிசுபிசுப்பைப் போக்கிக் கொண்டோம். வாளிகளிலே நல்ல தண்ணீர் அல்லது நல்ல வெந்நீர் பிடித்துத் தருவதற்குப் பணியாட்களும் உள்ளனர். தண்ணீரும் வெந்நீரும் தடையின்றிக் கிடைப்பதற்கேற்ற குழாய் வசதிகளும் கப்பலில் உள்ளன. ஆனால், இவைகளும் சில சமயங்களில் ஒத்துழைக்க மறுப்பதுண்டு. வெந்நீரும் தண்ணீரும் கிடைப்பதில்லை.

கதிரவன் உதயமாவதற்கு முன்பே காலைக் கடன்களையெல்லாம் முடித்துக் கொண்டோம். நன்றாகப் பசியெடுத்தது. ஆயினும் முதல் பந்தி எட்டரை மணிக்குத்தான் ஆரம்பமாகும் என்பதை அறிந்து பொறுத்துக் கொண்டிருந்தோம்.

குறிப்பிட்ட நேரத்தில் மணியடித்து உணவு தரும் முறை கப்பலில் மிகக் கண்டிப்பாக அமுல் செய்யப்பட்டு வருகிறது.


காலை ஏழரை முதல் எட்டு மணிவரை குழந்தைகள் பந்தி. எட்டரை மணி முதல் ஒன்பது வரை பெரியவர்கள் முதல் பந்தி! ஒன்பது முதல் ஒன்பதரை வரை இரண்டாவது பந்தி.


மத்தியானம் பதினொன்றே முக்கால் முதல் பன்னிரண்டேகால் வரை குழந்தைகள் பந்தி; பன்னிரண்டரை முதல் ஒன்று வரை முதல் பந்தி; ஒன்றே கால் முதல் ஒன்றே முக்கால் வரை இரண்டாவது பந்தி.

பிற்பகல் நாலு மணி முதல் நாலரை வரை தேநீர் - எல்லோருக்கும் ஒரே பந்தி.

இரவு ஐந்தே முக்கால் முதல் ஆறே கால் மணிவரை குழந்தைகள் பந்தி; ஆறரை முதல் ஏழு வரை முதல் பந்தி; ஏழேகால் முதல் ஏழே முக்கால் வரை இரண்டாவது பந்தி.

எந்தப் பந்தியில் உண்ண விரும்புகிறோம் என்பதை முன்னதாகவே அவர்களுக்கு அறிவித்து விடவேண்டும். முதல் பந்திக்குச் சிவப்பு அட்டையும் இரண்டாவது பந்





நீலத் திரை கடலின் அழகைக் கப்பலின் வெளித் தளத்திலே அமர்ந்து டி. கே. எஸ். கலைக் குழுவினர் இன்புறுவதைக் காணலாம்.

திக்கு நீல அட்டையும் அடையாளச் சின்னமாகக் கொடுத்து விடுவார்கள்.

இந்தப் பந்தி முறையிலே எங்களுக்கு ஒரு சிக்கல் ஏற்பட்டது. காலை, மத்தியானம் இரண்டு நேரங்களுக்கும் முதல் பந்தி வசதியாகத் தோன்றியது. ஆனால் இரவு உணவுக்கு முதல் பந்தி ஏற்றதாக இல்லை. மாலை ஆறரை மணிக்கே எப்படி இரவு உணவை முடித்துக் கொள்வதென்று தயங்கினோம். ஆயினும் ஏதாவது ஒரு முறையைக் கண்டிப்பாகப் பின்பற்றித்தானே ஆக வேண்டும்? இரவு உணவை இரண்டாம் பந்தியில் உண்ண வேண்டும் என்பதற்காக எங்களில் சிலர் காலை - மத்தியான உணவுக்கும் இரண்டாம் பந்தியையே தேர்ந்தெடுத்து நீல அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. இப்படி நீல அட்டை பெற்றவர்கள் காலை உணவுக்கு ஒன்பது மணி வரையில் காத்திருக்க வேண்டியதாகவும் இருந்தது.

காலை உணவு கிடைப்பதற்கு வெகுநேரம் ஆகும் என்று தெரிந்தபடியால் நாங்கள் சட்டையணிந்து கொண்டு, கப்பலின் வெளித் தளத்துக்கு வந்தோம். சட்டையணிந்து கொண்டு வந்தோம் என்று அழுத்தமாகச் சொல்வதிலும் ஒரு கருத்து இருக்கிறது. ஆமாம்; சட்டையணியாமல் வெறும் உடம்போடு தளத்திலே நிற்பது கூடாது என்பது கப்பலில் உள்ள கட்டுப்பாடு.

தளத்தில் நின்ற பிரயாணிகளுக்கு நாகப்பட்டினக் கடற்கரையும் சற்றுத் தொலைவிலே நாகூரின் காட்சியும் நன்றாகத் தெரிந்தன.

தாய்க் கோழியைத் தேடி ஓடிவரும் குஞ்சுகளைப் போலப் பாய்மரப் படகுகள் பல, கரையிலிருந்து கப்பலை நோக்கி விரைந்து வரும் வேகத்தைக் கண்டோம். "வங்கக் கடலா? அல்லது மதுராந்தகம் ஏரியா?" என்று ஐயுறும் வண்ணம் கடலிலே மெல்லலைகள் நெளிந்து கொண்டிருந்தன. ஆதலால் படகுகள் அசைவுத் தொல்லையில்லாமல் கம்பீரமாக மிதந்து வந்தன.

தலைவனைக் கண்டவுடன் மேல்வேட்டியைச் சுருட்டி அரையிலே கட்டிக்கொண்டு மரியாதை செய்யும் உத்தமத் தொண்டர்களைப் போல், கப்பலை நெருங்கியவுடன் படகுகள் எல்லாம் பாய்களைச் சுருக்கிக் கொண்டு பயபக்தியோடு காணப்பட்டன!

படகுகளிலே பொறிக்கப்பட்டிருந்த பெயர்களும், தமிழ் எண்களும், கடல் வாணிபத்தின் தொன்மையை அறிவிப்பன போல் உணர்ச்சியூட்டின. "வீர குலோத்துங்கன்" "வீர சக்கம்மாள்" "வீர பாண்டியன்" "கௌதமன்" முதலிய பெயர்களைத் தாங்கி நின்ற படகுகள், "சிங்களம் புட்பகம் சாவகம் ஆகிய தீவு பலவினும் சென்றேறிய" பழங்காலத்து வீர மரக்கலங்களையே நினைவூட்டின.

ஏற்றுமதிச் சரக்குகள் மட்டுமல்லாமல் நூற்றுக் கணக்கான பிரயாணிகளையும் ஏற்றிக் கொண்டு வந்து சேர்ந்தன அந்தப் படகுகள்.

பிரயாணிகள் படகுகளிலிருந்து கப்பலில் ஏறினார்கள் என்று சொல்வது பொருந்தாது. கப்பலில் தூக்கி வீசப்பட்டார்கள் என்று தான் சொல்ல வேண்டும்!

படகுகள் கப்பலை நெருங்கியவுடன் தனித் தனியே மூன்று படிகள் கப்பலில் தொங்க விடப்பட்டன. இந்த ஏணிகளைப் பற்றி ஒரு வார்த்தை. ஒரு படிக்கும் இன்னொரு படிக்கும் இடைவெளி மூன்று அடி உயரம் இருக்கும்!

படிகளின் ஓரமாகப் படகுகள் ததந்தளித்துக் கொண்டிருந்தன. அவற்றிலிருந்து பிரயாணிகள் நெருக்கியடித்துக் கொண்டு, உயரமான படிகளிலே தாவியும், கயிறுகளைப் பிடித்துக் கொண்டு தொங்கியும், எப்படியோ கப்பலுக்குள் வந்து விழுந்தார்கள்! இப்படித் தொத்திக்கொண்டு ஏறுவதில் குழந்தைகளும் பெண்களும் எவ்வளவு தொல்லையடைந்தார்கள் என்பதை வருணிக்கவே முடியாது.



குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டி வியாதிகளுக்கு

ஜம்மியின் "லிவர்க்யூர்"

மாதாந்திர விஜயம்

எமது வாடிக்கையாளர்களின் நலனையும், சௌகரியத்தையும் முன்னிட்டு எமது டாக்டர் கீழ்க்கண்ட இடங்களில் ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதிகளில் விஜயம் செய்கிறார். அப்பொழுது அவரை நேரில் கலந்து ஆலோசிக்கலாம்.


ஆலோசனை நேரம்: குறிப்பு—காலை 9 முதல் 11 மணி வரை; மாலை 3 முதல் 5 மணி வரை

இடம்	தேதி		இடம்	தேதி	
தஞ்சாவூர்	17	காலை & மாலை	சிதம்பரம்	23	காலை & மாலை
பட்டுக்கோட்டை	18	காலை	கடலூர் N. T.	24	காலை & மாலை
திருத்துறைப்பூண்டி	18	மாலை	பாண்டிச்சேரி	25	காலை
மன்னார்குடி	19	காலை	திண்டிவனம்	25	மாலை
திருவாரூர்	19	மாலை	விழுப்புரம்	26	காலை & மாலை
நாகப்பட்டினம்	20	காலை	விருத்தாசலம்	27	மாலை
நன்னிலம்	20	மாலை	காஞ்சீபுரம்	28	காலை & மாலை
மாயவரம் டவுன்	21	காலை & மாலை	வேலூர்	29	காலை & மாலை
சீர்காழி	22	காலை	குடியாத்தம்	30	காலை

ஜாம்ஷெட்பூர்: ஒவ்வொரு மாதக் கடைசி ஞாயிறு காலை 9-11 & மாலை 4-6 மணிக்கு சாக்ஷியிலுள்ள ஆந்திர டிராமாடிக் & லிட்டரரி சோஸைட்டி கட்டடத்தில்
கரக்பூர்: 4 காலை & மாலை M/s. யுனைடெட் மெடிகல் ஸ்டோர்ஸ் N.T.E. 155, ரயில்வே மார்க்கெட்

★

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்
சென்னை - திருச்சிராப்பள்ளி - கும்பகோணம்



ஸ்ரீ S. விஜயராகவ அய்யங்கார். B.A., B.L.

தோற்றம்: 20-6-1905 மறைவு: 14-8-1957

கோவை ஜில்லா, பொள்ளாச்சி நகரில், பிரபல குடும்பத்தில் தோன்றி, வழக்கறிஞராகவும், பொள்ளாச்சி A. B. T. லிமிடெட்டின் டைரக்டராகவும், ஒன்பது ஆண்டுகள் கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாகவும், மற்றும் பல பொதுநல ஸ்தாபனங்களில் பங்கு கொண்டவரும், நகராட்சி உறுப்பினரும், பொள்ளாச்சியில் காலம் சென்ற அவருடைய பாட்டனார் சமத்தூர் ராமய்யங்கார் பெயரில் முனிசிபல் உயர் நிலைப் பள்ளிக்கு நன்கொடையாக ரூ. 20,000/- அளித்தவரும், சமத்தூரிலிருக்கும் தனது சொந்த கட்டிடத்தை காலம் சென்ற தனது பாட்டியார் ஸ்ரீமதி சேஷம்மாள் பெயரில் ஜில்லா போர்டு ஆரம்ப பாடசாலை நடத்த நன்கொடையாக கொடுத்தவரும், பொள்ளாச்சி, பழனி பர்மாஷெல் ஏஜெண்டுமான ஸ்ரீ எஸ். விஜயராகவ அய்யங்கார் அவர்கள் 14-8-1957 தேதி யன்று மாலை 7 மணிக்கு காலமானார். அவர் ஆத்மா சாந்தி அடைக.

கால் அரிப்பு
3 நாளில் குணமாக்கப்பட்டது

உங்கள் கால்களில் அரிப்பு, புண் முதலியன ஏற்பட்டு உங்களை உபத்திரவப்படுத்துகின்றதா? இவைகளுக்கெல்லாம் காரணம் நுண் கிருமி. இது உலகம் முழுவதும் பரவி, சிங்கப்பூர் சொறி, வண்ணாரப்படை என்ற பல பெயர்களில் வழங்கப்படுகிறது. நீங்கள் கிருமிகளின் காரணத்தை நீக்கும் வரை இவ்வுபாதைகளை அகற்ற முடியாது. இப்புதிதாகக் கண்டுபிடித்த நிக்ஸோடர்ம் (Nixoderm) 7 நிமிஷத்தில் அரிப்பை நிறுத்தி, 24 மணி நேரத்தில் கிருமிகளைக் கொன்று, 3 நாளில் சருமத்திற்கு இதமளித்து மிருதுவாக்கி சுத்தப்படுத்தி விடுகிறது. நிக்ஸோடர்ம் (Nixoderm) குணமளிப்பது நிச்சயம். முகம் அல்லது தேகத்திலுள்ள கரப்பான், முகப்பரு, கட்டி, படை போன்ற அநேக சரும உபாதைகளையும் நிவர்த்திக்க உத்தரவாதம். அன்றேல் வெற்றுப் பெட்டியை அனுப்பினால் பணம் வாபஸ். இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடர்ம் (Nixoderm) கேளுங்கள். உத்தரவாதம் உங்களுக்கு பாதுகாப்பளிக்கிறது.


Nixoderm

நிக்ஸோடர்ம்

சரும உபாதைகளுக்கு

ஆஸ்த்மா சளி
முதல் நாளே கரைகிறது

ஆஸ்த்மா, பிராங்கைட்டிஸ், ஜலதோஷத்தால் மூச்சுத்திணறல், இருமல், தும்மல், மூச்சடைப்பு உபாதைகளால் அவதிப்படும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இப்போது மெண்டாகோ (Mendaco) அருந்தி அற்புத நிவாரணம் அடைகிறார்கள். இந்த நவீன, விஞ்ஞான, அமெரிக்க மருந்து இரத்தத்தின் வழியே சுவாசப்பைகள், சுவாசக் குழாய்கள், மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடர்த்துள்ள சளியை இளக்கிக் கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் தும்மலின்றி சுகமாக சுவாசித்து குழந்தைபோல் தூங்கலாம். கெமிஸ்டிடம் மெண்டாகோ (Mendaco) வாங்குக. திருப்தி இன்றேல் பணம் வாபஸ்.



கப்பலின் 'டெக்' பிரயாணிகள் மூட்டை முடிச்சுகளுக்கு நடுவில் தாங்களும் மூட்டை முடிச்சுகளைப் போலவே அமர்ந்திருக்கும் கோலம்.

உயரமான படிகளைத் தொங்கவிட்டுப் பிரயாணிகளின் உள்ளமும் உடலும் ஊசலாட விடாமல், நல்ல பாதுகாப்போடு கூடிய ஏணியைச் செய்து பொருத்தினால் எவ்வளவு உதவியாக இருக்கும் என்று எங்கள் உள்ளம் எண்ணி வேதனைப்பட்டது.

இலட்சக் கணக்கில் பணத்தை வாரி இறைத்துக் கப்பலைக் கட்டியவர்கள் பிரயாணிகளின் வசதிக்காக ஒரு சிறு ஏணி அமைப்பதிலா சிக்கனத்தைக் காட்ட வேண்டும்?

ஏற்றி இறக்கும் வசதிகளோடு கூடிய பெரிய ஏணி ஒன்று கப்பலிலிருப்பதைக் கண்டோம். "இந்த ஏணியைப் பிரயாணிகளுக்காக இறக்கி விட்டால் என்ன?" என்று கப்பல் அதிகாரி ஒருவரைக் கேட்டோம்.

"இந்த ஏணியில் நாலு-நாலு பேர்களாகத் தான் ஏறவேண்டும்; அளவுமீறி ஆட்கள் ஏறினால் ஏணி தாங்காது; நாலு-நாலு பேர்களாக ஏறி வரக்கூடிய பொறுமை பிரயாணிகளுக்கு இருப்பதில்லை. நூற்றுக்கணக்கான பிரயாணிகள் ஒரே சமயத்தில் நெருக்கிக் கொண்டு ஏற முயற்சிப்பார்கள்! ஆகையினால் தான் இந்த ஏணியைப் பொதுவாக நாங்கள் பயன்படுத்துவதில்லை!" என்று விளக்கம் தந்தார் அந்த அதிகாரி. தொங்கும் படிகளில் பிரயாணிகள் தொத்தி ஏறிய வேகத்தைப் பார்த்தபோது அதிகாரி சொன்ன காரணமும் சரியானதாகத்தான் தோன்றியது.

அதிகாலையிலிருந்து மாலை ஐந்து மணி வரை, அதாவது சுமார் பன்னிரண்டு மணி நேரம் கப்பல் நாகப்பட்டினம் துறைமுகத்தில் நிற்கும் என்பது தெரிந்தது. அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்த படகுகளில் நாகப் பட்டினத்துக்குப் போய்விட்டு வரலாமா என்ற எண்ணங்கூட எழுந்தது. உரிய நேரத்தில் கப்பலுக்குத் திரும்ப முடியாமல் போய் விடுமோ என்ற அச்சமே எங்களுடைய ஆவலுக்குத் தடையாக நின்றது.

ஆயினும் நாகையிலிருந்து நமது நாட்டின் செய்தித் தாள்களை வரவழைத்துப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தமையால் மன ஆறுதல் அடைந்தோம். நாகையைக் கடந்து விட்டால் பினாங்குத் துறைமுகம் செல்லும்வரை சுமார் ஐந்து நாட்களுக்கு எந்தவிதமான செய்திகளையும் படித்து அறிந்து கொள்ள இயலாது. எனவே வெகு ஆவலுடன் செய்தித் தாள்களை ஒரு வரி விடாமல் படித்து முடித்தோம்.

குடும்பத்தினருக்கும் சில நண்பர்களுக்கும் ஆர்வம் ததும்பக் கடிதங்கள் எழுதி நாகப் பட்டினத்தில் தபாலில் சேர்க்குமாறு அன்பர்களிடம் கொடுத்து அனுப்பினோம். இந்தக் கடிதங்கள் நண்பர்களுக்கு எவ்வளவு திருப்தியாகவும் ஆறுதலாகவும் இருக்கும் என்பதை எண்ணி யெண்ணி மகிழ்ந்தோம்.

ஒலிபெருக்கி மூலம் கப்பல் முழுவதும் அஞ்சல் செய்யப்பெற்ற வானொலி நிகழ்ச்சிகள் மிகுந்த உற்சாகம் அளித்தன. இதனால் "எல்லையற்ற நீலக் கடலில் மிதக்கிறோம்!" என்ற எண்ணமே இல்லாமல் ஏதோ ஒரு தமிழ் நகரத்திலே குடியிருப்பது போன்ற உணர்ச்சியே மேலோங்கி நின்றது.

எங்கள் காலைப் பந்திக்குரிய மணியோசை கேட்டது. காலந்தவறிச் சென்றால் உணவு கிடைப்பது அரிது என்பதை முதல்நாளே அனுபவித்து உணர்ந்த நாங்கள் ஆவலோடு விரைவாக உணவு மண்டபத்துக்குச் சென்றோம்.

ஒவ்வொரு மேஜையிலும் உணவுப்பட்டியல் வைத்திருந்தார்கள். சைவ உணவு, அசைவ உணவு இரண்டு வகையும் பட்டியலில் இடம் பெற்றிருந்தன. குழுவினரில் எங்கள் இருவரையும் சேர்த்துப் பன்னிருவர் சைவ உணவு உண்பவர்கள். இயன்ற வரையில் புலால் உண்போரும் ஏனையோரும் தனித் தனியாக அமர்ந்து உண்பதற்கு ஏற்ற வசதிகளைச் செய்து தந்தார்கள்.

இருவகையான உணவுகளையும் தனித் தனியே சமைத்து வழங்கும் சிப்பந்திகள் இருந்தார்கள். சமைத்துக் கொள்ளும் முறையில் நாவுக்குச் சுவையான சைவ உணவு கிடைத்ததுபற்றி நாங்கள் உண்மையிலேயே மகிழ்ச்சி யடைந்தோம். (தொடரும்)

கேட்டு மகிழுங்கள்

இனிக்கும் இசை

ஒவ்வொரு சனிக்கிழமையும்
மாலை 6-30 முதல் 7 மணி வரை

ரேடியோ ஸிலோன் (41 மீட்டரில்)

தென்னிந்திய சர்வீஸ் தமிழ் நிகழ்ச்சி

ஓ. கே. பிராடக்டுகள்
தயாரிப்பவர்கள் அளிப்பது

(14, செப்டம்பர் '57, சனிக்கிழமை 6-30—7 மணிக்கு ஆரம்பம்)

ஒவ்வொரு சனிக்கிழமை மாலையும் 6-30 மணி முதல் 7 மணி வரை 'ரேடியோ ஸிலோனை'க் கேளுங்கள். ஓ. கே. பிராடக்ட்ஸ் "இனிக்கும் இசை" நிகழ்ச்சியில் உங்களுக்குப் பிடித்தமான சினிமாப் பாடல்களைக் கேட்டு மகிழுங்கள்.

நீங்கள் ஒரு பரிசுகூடப் பெறலாம்!

விவரங்களறிய இந்தச் சனிக்கிழமை "இனிக்கும் இசை" நிகழ்ச்சியை அவசியம் கேளுங்கள்.

CUT HERE:

INIKKUM ISAI

POPULARITY POLL - ENTRY FORM

Heard every Saturday 6-30—7 p. m.

Col. One	Col. Two	Col. Three.
1		
2		
3		
4		
5		
6		
7		

How to fill this form:

Column 1. Gives the order of the songs as played.
Column 2. Write the title of the song here.
Column 3. Indicate the order of your preference numerically in this column.

Sender's Name: Mr/Mrs/Miss ______________________

Full address ______________________

____

Address your entries to:

'INIKKUM ISAI', P. B. No. 146, MADRAS-1.

"This is a Radio Ceylon Popularity Poll Contest to determine the most popular discs of the week."

CUT HERE:

CUT HERE:

CUT HERE:

ஆசாபங்கம்



கதை : : தாகூர் தமிழாக்கம் : : பாரதியார்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அந்திவானத்தில் சற்றே குறையப் பூரணமாக இருந்த சந்திரன் தோன்றினான். மரண வேதனைகளின் பயங்கரமான காட்சிகளால் யுத்தகளம் மூடப்பட்டிருந்தது. வேறெந்த நேரத்திலும் அப்படிப்பட்ட கோலத்துக்கிடையே நடந்து செல்லுதல் எனக்குச் சாத்தியப்பட்டிராது. ஆனால் அன்றிரவு நான் தூங்கிக் கொண்டே நடக்கும் வியாதியுடையவரின் நிலைமையில் இருந்தேன். கேசவலாலை எப்படியேனும் கண்டு பிடிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கம் தவிர எனக்கு வேறு நினைவில்லை.

''பாதி இரவில், யமுனைக் கரையில், ஒரு மாந்தோப்பில் கேசவலாலைக் கண்டேன். அவன் தரைமீது படுத்துக் கிடந்தான். அவனிடம் மிகுந்த விசுவாசமுள்ள சேவகனான தேவகி யென்பவனுடைய பிரேதம் பக்கத்தில் கிடந்தது. மரணக் காயம் பட்டபின் அந்தச் சேவகன் தனது நாயகனை இந்தப் பத்திரமான இடத்துக்குக் கொணர்ந்திருக்க வேண்டும், அல்லது புண்பட்ட நாயகன் அவனைச் சுமந்து வந்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். நெடுங்காலம் ரகசியமாக வளர்ந்து வந்த எனது பக்தியை இனி அடக்கி வைக்க முடியவில்லை. கேசவலாலின் பாதங்களில் விழுந்தேன். என் கூந்தலை அவிழ்த்து அவன் பாதங்களின் புழுதியைத் துடைத்தேன். மரண சீதளமாக இருந்த அவன் அடிகளை என் நெற்றியால் தீண்டினேன். கண்களிலிருந்து நீர் உடைத்துக் கொண்டு வெளியேறியது.

''அந்தச் சமயத்தில் கேசவலால் கொஞ்சம் அசைந்து வேதனையால் புலம்பினான். என் உடம்பை அவ்வொலி தூக்கிவாரிப் போட்டது. அவனுடைய கண்கள் மூடியிருந்தன. ஆனால் தண்ணீர் வேண்டுமென்று சொல்லியது என் செவியில் விழுந்தது. உடனே நான் யமுனையில் இறங்கி என் வஸ்திரத்தை ஜலத்தில் நனைத்துக் கொண்டு வந்து, அவனுடைய பாதி மூடின இதழ்களுக்குள்ளே பிழிந்தேன். என் ஆடையில் ஒரு துண்டு கிழித்து, அவன் இடது கண்மீது கட்டினேன். அதிலும், அப்பால் மண்டையோட்டின்மீதும் ஆழமான கத்திக் காயம் பட்டிருந்தது. பலமுறை ஜலத்தை வாயில் பிழிந்து, முகத்திலும் தெளித்தேன். பிறகு அவனுக்கு மெதுவாகப் பிரக்ஞை உண்டாயிற்று. 'இன்னும் ஜலம் வேண்டுமா?' என்றேன். அவன் என்னை வெறித்து நோக்கி, 'நீ யார்?' என்று கேட்டான். 'உனது அடிமையாகிய நான், நவாப் குலாம் காதிர்கானுடைய மகள்' என்றேன். கேசவலால் மரிக்கும் முன் என் மனத்தை அவனிடம் சொல்லிவிடவேண்டுமென்று நினைத்தேன். இந்தக் கடைசி மகிழ்ச்சியை யாரும் எனக்கு இல்லாதபடி செய்ய முடியாது என்று எண்ணினேன். ஆனால் என் பெயரைக் கேட்டவுடன், ''அடி, மிலேச்ச துரோகியின் மகளே! சாகுந் தருணத்தில் என்னை அசுசியாக்க வந்தாயா?'' என்று சொல்லிக் கேசவலால் என் கன்னத்தில் ஓரடி அடித்தான். எனக்கு மயக்க முண்டாயிற்று. உலகம் இருண்டு விட்டது.

''இது நடந்தபோது எனக்கு வயது பதினாறு தானென்பதை மறக்கக் கூடாது. நான் அந்தப்புரத்தை விட்டு வெளியேறியது என் வாழ்நாளில் அதுதான் முதல்தரம். அப்போது வெளிக் காற்றின் ஆக்ரஹமான உஷ்ணம் என் கன்னத்தின் ரோஜா நிறத் தளதளப்பை மாற்றவில்லை. வெளிக் காற்றுக்கு வந்த முதலடியில் எனக்கு நான் தெய்வமாகக் கொண்ட புருஷனிடமிருந்து கிடைத்த உபசாரம் இந்த அடிதான்!''

என் இந்த மோகினிமாது சொல்லிய கதையை நான் கனவில் ஆழ்ந்தவன் போல் கேட்டுக் கொண்டிருந்தேன். என் 'ஸிகரெட்டி'ல் நெருப்பவிந்து போனதைக் கூட நான் கவனிக்கவில்லை. அவளுடைய சொல்லழகிலா, குரலினிமையிலா, கதையிலேதானா, எதில் என் மனம் ஈடுபட்டதென்பதைக் கூறுதல் சிரமம். வாய் பேசாமல் கேட்டு வந்தேன். ஆனால் அவளுடைய கதை இந்தக் கட்டத்துக்கு வந்தபோது, என்னால் சும்மா இருக்க முடியவில்லை. (கேசவ லாலின் செய்கையை நினைத்து) ''அட, மிருகமே!'' என்றேன். உடனே நவாப் மகள் என்னை நோக்கி, ''யாரை மிருகமென்கிறாய்? மிருகம் சாகும் தருணத்தில் உதட்டிலே வார்க்க வந்த ஜலத்தை வேண்டாமென்று சொல்லுமா?'' என்று கோபத்துடன் கேட்டாள்.

உடனே நான் என்னையே திருத்திக் கொண்டு, ''ஆம், அது தெய்விகமான செய்கைதான்'' என்றேன். அதற்கு நவாபின் மகள், ''தெய்விகமா? உண்மையான உள்ளத்துடன் கொண்டு வந்த பூஜையைத் தெய்வம் மறுத்துத் தள்ளுமா?'' என்றாள். மௌனம் ஸர்வார்த்த ஸாதகமென்று நான் சும்மா இருந்து விட்டேன்.

நவாபின் மகள் தனது கதையை மேலும் தொடர்ந்து சொல்லுகிறாள் :

''ஆரம்பத்தில் இது எனக்குப் பெரிய கஷ்டமாக இருந்தது. உலகம் என் தலைமேல் இடிந்து விழுந்தது போல் தோன்றியது. அப்போது நான் அந்தக் கடின .சித்தையுள்ள


குரூரமான, சலியாத பிராமண யுத்த வீரனைத் தூரத்தில் நின்று வணங்கி, 'நீ எளியவரிடம் பணியும், பிறரிடம் சோறும், செல்வரிடம் பொருளும், இளையாரிடம் இளமையும், ஸ்திரீயிடம் காதலும் வேண்டாய். நீ விலகி, தூரமாக, எட்டாமல் தனியே நிற்கிறாய். புழுதி உலகம் உன்னைத் தீண்டத் தகாது. உனக்கு என்னை உரிமையாக்கும் உரிமைகூட எனக்கு இல்லை' என்று மனத்திலே சொல்லிக் கொண்டேன். நவாபின் கர்வ மகளாகிய நான் தரைமீது முடிதொட்டு வணங்கியதைக் கண்டபோது அவன் மனத்தில் என்ன சிந்தனைகள் உண்டாயினவோ அறியேன். ஒரு க்ஷணநேரம் என் முகத்தை உற்று நோக்கினான். பிறகு மெல்ல எழுந்து உட்கார்ந்தான். நான் அவனுக்குத் துணை செய்ய விரைந்து கை நீட்டினேன். என்னைச் சமிக்ஞையினாலே திரஸ்கரம் செய்து விட்டு, மிகவும் வேதனையுடன் யமுனைத் துறைக்கு நடக்க மாட்டாமல் நடந்து சென்றான். அங்கொரு தோணி கட்டியிருந்தது. ஆனால் யாத்திரிகரும் இல்லை; தோணிக்காரனையும் காணோம். கேசவலால் தோணியில் ஏறிக் கயிற்றை அவிழ்த்து, நடுநீரில் இழுப்புண்டு பின் மறைந்து விட்டான். ஒரு க்ஷணம், யமுனையில் விழுந்து விடலாமா என்று பலமாக எண்ணினேன். கர்ம்பினின்றும் அகாலத்தில் பறித்த மலர்போல, என் காதலையும், இளமையையும், இகழ்ச்சியுண்ட அன்பையும் அவனைக் கொண்டு போன தோணியை நோக்கி வீசியெறிந்து மடியக் கருதினேன். என்னால் இயலவில்லை.

''எழுகின்ற சந்திரன், எதிர்க்கரையில் ஆழ்ந்த கரிய மரத்தொகுதி, நதியின் நீல நீரின் சலியாத பரப்பு, தூரத்தில் மாந்தோப்புக்கு அப்பால் மின்னும் கொத்தளம், இவையெல்லாம் என் செவியில் மரணத்தின் மௌன இசை பாடின. என்னை ஏங்க விட்டு, நதியில் தூரமாகச் சென்ற அந்த மெல்லிய படகு மாத்திரம் என்னை உயிர் வழியில் இழுத்தது. நிலாவின் மோனத்திலே கண்ட அழகிய ம்ருத்யு தேவதையின் ஆலிங்கனத்தினின்றும் அது என்னை விலக்கியது.

'' நான் பேதுற்றவள் போல் யமுனைக்கரை வழியே போனேன். நெருங்கிய நாணலுக்கிடையிலும், மணல் வெளியிலும், ஆழமற்ற தண்ணீரிலும் நடந்தேன். செங்குத்தான கரைகளின் மீதேறினேன். புதர் நிரம்பிய காட்டின் வழியே வளைந்து வளைந்து போனேன்....''

இந்த இடத்தில் கதையை நிறுத்தினாள். நானும் அவளுடைய மௌனத்தைக் கலைக்கவில்லை. நெடுநேரத்துக்கு அப்பால் மறுபடியும் தொடங்கிக் கூறினாள்:—

'' இதன் பிறகு செய்திகள் குழம்புகின்றன. அவற்றை முறையாகச் சொல்லிக் கதையைத் தெளிவிக்க என்னால் முடியாது. திக்குத் தெரியாத காட்டில் நடப்பவள் போலானேன். அந்தப் புலம் தெரியாத சாலைகளில் நான் சுற்றியதை எல்லாம் இப்போது நினைவுக்குக் கொண்டு வருவதே சிரமம். எப்படித் தொடங்குவோம், எப்படி முடிப்போம் என்பதே தெரியவில்லை. கதையில் எந்த அம்சத்தைச் சொல்வது, எதை அகற்றுவது? என் கதை நம்பத் தக்கதாக நீ நினைக்கும்படி செய்வது எங்ஙனம்? ஒன்றும் தெரியவில்லை. ஆனால் இந்தத் துன்ப வருஷங்களில் 'எதுவும் முற்றிலும் சிரமமில்லை, எதுவும் அசாத்தியமில்லை' என்ற பாடம் கற்றுக் கொண்டேன். நவாப் வீட்டு ஜனானாவில் வளர்ந்த பெண்ணுக்குத் தொடக்கத்தில் சங்கடங்கள் கடக்கத் தகாதன என்று தோன்றுதல் இயல்பே. ஆனால் அந்த எண்ணம் பொய்க் கற்பனை. கூட்டத்தின் நடுவே துணிந்து புகுந்தால் ஒரு வழியில்லாவிடின் மற்றொரு வழி புலப்படத்தான் செய்யும். அது ராஜவழியல்லாதிருக்கலாம். மனிதரைத் தத்தம் விதிப்படி கொண்டு செல்லும் அவ்வழி காடு முரடான வழியாகலாம். பலவாறான வளைவு மிகுந்த எல்லையற்ற வழியாகலாம். மகிழ்ச்சிகளோ, துயரங்களோ தடைகளோ நிறைந்த வழியாகலாம். ஆனால் எப்போதும் ஒரு வழி நிச்சயமாக உண்டு.




''மனிதரின் சாதாரண கதியாகவே இந்தப் பாதையில் நான் புரிந்த ஞ்சாரங்களின் கதை கேட்க ரஸப்படாது. பட்டாலும் முழுதும் சொல்ல எனக் ுச் சக்தியில்லை. சுருக்கக் கூறில், நான் படாத கஷ்டமாவது, விபத்தாவது, அவமதிப்பாவது பூமியிலில்லை. அப்படியிருந்தும் எனக்கு உயிர் வாழ்க்கை சகிக் த் தக்கதாகவே யிருந்தது. ஆகாச வாணத்தைப் போல் எரிய, எரிய, மேலே றக்கலானேன். வேக உணர்ச்சி யிருந்தவரை எரியும் நோவு தெரியவில்லை. னது பரம சந்தோஷம், பரம துக்கம், இரண்டு வகையான தீயும் அவிந்த டனே, அலுத்துக் களைத்துப் போய் மண்மீது வீழ்ந்தேன். ன் யாத்திரை இன்று தீர்ந்தது. என் கதை முடிந்தது!'' ன்று சொல்லி நிறுத்தினாள்.

நான் தலையை அசைத்து 'இது சரியான முடிவன்று' ன்று என் மனதிலே சொல்லிக்கொண்டேன். பிறகு, அவளை ோக்கி என் சிதைந்த ஹிந்துஸ்தானியில், ''ராஜகுமாரியே! ான் சொல்வது அவமரியாதையானாலும் பொறுக்க வேண்டும். னுள் கதையின் முடிவை இன்னும் சற்றே தெளிவுபடுத்தினா லொழிய என்னுடைய மனம் ஆறுதல் அடையாது'' என்றேன்.


நவாபின் மகள் புன்னகை செய்தாள். எனது சிதைந்த ஹிந்துஸ்தானி பலிதமாயிற்று. நான் அதி சுத்த பாஷையில் ேசியிருந்தால், அவள் தன் மனமின்மையை எளிதில் வெளி ிருக்க மாட்டாள். எனது பாஷைக் குறையே ஒரு திரை ோல் உதவிற்று. அவள் மேலும் கதை சொல்லுகிறாள்:

'கேசவனைப் பற்றி இடையிடையே சமாசாரம் காதில் ிழுந்து கொண்டிருந்தது. ஆனால் நான் அவனை நேரே ந்திக்க முடியவில்லை. அவன் தாத்தியா தோபே என்ற





கலகத் தலைவனுடன் சேர்ந்து கொண்டான். புயற் காற்றைப் போல ஒரு சமயம் கிழக்கே தோன்றுவான். மற்றொரு சமயம் மேற்கே கிளம்புவான். பின் அதுபோலவே திடீரென்று மறைவான். நான் யோகி வேஷம் தரித்துக் கொண்டு காசிக்குப் போனேன். அங்கு சிவானந்த சுவாமி என்பவரைப் பிதா முறை கொண்டாடி அவரிடம் ஸம்ஸ்கிருத சாஸ்திரம் படித்துக் கொண்டிருந்தேன். ஹிந்துஸ்தானத்தின் எல்லாத் திசைகளினின்றும் அவருக்குச் செய்திகள் வந்து கொண்டிருக்கும். நான் அவரிடம் பக்தி சிரத்தையாக சாஸ்திரம் படிப்பது ஒரு புறம் நடக்க, மற்றொருபுறம் சண்டைச்செய்திகளைப் பயங்கரமான ஆவலுடன் கேட்டு வரலானேன். கலகத் தழல்களை நாடெங்கும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் மிதித்தழித்து விட்டார்கள். அப்பால் எனக்குக் கேசவலாலைப் பற்றிய செய்தி யொன்றும் கிடைக்கவில்லை. சம்ஹாரத்தின் சிவந்த ஒளியில், தொலைவானத்தடியில் இடைவிடையே தோன்றிய ரூபங்கள் திடீரென்று இருளில் மறைந்து விட்டன. பிறகு நான் குருவின் ஆசிரமத்திலிருந்து வெளியேறி நாடுமுழுவதிலும் கேசவலாலை வீடு விடாகத் தேடினேன். பல தீர்த்த யாத்திரை ஸ்தலங்களுக்குப் போனேன். அவனைக் காணவில்லை. போர்க் களத்திலேனும், அப்பாலேற்பட்ட ராணுவச் சட்டத்திலேனும் கொலையுண்டிருப்பானென்று அவனை அறிந்தவர் சிலர் கூறினர். ஆனால் எனது இருதயத்துக்குள்ளே ஒருசிறு குரல் அப்படி எப்போதும் நடக்காதென்று சொல்லிக் கொண்டேயிருந்தது! எரியும் தழல்போன்ற அந்தப்பிராமணன் கேசவலால் சாகவே மாட்டானென்றும், அணுகுதற்கு அரியதொரு தனிக் கோவிலில் அந்தத் தீ என் உயிர் பலிக்கும் ஆத்ம பலிக்கும் காத்துக் கொண்டு தழலாக நிற்குமென்றும் என் மனம் சொல்லிற்று.



''ஹிந்து இரத்தங்களில் தனித்த ஜாதியான் தவத்தால் பிராமணனாகிய திருஷ்டாந்தங்கள் பல உள. ஆனால் பறமதியர் பார்ப்பாராகலாமோ என்ற விஷயம் இதுவரை வாதிக்கப் படவில்லை. கேசவலாலுடன் ஐக்கியப்படு முன்பு நான் பிராமணத்தியாக வேண்டுமாதலால், அதற்குக் கொடிய தாமதம் ஏற்படுமென்பதை உணர்ந்து கொண்டேன். இன்னம் முப்பது வருஷங்கள் கழிந்தன. என் மனத்திலும் ஆசாரங்களிலும் பிராமணத்தியாகி விட்டேன். என் பிராமணப் பாட்டியின் இரத்தம், எனது நாடியில் மறுபடியும் சுத்தமாய், அவயவங்களிலே துடித்தது. இது சித்தியானபின், என் லோகத்துக்கு ஒரே தனிப் பிராமணன் கேசவலால்தான் இருந்தான். எனது இளமையின் மூதற் பிராமணனுடைய அடிக் கீழ் நான் வீற்றிருப்பதையும் என்னுடைய முடியைச் சூழ அதனால் ஒரு பிரபா மண்டலம் வீசுவதையும் மானஸிகமாகக் காணலானேன்.

''சிப்பாய்ச் சண்டையின் போது கேசவலால் காண்பித்த வீரத்தைப் பற்றி நான் கேள்வியுற்ற கதைகள் பல. ஆனால் அதுவெல்லாம் என் மனத்தில் படியவில்லை. என் மனத்தின் முன்னே எப்போதும் ஒரே சித்திரந்தான் நிற்கிறது. அது யாதெனில், அந்தத் தோணி: அதில் கேசவலால்; யமுனையின் சாந்தமான, நிலவுபட்ட திரைகளின் மீது அந்தத் தோணி செல்லும் தோற்றத்தையே இரவும் பகலும் கண்டேன். பாதையற்ற ரகசியத்தை நோக்கி அந்தத் தோணி சென்றது. ஒரு துணையில்லை. சேவகனில்லை. அவன் பிராமணன். அவனுக்கு யாரும் வேண்டியதில்லை. தனக்குத் தானே நாதன்.

''கடைசியாகக் கேசவலாலைக் குறித்துச் செய்தி கிடைத்தது. அவன் தண்டனைப்படாமல் தப்பும் பொருட்டாக நேபாள ராஜ்யத்தின் எல்லைக்குள் சென்று விட்டான் என்று கேள்வியுற்றேன். நானும் நேபாளத்துக்குப் போனேன். நெடுங்காலம் அங்கு செலவிட்ட பின்பு, அவன் நேபாளத்தை விட்டுச் சென்று விட்டானென்றும், போன இடம் யாருக்குமே தெரியாதென்றும் தெளிவுபட்டது. அது முதலாக நான் மலைக்கு மலை சுற்றிக் கொண்டு வருகிறேன். இந்தப் பிரதேசம் ஹிந்துக்கள் வாழ்வதன்று. மிலேச்சராகிய பூத்தானிய ஜாதியாரும், லெப் சாதியாரும் வாழுமிடம். இவர்களுக்குஆசாரநியதிகள் கிடையா. தெய்வங்கள் வேறு; பூஜா விதிகள் வேறு; நான் பிராமணத்தியாய் விட்டபடியால், இவர்களிடையே அகப்படாதிருக்க வேண்டுமேயென்று குடல் பதறிக் கொண்டிருந்தேன். எனது தோணி துறையை அணுகி விட்டது. அதாவது மனுஷ்ய வாழ்க்கையின் அந்தம் சமீபித்து விட்டதென்று என் புத்தியில் பட்டது. அப்பால்...எப்படி முடிப்பேன்? எதிலும் முடிவு சுருக்கமாகத்தான் இருக்கும். விளக்கை அவிக்க ஒரு மூச்சு போதும். நீண்ட கதையாக வளர்ப்பதில் பயனில்லை... முப்பத்தெட்டு வருஷத்துப் பிரிவுக் கப்பால் இன்று காலையில் கேசவலாலைக் கண்டேன்'' என்று சொல்லி நிறுத்தினாள். மேலே கதை தெரியவேண்டுமென்ற ஆவலை என்னால் அடக்க முடியவில்லை. ''எவ்வாறு கண்டீர்?'' என்று கேட்டேன்.

கேசவலால் கிழவனாய், ஒரு பூத்தானிய கிராமத்தின் கொல்லையில் கோதுமைப் பதர் வேறு தானியம் வேறாகப் பிரித்துக் கொண்டிருந்தான். அருகே அவனுடைய பூத்தான் ஜாதிப் பெண்டாட்டியும், பூத்தானியப் பேத்திகளும் சூழ்ந்து நின்றனர்'' என்று கூறித் தன் கதையை ஸமாப்தி பண்ணினாள்.

அவளுக்கு ஆறுதலாகச் சில வார்த்தைகள் சொல்ல வேண்டி, ''மிலேச்சருடன் ஒரேயடி

HEWLETT'S
MIXTURE



ஹியூலெட்ஸ்
மிக்ஸர்

80 ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஔஷதம் அஜீர்ணம், வயிற்றுக் கோளாறுகள், நெஞ்செரிச்சல், வாயு பொருமல் புளிப்பு, குடல் வியாதிகள் இவற்றிற்கு முக்கிய பரிகாரமாக உலக முற்றிலும் பெயர் பெற்று விளங்கி வருகிறது. அபினி சேர்த்தும், அல்லாமலும் 4 அவுன்ஸ், 10 அவுன்ஸ் அளவுகளில் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

C. J. HEWLETT & SON
(INDIA) PRIVATE LTD.;
MADRAS-3.



கூந்தல் மற்றும் மூளை அபிவிருத்திக்கான தைலம்

செழுமையாகக் கூந்தல் வளர உதவுகிறது. வழுக்கையைத் தடுப்பதுடன் கேசம் உதிர்வதையும் நிறுத்துகிறது. ஞாபக சக்தியை அதிகரித்து ஆழ்ந்த நித்திரையை அளிக்கிறது. எல்லோருக்கும் எக்காலத்திலும் ஏற்றது.

பெரிய பாட்டில்	ரூ.	3 - 50
சிறிய பாட்டில்	ரூ.	2 - 00

எங்கும் கிடைக்கும்

ராம்தீர்த்
பிராம்மி எண்ணெய்

ராம்தீர்த் யோகாஷ்ரமம்
பம்பாய்-14. (C. Rly)

சென்னை டெப்போ:
4/441, தங்கசாலைத் தெரு, சென்னை

யாக முப்பத்தெட்டு வருஷங்கள் குடியிருந்த மனிதன் வைதிக ஆசாரங்களை எப்படிக் காப்பாற்றி விரும்பான்?'' என்றேன்.

நவாபின் மகள் சொல்லுகிறாள்: — ''அதெல்லாம் எனக்கு அர்த்தமாக வில்லையென்று நினைக்கிறீரா? இத்தனை ஆண்டுகளாக என் நெஞ்சிலே சுமந்து திரிந்த மோஹந்தான் யாதோ! யுவதிப் பருவத்திலே என் உள்ளத்தைத் திருடிய அந்தப் பிராமணனுடைய மந்திரந்தான் யாதோ! அவனுடைய பிராமணத்தன்மை வெறுமனே, ஒரு வாடிக்கை தானென்று நான் சம்சயப்பட இடமில்லாமல் போயிற்றே! அதை சத்யம், நித்ய சத்தியமென்று நினைத்தேன்! இல்லா விட்டால் என் யௌவனத்தையும், உடலையும் மனத்தையும் கொடுத்ததற்குக் கைம்மாறாக அவன், —நான் பதினாறாண்டாக இருக்கையில் முதல் தரம் என் தந்தை வீட்டை விட்டு வெளியேறினவுடனே, பக்தி பரவசத்தால் புனிதையாக இருந்த என்னை, அவன்-அந்தப் பிராமணன் சடேலென்று கன்னத்தில் அடித்த சகிக்க முடியாத அவமானத்தைக்கூட நான் குருதீக்ஷையென்று நினைத்திருப்பேனே? ஹா! பிராமணா! நீ பழைய ஆசாரத்தை விட்டுப் புதிய ஆசாரத்தைக் கைக்கொண்டாய். நான் இழந்துவிட்ட இளமைக்கும், உயிருக்கும் மற்றோர் இளமையும், மற்றோர் உயிரும் எனக்கு எப்படி வரும்?''




இந்தத் துக்கமயமான வாக்கியத்தைச் சொல்லி விட்டு அவள் எழுந்து நின்று, ''நமஸ்கார், பாபூஜி!'' என்றாள். உடனே தன்னைத்தான் திருத்திக் கொண்டு, ''ஸலாம் ஸாஹப்!'' என்றாள்.

இந்த மஹமதிய ஆசீர்வாதம்கூறி, மண் புழுதியிலே பிராமண தர்மங்கள் சிதறிக் கிடந்த கோலத்தை எனக்குக் காண்பித்து விட்டுச் சென்றாள். நான் மற்றொரு வார்த்தை சொல்லு முன் ஹிமாசலத்தின் வெள்ளிய மூடுபனியில் மறைந்து விட்டாள். ஒரு க்ஷண நேரம், கண்ணை மூடிக்கொண்டேன். அவளுடைய சரித்திரத்தின் செய்திகளெல்லாம் என் மனக்கண்ணுக்கு முன் மீண்டும் நிகழ்ந்து செல்லத் தொடங்கின.

அந்தப்புரத்தின் சாளரத்தி லிருந்து பதினறு வயதுக் கன்னிகை நவாபின் மகள், பாரசீகத்துக் கம்பளத்தின் மேலே உட்கார்ந்து கொண்டு யமுனையில் காலை ஸந்தியா வந்தனம் செய்த பிராமணனைப் பார்த்துக் கொண்டிருந்த கோலத்தையும், யாதேனுமொரு புண்ணிய க்ஷேத்திரத்தில் ஆலயத்திலே அவள் யோகினியாகப்போய் சாயங்கால தீபாராதனத்தைச் சோகத்துடன் ஸேவிக்கும் கோலத்தையும், டார்ஜிலிங் நகரத்திலுள்ள 'கல்கத்தா ரஸ்தா'வில் அவள் ஆசையுடைந்து போய், வளைந்து நின்ற கோலத்தையும் மனத்தில் கண்டேன்.

ஒரு ஸ்த்ரீயின் உடம்பில் இரண்டு உதிரம் கலந்ததில் உண்டான சோகமயமான இசையுடன் கம்பீர ஓசையால் பரிபூரணமான அழகுடைய அவள் பாஷையும் சேர்ந்து ஒலிப்பதை என் உள்ளத்திலே பார்த்தேன். பிறகு கண்களைத் திறந்து நோக்கினேன். மூடு பனி அகன்று விட்டது. காலை வெய்யிலின் ஒளியால் வெள்ளிய பனி மலையின் சிகரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. ஆங்கிலேய துரைசானிகள் ரிக்ஷா வண்டிகளில் உலா வந்தனர். துரைமார்கள் கம்பீரமாகக் குதிரை யேறிச் சென்றனர். இடையிடையே ஒரு வங்காளிக் குமாஸ்தா கழுத்துத் துணியாலே தலையை நன்றாக மூடிக்கொண்டு அதன் மடிப்புக்களுக்கிடையே என்னை விழித்து நோக்கி விட்டுப் தன் வழியே போய்க் கொண்டிருந்தான்.

ஆசனத்திலிருந்து எழுந்தேன். திறந்த நிர்வாணமான வெளியில் அந்த ஸ்த்ரீ சொல்லிய மேகமயமான மூடுபனிக் கதையை உண்மையென்று நம்புதல் சிரமமாயிருந்தது. குன்றுகளின் மூடுபனியுடன் 'ஸிகரெட்' புகையும் கலந்து வேலை செய்த மையத்தில் இதெல்லாம் கற்பனையில் தோன்றிய செய்திகளே யென்றும் மேற்படி பிராமண யுத்த வீரன், நவாபின் மகள், யமுனைக் கரைக் கோட்டை எல்லாம் வெறும் புகைதானென்றும் உறுதியாக நம்பலானேன்.



''கமல நிலையம்'' அதிபர் திரு மண்டயம் சீனிவாசாச்சாரியாரின் அனுமதியுடன் வெளியிடப் பெறும் இக் கதை இதுவரை பாரதி நூல் தொகுதிகளில் வெளி வராதது.

மாதர்குலதிலகங்கள்

ஸ்ரீமதி நாகசுப்பம்மாள்



'இந்த உலகத்தில் யாருடைய பெருமை பேசப்படுகிறது?' — என்று தனக்குத் தானே கேட்டுப் பார்த்துக் கொண்டான் ஒரு கவிஞன். "சந்தேகமே இல்லை! கொடுப்பவர்களின் பெருமை தான் பேசப்படுகிறது" என்று அவனே பதிலும் சொல்லிக் கொண்டான். 'கொடுத்துக் கொடுத்துக் கொடைத் தழும்பேறிய இரண்டு கைகளை வணங்க எனக்கு இன்னும் பல கைகளைத் தரவில்லையே'—என்று கொடையின் பெருமையை உணர்ந்த மற்றோர் புலவன் கூறியிருக்கிறான். அந்தப் புலவன் திருமதி நாக சுப்பம்மாளை நினைத்துத்தான் அப்படிக் கூறினானோ என்று தோன்றுகிறது.

திருமதி நாகசுப்பம்மாளுக்கு இப்போது எழுபத்தேழு வயது. தமிழ்ச் சிறப்பும், தெய்வீக நலமும் உடைய மதுரமா நகரிலே பிறந்தவர் இந்த மாதரசியார்.

சென்ற நூற்றாண்டில்—ஏன். சென்ற தலைமுறையில் மகான் மணி ஐயர் என்றால் தெரியாதவர்கள் இருந்திருக்க முடியாது. 'பல துறைகளிலும் பல கலைகளிலும் மணியாய் இலங்கினமையின் அவரை மணி ஐயர் என்று உலகம் அழைத்தது' — என்று திரு வி. க. பாராட்டியிருக்கிறார். இத்தகைய பெருந்தகையாளராகிய மணி ஐயரின் புதல்வரான திரு எம். எஸ். இராமசாமி ஐயருக்கு மனைவியாகும் பாக்கியம் நாகசுப்பம்மாளுக்குக் கிடைத்தது. திரு இராமஸ்வாமி ஐயர் போலீஸ் இலாகாவில் டெபுடி சூபரன்டெண்டாகப் பணியாற்றிப் பெருமை கொண்டவர்.

இராமண்ணா — நாகசுப்பம்மாள் இல்லறத்தின் பயனாகப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. 'நாகம்மாள்' என்று பெயரிட்டு மகிழ்ச்சியோடு வளர்த்து வந்தனர். நல்லவர்களை மகிழ்ச்சியுறச் செய்வதுதான் விதிக்குப் பிடிக்காத காரியமாயிற்றே! பெற்றுப் பெருவாழ்வு வாழ வேண்டிய பருவத்தில், திருமணமும் ஆனபின் க்ஷயரோகத்தின் கொடுமையால் காலஞ் சென்றாள் நாகம்மாள். மகளின் மரணம் நாகசுப்பம்மாளுக்கு வாழ்க்கையில் ஒரு பெரிய அதிர்ச்சியாக அமைந்தது. கணவரும் 1943ல் காலமாகவே துன்பம் நிறைந்த அவர் மனம் அறவழியில் திரும்பியது.

மகளின் சிறு பருவ மரணத்தைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் க்ஷய ரோகத்தின் கொடுமை நாகசுப்பம்மாளுக்கு நினைவு வரும். 1948-49ல் தஞ்சை மாவட்டத்திலுள்ள செங்கிப்பட்டி க்ஷய ரோக ஆஸ்பத்திரிக்கு நாற்பத்தொன்பது ஏக்கர் நன்செய் நிலமும், மூன்று ஏக்கர் புன்செய் நிலமும், தம் மகளின் நினைவுக்கு அறிகுறியாக நன்கொடை அளித்தார். பின்பு 1953ல் ராஜாஜி அவர்கள் முதன் மந்திரியாக இருந்தபோது, அவர்மூலம் ரூபாய் 25,000 அதே க்ஷய ரோக ஆஸ்பத்திரிக்கு நிதியாக வழங்கியிருக்கிறார்கள். மதுரை சேதுபதி உயர்தரக் கலாசாலையின் நடுவே ஒரு பெரிய ஹால் கட்டுவதற்காக ரூபாய் 25,000 நன்கொடை அளித்திருக்கிறார்.

மதுரை நகரில் மிகப் பழமையதும், பெரியதுமான நூல் நிலையம், விக்டோரியா எட்வர்டு ஹால் நூல் நிலையமாகும். நாகசுப்பம்மாள் இந்த நூல் நிலையத்திற்கு ஏராளமான புத்தகங்களை அன்பளிப்பாக வாங்கி அளித்திருக்கிறார்கள். சென்னை-மயிலாப்பூரிலுள்ள குப்புசாமி சாஸ்திரி வடமொழிக் கல்லூரிக்கும் அதன் நூல் நிலையத்துக்கும் பெரும் உதவி நிதிகளை வாரி வழங்கியிருக்கிறார்.

எழுபத்தேழு வயது நிறைந்த இந்த அம்மையாருக்கு இன்னும் எண்ணற்ற அறங்களையும், கொடைகளையும், உதவிகளையும் செய்ய வேண்டுமென்ற ஆசை பரிபூரணமாக நிரம்பியிருக்கிறது. தமிழ்த் திரு நாட்டின் நன்மைக்காகத் திருமதி நாகசுப்பம்மாள் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ வேண்டுகிறோம். —நா. பா.



யோகி சுத்தானந்த பாரதியாரின் அறுபதாவது பிறந்த நாள் வைபவம் ஆகஸ்ட் 29ம் தேதி சென்னை ராஜாஜி ஹாலில் சபா நாயகா டாக்டர் யு. கிருஷ்ணராவ் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. மந்திரிகளும், பிரமுகர்களும் விழாவில் கலந்து கொண்டு யோகியார் முத்தமிழுக்குச் செய்துள்ள அருந் தொண்டுகளைப் பாராட்டினர். திரு டி. கே. சண்முகம் யோகியாருக்கு மலர் மாலை சூட்டுவதைப் படத்தில் காணலாம்.



திரு கே. எஸ். ராமசாமி சாஸ்திரிகளின் எண்பதாவது பிறந்த தின விழா சென்னை திருவல்லிக் கேணிதேசியபெண்கள் உயர்தர பாடசாலையில் செப்டம்பர் 1ல நடை பெற்றது. இவ் விழாவில் டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர், சென்னை மேயர், திரு ஏ. ஜி. வெங்கடாச்சாரி முதலியவர்கள் திரு ராமசாமி சாஸ்திரிகள் செய்துள்ள தொண்டுகளைப் பாராட்டினர்.



சென்ற ஆகஸ்டு இருபத்தைந் தாம் தேதியன்று சென்னை திரு வல்லிக்கேணி, ஸ்ரீ பார்த்த சாரதி சுவாமி சபாவில்




திருமதி ருக்மணிதேவியின் கலாக்ஷேத்திரம் திருவான்மியூருக்குச் செல்லப் போகிறது. அதன் அஸ்திவார விழா ஆகஸ்ட் 31உ திரு சி. பி. ராமசாமிஅய்யர் தலைமையில் நடைபெற்றது. மைசூர் மகாராஜா அடிப்படைக் கல் நாட்டினார்.





நடைபெற்ற ஸ்ரீமதி எம். எஸ். எஸ். அவர்களின் கச்சேரியைக் கேட்கக் கூடியிருந்த மாபெரும் ரஸிகர் கூட்டம்.


வாழ்க மணமக்கள்




பம்பாய் தேவல் ஸ்டோர்ஸ் திரு ஏ. கே. சாமியின் புதல்வி செல்வி ருக்மிணியைத் திரு நரசிம்மாச்சாரியாரின் குமாரர் திரு சீனிவாசன் திருப்பதியில் மணம் புரிந்து கொண்டார்.




பம்பாய் டெலிபோன்ஸ் காரியாலயத்தைச் சேர்ந்த திரு எஸ். நாராயணன் புதல்வி சௌபாக்கியவதி லலிதாவுக்கும் வருமானவரி அதிகாரி திரு ஜி. கிருஷ்ணனுக்கும் விவாகம் நடந்தது.



திரு என். வி. சுப்பராமனுக்கும் உதவி இன்ஜினியர் திரு எம். ஆர். நாராயண அய்யரின் மருமான் செல்வி லோகாம்பாளுக்கும் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.



லைஃப் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் உதவி அபிவிருத்திக் காரியதரிசி திரு ஆர். சாமண்ணாவின் குமாரி பிரேமாவுக்கும் திரு ஏ. என். கோபாலாச்சாரிக்கும் சென்னையில் விவாகம் நடந்தது.



சென்ட்ரல் ரயில்வே அக்கௌண்டெண்ட் திரு சி. ராமநாதனுக்கும் திருமதி சுந்தராம்பாளுக்கும் ஆகஸ்ட் 21ந் தேதி திருநெல்வேலியில் திருமணம் நடந்தது.


உங்கள் விருப்பத்திற்கேற்ற அழகு
உங்கள் சருமத்தை இளமையுடனும், உள்ளத் துடிப்புடனும், புதுமையோடு பொலிவுடனும் வையுங்கள். இயற்கை எழிலின் மோஹனத் தோற்றத்துடன் எப்பொழுதும் விளங்குங்கள்.
"'ஹாஸலீன்' ஸ்னோ" உங்கள் சருமத்தை குளுமையாயும், வெண்மையாயும் வைப்பதோடு அதற்கு தனி அழகும் ஊட்டுகிறது. மற்றும் அது திருட இயலாத பாக்கிங்கில் கிடைக்கிறது.
"'HAZELINE' SNOW"
(TRADE MARK)
"'ஹாஸலீன்' ஸ்னோ"
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு
'HAZELINE' SNOW



சிக்கனம் அளிக்கும் வனஸ்பதியில் சமைத்த உணவுகள் ருசியோடிருப்பவை மற்றும் சக்தி அளிப்பவை என்பது விஷயம் தெரிந்த இல்லாள்களுக்குத் தெரியும்

அவள் குடித்தனம் ஆரம்பித்த நாளிலிருந்து 7,300 தடவைகள் சமைத்துள்ளாள்

வனஸ்பதி உபயோகித்தால் இல்லாள்களுக்கு மிகக் குறைந்த செலவில் அதிக போஷாக்கு வாய்ந்த உணவுகளைச் சமைக்கமுடியும்

அன்றாடம் இரண்டு தடவைகள் சமைப்பது, வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவது, குழந்தைகளைக் 'கட்டி மேய்ப்பது'—ஒரு இல்லாளின் அலுவல்களுக்கு எல்லையேது, முடிவேது! மற்றும் குடும்பத்தினர் வீடு திரும்பும்பொழுது, அன்றாட அலுவல்களை முடித்து, உற்சாகத்துடன் இருக்க வேண்டும். இதற்கெல்லாம் அவளுக்கு ஏராளமான சக்தி அவசியம்.

இல்லாளின் வரப்பிரஸாதம்

விஷயம் தெரிந்த இல்லாள்களுக்கு இந்த சக்தி அவர்கள் உணவிலிருந்து, அதிலும் முக்கியமாக, உணவிலுள்ள கொழுப்பு சத்திலிருந்து கிடைக்க வேண்டுமென்பது தெரியும். கொழுப்பு சத்து சக்தி அளிப்பதோடுமட்டுமின்றி, விடமின் 'ஏ' மற்றும் 'டி'யின் குணங்களை தேகத்திற்கு கிடைக்க உதவவும், வியாதிகள் மற்றும் களைப்பு ஏற்படாமல் தடுக்கவும் செய்கிறது. உணவில் இந்த கொழுப்பு சத்தை நிறையச் சேர்ப்பதற்காக இல்லாள்களில் பெரும்பாலோர் உணவுகளை தயாரிக்க வனஸ்பதியை உபயோகிக்கிறார்கள். சுத்தமானதும், போஷாக்கு சத்து வாய்ந்ததுமான இந்த தாவர கொழுப்பின் ஒவ்வொரு அவுன்ஸிலும் ஆரோக்கியமளிக்கும் விடமின் 'ஏ' 700 இன்டர்நேஷனல் யூனிட் சேர்க்கப்பட்டுள்ளது. வனஸ்பதியின் விலை மிகவும் குறைவானதால், அதை உபயோகித்தால், இதர உணவு பொருள்களை வாங்க அதிக பணம் மிச்சமாகும்! இந்தக் காரணங்களினால்தான் வனஸ்பதி இல்லாளின் வரப்பிரஸாதம் எனப் புகழ் பெற்றுள்ளது. சிக்கனமாகவும் சமையலுக்கும் சுத்தமான இந்தத் தாவர கொழுப்பு சத்தை உபயோகியுங்கள்!



வனஸ்பதி இல்லாளின் வரப்பிரஸாதம்

தி வனஸ்பதி மான்யுபாக்சரேர்ஸ் அஸோஸியேஷன் ஆப் இந்தியா ஸ்தாபனத்தினால் வெளியிடப்பட்டது

VHA. 4396

வீடு கட்டுவோம்!



★

செங்கல் வேண்டாம், சிமிண்டும் வேண்டாம்
செலவும் வேண்டாம் தம்பி — வெகு
சிக்கி ரமாய்க் கட்டிடலாம்
சிறந்த வீடு தம்பி.

இரும்பும் வேண்டாம், மரமும் வேண்டாம்,
எதுவும் வேண்டாம் தம்பி — மிக
எளிதில் நாமும் கட்டிடலாம்
இனிய வீடு தம்பி.

கொத்தர் வேண்டாம், தச்சர் வேண்டாம்
கொல்லர் வேண்டாம் தம்பி — ஒரு
குறையும் இன்றிக் கட்டிடலாம்
அருமை வீடு தம்பி.


கதவு வேண்டாம், ஜன்னல் வேண்டாம்
கம்பி வேண்டாம் தம்பி — நல்ல
காற்று உண்டு, வெளிச்சம் உண்டு
கவலை வேண்டாம் தம்பி.

காசு, பணம், கருவி பற்றிக்
கவலை ஏனோ தம்பி — நாம்
கடற் கரையில் மணலில் வீடு
கட்டுதற்குத் தம்பி ?

★

அழ. வள்ளியப்பா





எவ்வளவு யோசித்தும் காசிமுக்கு ஆமீரா வைக் காப்பாற்றுவதற்கு ஏற்ற வழி புலப் படவில்லை. நேரமோ ஓடிக் கொண்டிரு ந்தது. அங்கு மேஜையின் மீது கிடந்த ஒரு


புத்தகம் அவன் கண்களில் பட்டது. பல விதமான மாயங்களைச் செய்யும் மந்திரங்கள் அடங்கிய புத்தகம் அது. அதில் ஏதாவது ஆமீராவை மாற்ற வழி கிடைக்குமோ






என்று படிக்கலானான். அப்போது அவன் முன்பே கேட்டிருக்கப்படாத ஒரு சத்தம் உண் டாயிற்று. காசிம் திகைத்து நின்று கேட்டான். அது பக்கத்தில் மேஜை மேல்


தான் அவன் படித்துக் கொண்டிருந்தான். காசிமுக்கு ஒன்றுமே தோன்றவில்லை கூப்பிட்டு டன் தடுத்து அவனை ஒரு மெல்லிய குரல் அழைத்தது. திடுக்கிட்டுத் திரும்பினான்.





அங்கு அவன் கண்ட காட்சி என்ன? ஒரு சுண்டெலி இவனைப் பார்த்துக் கேட்டது: "காசிம்! இந்த சீசாவிலுள்ள திரவத்தை மேலே சீக்கிரம் தெளித்துக்கொள்"

என்று குரல் பதைத்தது எலி. அவன் உடனே சீசாவை வாங்கித் திறந்து. எலி சொன்னபடி வெள்ளி போலப் பளபளத்த திரவத்தைத் தன் மீது தெளித்துக் கொண்டான்.



அவன் தலை 'கிர்' என்று சுற்றியது. அடுத்த வினாடி சுருங்கிச் சுருங்கிச் சிறிய எலியின் உயரத்துக்கு வந்து விட்டான். அப்போதும் அபூதா உள்ள பாட்டிலைக்



கை விட வில்லை. மயக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட மாலிக் அழுக்குப்படி தன் இடையைத் தடவிக் கொண்டான். மந்திர பெட்டியையும் கொத்துச் சாவியையும் காணவில்லை.



தான் வஞ்சிக்கப்பட்டதை அறிந்த மாலிக்கின் கோபம் எல்லையாகக் கொதி எழுந்தது. பயங்கரமாகக் கத்தினான். அந்தக் கற்கோட்டையே 'கிடுகிடு' என்று அதிர்ந்தது. அவன் நடந்து வந்த வேகத்தில் கோரமான புயல் காற்று உண்டாயிற்று. தன் மந்திர அறையை நோக்கி மாலிக் ஆவேசமாக வந்து கொண்டிருந்தான். அப்போது.......



மந்திர அறைக்குள் சுண்டெலி கரீமிடம் சொல்லிற்று. "நான் பச்சைப் புகை பூதத்தின் நண்பன். உன் உடலில் தெளித்துள்ள சுருங் (கும்) தன்மையுள்ள திரவம் காயுமுன் நாம்



இங்கிருந்து கிளம்பியாக வேண்டும். திரவம் காய்ந்து விட்டால் உன் பழைய உருவம் வந்து விடும். என்னைத் தொடர்ந்து ஓடி வா" என்று விரைந்தது எலி. (தொடரும்)



24. கார்குருவின் வஞ்சம் !

மறுநாள் காலையில் மந்திர ஜமக்காளத்தையும், பந்தையும் மந்திரக் கிழவி கலாவிடமும், மால்கோஷிடமும் திருப்பிக் கொடுத்தாள். இரண்டு பேரையும் அன்புடன் கட்டிக்கொண்டு ஆசிர்வதித்து அனுப்பினாள். மால்கோஷும், கலாவும் மந்திர ஜமக்காளத்தில் தங்கள் வீடு இருக்கும் திக்கை நோக்கிப் பறந்து கொண்டிருந்தார்கள். போகும் மார்க்கத்தில் இரண்டு மூன்று இடங்களில் களைப்பு மேலிட்டதால் தங்க வேண்டி வந்தது. ஆனால் அங்கே விசேஷ சம்பவங்கள் ஒன்றும் நடைபெறவில்லை. ஒருநாள் காலையில் மால்கோஷும், கலாவும் பறக்கும் ஜமக்காளத்தில் சென்று கொண்டிருக்கும்பொழுது ஒரு காக்கை இவர்கள் சென்று கொண்டிருக்கும் ஜமக்காளத்துக்குச் சற்றுத் தூரத்துக்கு அப்பால் பறந்து கொண்டிருந்தது. சற்றுத் தூரத்தில் பறந்து கொண்டிருந்த காகம் வரவர நெருங்க ஆரம்பித்தது. யாராவது மந்திரவாதி காக்கை உருவம் எடுத்துத் தங்களிடம் நெருங்கி வருகிறானோ என்ற பயம் அவர்களுக்கு உண்டாயிற்று.

அந்தப் பொல்லாத காக்கை அவர்களை விடுவதாக இல்லை. அப்பொழுது அவர்களிடம் நெருங்கிப் பறந்தது. அந்தக் காகத்தைச் சமீபத்தில் பார்த்தவுடன் மால்கோஷுக்கும், கலாவுக்கும் தூக்கிவாரிப் போட்டது. ஏனென்றால் அந்தக் காக்கை அதன் இரண்டு கால்களிலும் இரண்டு பெரிய செருப்புகளைத் தூக்கிச் சென்றது.

"கலா! சந்தேகமில்லை. இந்தக் காக்கை ஏதோ மந்திரவாதியாகத்தான் தோன்றுகிறது. இல்லாவிட்டால் அதன் கால்களில் செருப்பு எதற்காக இருக்க வேண்டும்? நமக்கு வீடு திரும்பும் சமயத்தில் ஏதோ ஒரு புதிய ஆபத்து வருகிறதுபோல் தெரிகிறது. எவ்வளவோ கஷ்டங்களைக் கடவுளின் கிருபையால் சமாளித்து விட்டோம். இந்தக் காகம் என்ன பண்ணுகிறது என்று பார்க்கலாம். நீ பயப்படாமலிரு" என்று மால்கோஷ் கூறினான். கலா "அண்ணா! நீ என் பக்கத்தில் இருக்கும்பொழுது நான் ஏன் பயப்பட வேண்டும்? அண்ணா! எதுவந்தாலும் என்னை மாத்திரம் தனியாக விட்டுவிட்டுப் போய்விடாதே" என்றாள்.

"உன்னை இனிமேல் தனியாக விட்டுவிட்டு எங்கும் போகமாட்டேன். இது நிச்சயம். நீ கவலைப்படாதே" என்றான் மால்கோஷ். தன்னைக் கவனிக்காமல் மால்கோஷும், கலாவும் பேசிக்கொண்டு போவதைப் பார்த்துக் காகம் கோபமடைந்தது. அதனால் ஜமக்காளத்தில் பறந்துகொண்டு செல்லும் கலாவுக்கு முன்னால் இப்படியும் அப்படியுமாகப் பறந்தது. அந்தக் காகம் செய்த உபத்திரவத்தினால் கலா சரியாக ஜமக்காளத்தைப் பறக்கவிட முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் அந்தக் காகம் தனது கால்களில் உள்ள செருப்புடன் ஜமக்காளத்தில் வந்து உட்கார்ந்தது.

மால்கோஷ் காக்கையை விரட்டினான். காக்கை அசையாமல் மால்கோஷினிடம் நெருங்கியது. காகத்தைப் பிடித்து அதற்கு ஒரு பாடம் கற்பிக்கலாம் என்ற நோக்கத்துடன் காக்கையின் வாலைப் பிடிக்கப் போகும் சமயத்தில் அவ்விடத்தில் காகத்தைக் காணவில்லை. அதற்குப் பதிலாக ஏற்கனவே இவர்களைச் சந்தித்த மந்திரவாதி கார்குர் கால்களில் செருப்புடன் அங்கே நின்றான். மால்கோஷ் என்ன பண்ணுவது என்று தெரியாமல் விழித்தான். கலாவும் பயந்து நடுங்கினாள்.

"கலா! ஏன் என்னைப்பார்த்துப் பயப்படுகிறாய்? நான் உங்கள் இருவரையும் ஒன்றும் செய்யமாட்டேன். என்றால் இனிமேல் ஒரு உபத்திரவமும் வராது. ஆகாயத்தில் கட்டப்பட்டிருந்த மாளிகையிலிருந்து கார்குரை ஏமாற்றித் தப்பிப் போய் விட்டோம் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அப்பொழுது தப்பிப் போனதைப் பற்றி நான் கோபம் கொள்ளவில்லை. யாரும் தங்களுக்குப் பிடிக்காத ஒருவனிடமிருந்து தப்பித்துக் கொள்ளத்தானே பார்ப்பார்கள்? உங்களை அநாவசியமாக வந்து உபத்திரவப்படுத்துவதற்கு எனக்கு விருப்பமில்லை. ஆனால் இந்த அழகான பறக்கும் ஜமக்காளத்தைப் பெறவே ஆசை கொண்டு வந்திருக்கிறேன். என்னை ஏமாற்றாமல் 'என்னிடம் அதைக் கொடுத்து விடுங்கள்" என்று கேட்டான் கார்குர்.

அவர்கள் இருவரும் மௌனமாக இருப்பதைப் பார்த்த கார்குர், "நீங்கள் இரு





வரும் யோசித்துப் பதில் அளியுங்கள். கொஞ்சம் அவகாசம் தருகிறேன். நீங்கள் இரண்டு பேரும் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வாருங்கள். நான் போய்ப் பத்து நிமிஷம் கழித்து வருகிறேன்'' என்று ஏதோ சில மந்திரங்களை உச்சரிப்பதுபோல உச்சரித்தான். அடுத்த நிமிஷம் கால்களில் செருப்புடன் காகமாக மாறிப் பறந்து சென்றான். அவன் போனதும் மால்கோஷ், ''கலா! நீ ஜமக்காளத்தை மிகவும் ஜாக்கிரதையாக எவ்வளவு சாத்தியமோ அப்படிப் பூமிக்கு அருகிலேயே செலுத்து. ஒரு வேளை நம்மைக் கார்குர் கோபத்தில் கீழே தள்ளிவிட்டாலும் விடலாம். அப்பொழுது நாம் வெகு உயரத்தில் பறந்து சென்றால் நமது உயிருக்கே ஆபத்து வந்துவிடும்'' என்று கூறினான்.

''அண்ணா! நீ சொல்லியபடியே பூமிக்குச் சமீபத்தில் மிகவும் ஜாக்கிரதையாக ஜமக்காளத்தைப் பறக்க விடுகிறேன். நம்மிடமிருந்து பறக்கும் ஜமக்காளத்தைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் அவன் போக மாட்டான். ஏதாவது ஒருவழி பண்ண வேண்டும். அண்ணா! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அப்படிச் செய்தால் நமது காரியம் கைகூடும். இங்கே வா சொல்லுகிறேன்'' என்று அவன் காதில் இரகசியமாக ஏதோ சொன்னாள். ''சபாஷ், கலா! நீ சொல்லிய யோசனை மிகவும் பிரமாதம். கார்குர் திரும்பி வந்தவுடன் நீயே அவனுடன்பேசு. ஜமக்காளத்தை உயரப் பறக்க விடாதே. கீழாகப் பறக்க விட்டுக் கொண்டு போ. நினைவு இருக்கட்டும்'' என்று மால்கோஷ் சொல்லிவிட்டுக் கலாவுக்குப் பின்புறம் உட்கார்ந்தான்.

அடுத்த நிமிஷம் காக்கை வடிவம் கொண்ட கார்குர் காலில் செருப்புடன் ஜமக்காளத்தில் உட்கார்ந்தான். பிறகு காகத்தின் உருவம் மாறிக் கார்குராக நின்றான். ''என்ன, இரண்டு பேரும் யோசித்தீர்களா? உங்கள் முடிவைச் சீக்கிரம் சொல்லுங்கள்'' என்று கேட்டான் கார்குர்.

''பறக்கும் ஜமக்காளத்தை உங்களிடம் கொடுத்துவிட்டு, உங்கள் செருப்பை அதற்குப் பதிலாக வாங்கிக் கொள்ளலாம் என்று தீர்மானித்திருக்கிறோம்'' என்று கூறினாள் கலா.

அதைக்கேட்ட கார்குர் ''சபாஷ்! உங்கள் முடிவு சரியான முடிவு. ஜமக்காளத்தைக் கீழே இறக்கு. ஜமக்காளத்தை எப்படி உபயோகிப்பது என்று எனக்குக் காண்பித்துவிட்டு என் செருப்பை எடுத்துக் கொள்ளுங்கள். சீக்கிரம் கொடுங்கள். பிறகு உங்கள் இருவருடைய மனமும் மாறினாலும் மாறிவிடும்'' என்று அவசரப்பட்டான்.

'' சற்றுப் பொறுங்கள். நீங்கள் எங்களுடைய மந்திர ஜமக்காளம் ஆகாயத்தில் பறந்து போவதைப் பார்த்தீர்கள். எங்களுடைய ஜமக்காளத்தின் உபயோகத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டீர்கள்.



ஆனால் நீங்கள் அணிந்து கொண்டிருக்கும் செருப்பு உண்மையாகவே நீங்கள் கூறிய படி ஒரு நடைக்கு ஒரு மைல் போகும் என்பதை நாங்கள் எப்படி முதலில் தெரிந்து கொள்ளுவது ?'' என்றாள்.

உடனே அவசரமாக அவன், "கலா ! உனக்கு அதைப் பற்றிச் சந்தேகம் வேண்டாம். அதன் சக்தியை இப்பொழுதே நிரூபிக்கட்டுமா ?'' என்று கேட்டான்.

"அதுதான் சரி. இப்பொழுதே நிரூபித்துக் காட்டுங்கள், பார்க்கலாம்'' என்று கூறினாள் கலா.

"இதோ பாருங்கள்'' என்று செருப்புடன் தனது வலது காலை முன்னே வைத்தான். அவன் ஏற்கெனவே கூறியபடி அவன் முன் கால் அரை மைல் தூரம் சென்றது. அதனால் அவன் எதிர்பாராத விதமாக ஜமக்காளத்திலிருந்து கீழே விழும்படி ஏற்பட்டது. மால்கோஷும், கலாவும் தன்னை ஏமாற்றி விட்டார்கள் என்பதைக் கார்குர் அரை நொடியில் தெரிந்து கொண்டான். அதனால் அந்தப் பொல்லாத கார்குர் என்ன செய்தான் தெரியுமா ? தான் கீழே விழப் போவது தெரிந்தவுடன் தனது இடது கையால் மால்கோஷின் தலை மயிரைப் பிடித்துக் கொண்டு அவனையும் தன்னுடன் இழுத்துச் சென்றான்.

எதிர்பாராத விதமாகத் தன்னைத் திடீரென்று கார்குர் தூக்கிச் செல்லுவதைப் பார்த்த மால்கோஷ், "ஐயோ ! என்னை விட்டு விடு'' என்று கத்தித் தன்னால் ஆன வரையிலும் கார்குருவின் பிடிகளிலிருந்து தப்புவதற்கு பிரயத்தனித்தான். ஆனால் அது முடியவில்லை.

அரை மைலுக்கு அப்பால் மிகவும் சிரமப்பட்டுக் கீழே விழாமல் மால்கோஷுடன் பூமிக்கு வந்தான். ஜமக்காளம் பூமிக்குச் சமீபத்தில் பறந்து சென்றது, கார்குருவுக்குச் சௌகரியமாக இருந்தது.

கார்குர் கீழே இறங்கியது ஒரு பெரிய ஏரிக்கு மிகவும் சமீபமாகத் தான். தனது பக்கத்தில் நடுங்கிக் கொண்டிருந்த மால்கோஷைப் பார்த்து மிகுந்த கோபத்துடன், "ஏ, மால்கோஷ்! நீங்கள் இருவரும் என்னை என்னவென்று நினைத்துக் கொண்டிருந்தீர்கள் ? உன் தகப்பனார் மீதுள்ள வஞ்சத்தையும், என்னை நீயும் கலாவும் சேர்ந்து ஏமாற்றிய குற்றத்துக்கும் உன் மீதுதான் என் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளப் போகிறேன். அது நிச்சயம்'' என்று கூறினான் கார்குர்.

உடனே மால்கோஷ், "நீங்களோ பெரியவர். நாங்கள் தெரியாமல் ஏதாவது குற்றங்கள் செய்தாலும் நீங்கள்தானே எங்களை மன்னிக்க வேண்டும் ? தயவு செய்து என்னை உடனே என் தங்கையிடம் சேர்த்து விடுங்கள். அவளோ ஒரு பெண். தனிமையாக ஒரு இடத்துக்கும் போனதில்லை. நாங்கள் ஊர் சென்றதும் எங்கள் தகப்பனாரிடம் கேட்டுக் கட்டாயம் உங்களுக்கு அந்தப் பறக்கும் ஜமக்காளத்தைத் வாங்கித் தருகிறேன்'' என்று கெஞ்சிக் கேட்டான்.

"மால்கோஷ்! நீ திரும்பி உன் தங்கையைச் சந்திப்பது என்பது இனிமேல் உன் கனவிலும் நடக்காத காரியம். உன் தங்கை தனிமையாக இருந்ததில்லை என்று நீ இப்பொழுது அங்கலாய்த்துப் பேசுகிறாயே, அந்த நினைவு என்னைச் சாமர்த்தியமாகக் கீழே தள்ளுவதற்கு முன்னால் அல்லவா இருந்திருக்க வேண்டும் ? நீ இனிமேல் கலாவை மறந்து விட வேண்டியதுதான். அவளைச் சந்திக்க நான் உனக்குச் சந்தர்ப்பமே அளிக்க மாட்டேன். இது நிச்சயம். இதோ பார். உன்னைத் தூக்கிக் கொண்டு இப்பொழுதே இதை விட்டுப் புறப்பட்டுப் பல மைல்களுக்கப்பால் இருக்கும் என் வீட்டுக்கு அழைத்துப் போகப் போகிறேன்'' என்று கார்குர் மால்கோஷை நெருங்கினான்.

அடக்க முடியாத துக்கம் மேலிட்ட மால்கோஷ் மயக்கம் அடைந்து 'தடால்' என்று பூமியில் விழுந்தான். (தொடரும்)

சத்யவைத்யசாலை (பிரைவேட்) லிமிடெட். நஞ்சன்கூடு ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
குழந்தைகளுக்கு: காஸ்மஸ் (கஸ்தூரி மாத்திரை), கர்ஜன் (கோரோஜனை மாத்திரை), பாலக்ஸ் (பேதியாக மாத்திரை)

நஞ்சன்கூடு-பல்பொடி உள்பட 54 மருந்துகள்

விவரப் புத்தகத்திற்கு எழுதுக

ஆல்மன்டைன் ([illegible]), ஸ்வாஸ்கோ ([illegible]), மெப்சன் (ஜீரண விருத்திக்கு)

சியவனப்ராச (சுவாச டானிக்) 3-25 கண்டாமலக லேகியம் (குரல் பை உபாதைக்கு) 1-75
ஆல்மண்டைன் (நரம்புத் தளர்ச்சிக்கு வீர்ய விருத்திக்கு) 6-00
ஹிமஸாகரதைலம்: (மூளைக்கு சிறந்த தைலம்) 1-75 ஜ்வரேக்: (சகல ஜ்வர நிவாரணி) 1-00

சோல் ஏஜன்டு: யுனைடெட் கன்சர்ன், 54, பந்தர் தெரு, சென்னை ○ கிளைகள்: மதுரை: 42, தெற்காவணி. ○ கோவை: 117, தாமஸ் தெரு. ○ பம்பாய்-மாதுங்கா: 227, விசலங்பவன் தேவதார் ரோடு

அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்

கால்கேட் டெண்டல் கிரீம்

85% கிருமிகளை ஒழிக்கிறது

சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை



மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!

கால்கேட் டூத் பிரஷ்

DCG/24 R2

புதிய **ஐடியால்-3**

இணையற்ற கிருமி நாசினி



கார்பாலிக் திராவகத்தைப் போல மும்மடங்கு சக்தி வாய்ந்தது!

புதிய ஐடியால்-3, எரிச்சல் உண்டாக்காதது; விஷமற்றது; கிருமி பரவாமல் தடுக்கும் ஒரு மருந்து. புத்துணர்ச்சி தரும் இனிய நறுமணமுடையது. உடல்சுகாதாரத்திற்கு உபயோகிக்கும்பொழுது ஒரு புதிய வாசனைத்திரவியம் உபயோகிப்பதைப் போன்றே உதவுகிறது என்பது நினைவிலிருக்கட்டும். வைத்திய சிகிச்சையிலும் வீட்டிலும் எல்லா வகை உபயோகத்திலும் இணையற்று விளங்குகிறது.

தயாரிப்பாளர்:

ஸ்ரீ மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரேட்டரி லிட்.,

மல்லேஸ்வரம், பெங்களூர்-3.

35/37, தம்புச் செட்டி தெரு, சென்னை-1.


இது ஒரு ITL தயாரிப்பு

HITZ-2 ETM

டூத்பேஸ்ட் அல்லது பவுடர், எதை
உபயோகித்தாலும் . . . பற்களைச் சுத்தம் செய்வது
டூத்பிரஷ்தான்

டெக் உபயோகியுங்கள்—
டூத்பிரஷில் சிறந்தது!

பிரத்தியேகமாக அமையப்பெற்ற தலைப்பாகம்
நீடித்து உழைக்கும் நைலான் முடிகள்
உங்கள் பிடிக்கு அடக்கமான பிளாஸ்டிக் கைப்பிடி



சிறந்த டூத்பிரஷ் வேண்டுமென்றால்

ஜான்ஸன் & ஜான்ஸன் (கிரேட் பிரிட்டன்) லிட்.

டெக் வாங்குங்கள்!

மலைச்சாரல் மாதவி

அத்தியாயம் 53

போலீஸ் ஸ்டேஷனில்!

சீனிவாஸ மூர்த்தியின் முகபாவத்தை டி. எஸ். பி. சட்டர்ஜி கூர்ந்து கவனித்தார்.

''வழக்கை சீக்கிரம் ஆரம்பிப்பதில் உங்களுக்கு என்ன திருப்தி?'' என்று கேட்டார்.

''எனக்கும் வழக்குக்கும் என்ன சம்பந்தம்? சாதாரணமாகத்தான் கேட்டேன்'' என்றார் மூர்த்தி. இந்த மனிதர் எவ்வளவு பொல்லாதவர் என்று அவரால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தொடர்ந்து, ''அதுசரி! குற்றம் நடந்த ஸ்தலத்தை நீங்கள் நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்தீர்களா?'' என்று கேட்டார் சீனிவாசமூர்த்தி.

''அங்கே என்ன பரிசோதனை செய்வது? அதுதான் மழை பெய்து எல்லா அடையாளங்களையும் அழித்து விட்டதே'' என்றார் அமர்நாத்.


''அப்படியா?'' என்றார் சீனிவாசமூர்த்தி.

உடனே டி.எஸ்.பி. ''அங்கே சோதனை செய்ததில் புதரிலிருந்து ஒரு துப்பாக்கி ரவைதான் கிடைத்தது. வேறு எந்தவிதமான தடயமும் கிடைக்கவில்லை'' என்றார்.

சீனிவாஸ மூர்த்தி யோசனையில் ஆழ்ந்தார். அந்த விஷயத்தை அவர் மனம் ஜீரணம் செய்துகொண்டிருந்தது.

''என்ன அப்படிச் சிந்தனையில் ஆழ்ந்து போய் விட்டீர்கள்?''

''ஒன்றும் இல்லை. அந்தத் துப்பாக்கி ரவை எப்படிப் புதரில் வந்திருக்கும் என்று யோசித்தேன்.''



அமர்நாத் சிரித்தார். ''புதரை நோக்கிச் கட்டவலின் துப்பாக்கியிலிருந்து வந்திருக்கும். இதில் யோசனை செய்வதற்கு என்ன இருக்கிறது?''

''ஒன்றும் இல்லைதான். நான் வருகிறேன்'' என்று கிளம்பினார் மூர்த்தி.

அவர் சென்றதும் அமர்நாத் டி. எஸ். பி. யைப் பார்த்து, ''இவருக்கு நீங்கள் கூறியது தெரியும் என்றுதான் தோன்றுகிறது'' என்றார்.

''எனக்கு அதில் சந்தேகமே இல்லை. நாம் வழக்கைத் தள்ளிப்போடப் போவதில்லை என்றதும் அவருக்கு ஏற்பட்ட திருப்தியிலிருந்து இதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும். ஆனால் சீனிவாஸமூர்த்தி ரொம்பக் கெட்டிக்காரர். நாம் சிவசங்கரனைக் கைது செய்தால் கூட வழக்கைக் குழப்பிச் சாட்சியம் போதாது என்று சாதித்து விடுவார். அந்தத் துப்பாக்கி ரவையில் ஏதோ ஒரு விஷயம் இருக்க வேண்டும். அதன் முக்கியத்துவம் சீனிவாஸ மூர்த்திக்குத் தெரிந்திருக்கிறது. அது என்னவாக இருக்கும் என்றுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.''

''ஒருவேளை கருணாகரன் கையிலிருந்த துப்பாக்கியிலிருந்து வெடித்ததாக இருக்கலாமோ? ஒருவேளை கருணாகரன் சிவசங்கரனைச் சுட முயற்சி செய்திருக்கலாமோ?''

''அப்படி அவர் வாதாடுவதற்கு இடம் இருக்கிறது. ஆனால் உடனே சிவசங்கரன் 'ரிப்போர்ட்' செய்யாதபடியால் அப்படி இருக்காது என்று சொல்ல நமக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனாலும் இந்தத் துப்பாக்கி ரவை புதரில் அல்லவா கிடந்தது? எப்படிக் கருணாகரன் புதருக்குள்ளேயே கட்டுக் கொண்டிருக்க முடியும்?'' என்றார் டி. எஸ். பி.

அமர்நாத்துக்கு ஒன்றும் விளங்கவில்லை. ''இவ்வளவு தான் அனுபவத்தில் நான் இந்தமாதிரி நூதனமான வழக்கைப் பார்த்ததே கிடையாது. ஒரே குழப்பமாக இருக்கிறது'' என்று கூறினார்.

''ஏதாவது ஒரு துப்பாக்கியாவது இருந்தால் விஷயம் ஒருவாறு விளங்கும். குற்றம் செய்தது யாராக இருந்தாலும், அவன் இரண்டு துப்பாக்கிகளையும் அல்லவா ஒளித்து விட்டான். ரொம்பக் கெட்டிக் காரன்தான்'' என்றார் டி. எஸ். பி.

அங்கிருந்து புறப்பட்ட சீனிவாஸ மூர்த்தி நேரே வீட்டுக்குப் போனார். போனதும் பரபரப்புடன் சிவசங்கரனைத் தேடினார். சிவசங்கரனைக் காணவில்லை. சுபாஷிணியிடம் கேட்டபோது அவள், ''நடந்துதான் போனார். மலைக்குப் போகும் பாதையில் அவர் போனதால் மாதவியின் வீட்டுக்குப் போகிறார் என்று நினைத்தேன்'' என்றாள்.

''இருக்கலாம். நேற்று நான் அவள் மலைச்சாரல் பங்களாவுக்கு வந்துவிட்டாளென்று சொன்ன உடனேயே போவானென்று நினைத்தேன். நல்ல வேளையாக இன்றாவது போகத் தோன்றியதே. பாவம்! நேற்று மாலை மாதவி மலைப்பாதையைப் பார்த்துக் கொண்டு தன்னந் தனியாக நின்று கொண்டிருந்தாள். எனக்கு ரொம்ப வேதனையாக இருந்தது. தம்பி திரும்பி வந்து விடமாட்டானா என்று அவள் காத்துக் கொண்டிருப்பதுபோலத் தோன்றியது'' என்றார் சீனிவாஸமூர்த்தி.



''பாவம்'' என்றாள் சுபாஷிணி.

சீனிவாஸமூர்த்தி சிவசங்கரன் வந்துவிடுவாரென்று வெகு நேரம் வரை காத்துக்கொண்டிருந்தார். இரவு எட்டு மணி ஆகிவிடவே அவருக்குக் கவலையாகப் போயிற்று. சமையல்காரன் கேசவனை மலைச்சாரல் பங்களாவுக்குப் போய்ப் பார்த்து விட்டு வரும்படி அனுப்பினார். அவன் போய்விட்டு வந்து, ''அங்கே மாதவி அம்மா மட்டும்தான் இருக்கிறார். சிவசங்கரன் அங்கே வரவே இல்லையாம்'' என்று சொன்னான்.

உடனே காரை எடுத்துக் கொண்டு விஜயராகவன் வீட்டுக்குப் போனார் மூர்த்தி. அங்கேயும் இல்லாமல் போகவே, கவலையுடன் திரும்பி வந்தார். வாசலில் நின்று கொண்டிருந்த சுபாஷிணி காரைப் பார்த்த உடனே ஓடிப் போய், மிகவும் பதற்றத்துடன், ''சிவசங்கரன் போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிறாராம். உங்களை உடனே வரச் சொன்னதாகச் சற்று முன்னால் ஒரு போலீஸ்காரன் வந்து சொல்லி விட்டுப் போனான்'' என்றாள்.

''அட பாவமே! காரியத்தைக் கெடுத்து விட்டானே!'' என்று சொல்லிக்கொண்டே காரைத் திருப்பி வெகு வேகமாய்ப் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி ஓட்டினார் சீனிவாசமூர்த்தி.

அங்கே சீனிவாஸமூர்த்தி போய்ச் சேர்ந்தபொழுது அவர் ஒன்றும் செய்ய முடியாதபடி இருந்தது. சிவசங்கரன் டி. எஸ். பி. சட்டர்ஜியிடம் குற்றத்தை ஒப்புக்கொண்டு, வாக்குமூலமும் எழுதிக் கொடுத்து விட்டிருந்தார். போலீஸ் ஸ்டேஷனில் எல்லாருடைய முகத்திலும் அசடு வழிந்தது. ஆனால் சிவசங்கரனுடைய முகத்தில் மட்டும் ஒரு புதிய தெளிவு காணப்பட்டது.



'ஐயோ! இவன் இன்னும் ஒருநாள் பொறுத்திருக்கக் கூடாதா?' என்று அங்கலாய்த்துக் கொண்டார் மூர்த்தி.

அவர் பாடு ரொம்பத் திண்டாட்டமாக இருந்தது. சிவசங்கரனை நன்றாகத் திட்ட வேண்டுமென்று தோன்றியது. 'என்னிடமாவது சொல்லித் தொலைத்திருக்கக் கூடாதா? வெண்ணெய் திரண்டு வந்த சமயத்தில் தாழி உடைந்தமாதிரி பண்ணிக்கொண்டு விட்டானே!' என்று மனத்துக்குள் பொருமினார்.

சிவசங்கரன் அவரைப் பார்த்து' "மூர்த்தி! நீ வருத்தப்படாதே. நான் என் கடமையைச் செய்து விட்டேன். என்னால் ஒருநாளும் வழக்கை நடத்தியிருக்க முடியாது. என் மனச்சாட்சி அதற்கு இடமே தராது. என்னை மன்னித்து விடு. என் மனம் இப்போதுதான் அமைதி அடைந்திருக்கிறது. உடனே அச்சுதனை விடுதலை செய்து விடவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன்" என்று கூறினார்.

சீனிவாஸ மூர்த்திக்கு அவர் மீது ரொம்பக் கோபம் வந்த போதிலும் ஒரு பக்கம் அவருடைய கடமை உணர்ச்சியைப் பற்றி நினைக்கும்போது, பெருமிதமும் உண்டாயிற்று. குற்றத்தை ஒப்புக் கொண்டு எவ்வளவு அமைதியாக உட்கார்ந்திருக்கிறார் என்று வியக்காமல் இருக்க முடியவில்லை. டி. எஸ். பி. சட்டர்ஜியும் அப்படியே நினைத்ததாகத் தோன்றியது. அவர் முகத்திலும் இரக்க பாவம் ததும்பிக் கொண்டிருந்தது.

சீனிவாஸமூர்த்தி தணிந்த குரலில், "இருந்தாலும் நீ என்னிடம் ஒரு வார்த்தை முன்னாடியே சொல்லியிருந்தால் நன்றாக இருக்கும்" என்றார்.

"உன்னிடம் சொன்னால் நீ ஒருநாளும் சம்மதிக்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும். குற்றத்தை ஒப்புக் கொள்ள நான் தயாராக இருந்தாலும் நீ விட்டிருக்க மாட்டாய். பிறகு ஆயுள் முழுவதும் நான் வேதனைப் பட்டிருப்பேன்" என்று கூறிவிட்டு, இன்னும் சற்றுத் தணிந்த குரலில், "மாதவிக்குத்தான் பெரிய அதிர்ச்சியாக இருக்கும். அவளைப் பார்த்துக் கொள்ள வேண்டியது உன் பொறுப்பு" என்றார்.

"ஆகட்டும். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று சிவசங்கரனைப் பார்த்துக் கூறிவிட்டு, "நான் இவருடைய வாக்குமூலத்தைப் பார்க்கலாமா?" என்று டி. எஸ். பி.யைக் கேட்டார்.

அவர் பதிலுக்கு, "நீங்கள் அவருடைய வக்கீலாக இருந்தால் பார்க்கலாம்" என்று கூறினார்.

"சீனிவாஸ மூர்த்தி என்னுடைய வக்கீல்தான்" என்றார் சிவசங்கரன்.

அதன் பிறகு சீனிவாஸ மூர்த்தி சிறிது வருத்தத்துடன் சிவசங்கரனின் வாக்குமூலத்தை வாங்கிப் படித்தார். அதில் ஒன்று விடாமல் சகல விவரங்களையும் தொடர்ச்சியாக எழுதியிருந்தார் சிவசங்கரன். தன் துப்பாக்கி மாறிப் போனதை நாக்பூரில் கவனித்ததையும், தன்னுடைய துப்பாக்கியை ஒளிக்கவே அச்சுதன் அங்கே போயிருக்க வேண்டும் என்றும், அச்சுதன் பாலகோபாலை அனுப்பியதையும் அதில் எழுதியிருந்தார்.

அதை முழுவதும் படித்த சீனிவாஸ மூர்த்தியின் கண்களில் நீர் ததும்பப் பார்த்தது. போலீஸ் ஸ்டேஷனில் தாம் இருப்பது ஞாபகம் வந்ததும் உணர்ச்சிக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டார்.

சிவசங்கரனின் வயது முதிர்ந்த தாயாரின் மனம் இதைக் கேட்டால் என்ன பாடுபடும் என்று வருந்தினார்.

அத்தியாயம் 54

விடுதலை கிடைத்தது!

சிவசங்கரன் வாக்குமூலத்தை எழுதி முடிக்கும் வரையில் போலீஸார் சும்மாயிருந்து விடவில்லை. அச்சுதனை உடனே விடுதலை செய்தார்கள். அச்சுதன் அதற்கு மேல் தான் மறைத்துப் பயனில்லை என்று உண்மை முழுவதையும் ஒப்புக் கொண்டான். தான் ஒளித்து வைத்தது சிவசங்கரனின் துப்பாக்கிதான் என்பதையும் சொல்லி விட்டான்.

அச்சுதன் சிவசங்கரனுக்காக இவ்வளவு பெரிய தியாகம் செய்யத் தயாராக இருந்த போதிலும், அவனுடைய உள் மனத்தில் அவரைப் பற்றி அவன் கொண்டிருந்த நல்ல எண்ணம் ஒரு அளவுக்கு மாறுபட்டிருந்தது. குற்றமும் செய்து விட்டு, நிரபராதி ஒருவனைப் பிடித்திருக்கும் பொழுது பேசாமலிருந்து விட்டாரே என்று குறையாக இருந்தது. அவருடைய பெருந்தன்மை, நேர்மை இவற்றில் கொண்டிருந்த திடமான நம்பிக்கை தளர்ந்து போய் அவன் வியாகூல மடைந்திருந்தான். ஆகவே சிவசங்கரன் குற்றத்தை ஒப்புக்கொண்டது அவனுக்கு வருத்தத்தை அளித்த போதிலும், அதே சமயத்தில் சிறிது திருப்தியும் ஏற்பட்டது. அவரிடம்

அவன் கொண்டிருந்த மதிப்பும், மரியாதையும் மேலோங்கின.

மறுநாள் காலையில்தான் அவன் துப்பாக்கியை ஒளித்து வைத்த இடத்திலிருந்து எடுத்துக் கொடுத்தான். மலை மீது யாரும் நினைக்காத இடத்தில் சாமர்த்தியமாக அதை வைத்திருந்தான். சிவசங்கரனும் தம்மிடமிருந்த கருணாகரனின் துப்பாக்கியைப் போலிஸாரிடம் ஒப்படைத்து விட்டார்.

ஊரெல்லாம் திமிலோகப் பட்டது. யாராலும் இதை நம்ப முடியவில்லை. 'சிவசங்கரன் செய்திருக்க மாட்டார், இதில் ஏதோ சூது இருக்கிறது!' என்று கூடப் பேசிக் கொண்டார்கள். 'அவரே ஒப்புக் கொண்டிருக்கிறாரே. இதில் வேறு ஒருவரின் சூழ்ச்சிக்கு எங்கே இடம் இருக்கிறது?' என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.



விஜயராகவன் செயலிழந்து நின்றார். சிவசங்கரனிடம் அவர் மிகவும் மதிப்பு வைத்திருந்தார். இதைக் கேட்ட பிறகு அவரால் என்ன நினைப்பது என்றே தீர்மானிக்க முடியவில்லை. ஒரே குழப்பமாக இருந்தது. ஜயந்தியும் அவரும் அதைப் பற்றிச் சொல்லிச் சொல்லி அதிசயப் பட்டார்கள். மாதவியின் நிலையை எண்ணி எண்ணி வருந்தினார்கள். ஜயந்திக்குத் தன் நிலையே தேவலை என்று தோன்றியது. மாதவியின் மனம் எவ்வளவு புண்பட்டிருக்கும் என்பதை அவளால் கற்பனை செய்து பார்க்கவே முடியவில்லை.

மாதவி! மாதவியைப் பற்றி என்ன சொல்ல முடியும்? அவளுடைய நிலை மிகவும் பரிதாபத்துக்குரியதாக இருந்தது. கனவில் நடப்பவளைப் போல நடமாடிக் கொண்டிருந்தாள். ஜயந்தியிடமோ, சுபாஷிணியிடமோ, அவள் பேசவே இல்லை. அவளுக்கு உலகில் எதை நம்புவது, எதை நம்பக்கூடாது என்று கொஞ்சங்கூட விளங்கவில்லை.

யார் குற்றமே செய்ய முடியாதவர் என்று நம்பினாளோ அவர் தன் தம்பியை, தன் ஒரே துணையைச் சுட்டு விட்டார் என்ற எண்ணம் அவளை மதி கலங்கச் செய்துவிட்டது. கோவிந்தன், 'மாஜிஸ்திரேட்டும் மனிதன்தானே!' என்று கூறியது ஞாபகம் வந்து சித்திரவதை செய்தது. சில நாட்களுக்கு அவள் பேச்சையே அடியோடு மறந்து போய் விட்டாள். சுபாஷிணிக்கு அவள் ஊமையாகப் போய் விட்டாளோ, அல்லது அறிவு கலங்கி விட்டதோ என்று கூடக் கவலையாகப் போய்விட்டது.

ஒரு வாரம் மாதவி இப்படி இருந்தாள். அழவும் இல்லை; சிரிக்கவும் இல்லை. வெளியே அமைதியாக இருப்பதுபோலத் தான் காணப்பட்டாள். ஆனால் அவள் இதயத்துக்குள், புயலும், பூகம்பமும், எரிமலையும் அட்டகாசம் செய்தன. அவள் அதை வெளிக்காட்டாமலிருப்பதாலேயே வேதனை இன்னும் அதிகமாக இருந்தது.

ஆனால் ஒரு வாரம் கழித்து அவளுடைய நடத்தையில் மறுபடியும் தெளிவு ஏற்பட்டது. அந்த அதிர்ச்சியினால் அவளுடைய புத்தி கலங்கிவிடவில்லை என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. கலங்கிய நீர் தெளியும் போது, முதலில் இருந்ததைவிடச் சுத்தமான நீராகத் தெளிவதுபோல் அவளுடைய மனம் துல்லியமாகத் தெளிந்து விட்டது

மாதவி இப்போது இன்னும் விவேகமும், அனுபவமும் பெற்றவளாக மாறினாள். அது அவளுக்கு நன்மையே செய்தது. ஒரு வாரம் பட்ட வேதனையினால் புதிய மாதவியாக மாறிவிட்டாள்.

காதல் என்ற அபூர்வமான உணர்ச்சி ஏற்படும்போது மனம் எவ்வாறு தன் லட்சியங்களுக்கு ஏற்றவாறு காதலுக்குரியவரை உருவகப்படுத்திக் கொண்டு நேசிக்கத் தொடங்குகிறது என்பதையும், அது எவ்வளவு தவறு என்பதையும் அவள் புரிந்து கொண்டாள். தான் நேசிப்பவர் ஒரு மனிதப் பிறவிதான் என்பதையும், அவரும் குற்றங் குறைகள் இருக்கக் கூடியவர்தான் என்பதையும் தெரிந்து கொண்டாள். இப்படி முதலிலேயே தான் நினைத்து அன்பு செலுத்தியிருந்தால் இவ்வளவு ஏமாற்றம் ஏற்பட்டிருக்காது என்பது அவளுக்குத் தெளிவாயிற்று.

சுபாஷிணியின் மனம் அமைதி அடைந்தது. மாதவிக்குப் பைத்தியம் பிடித்து விடவில்லை என்பது அவளுக்கு ஆறுதலாக இருந்தது. அவளுக்கு மாதவியின்

சுலேகா

பௌண்டன் பேனா மை



உஷ்ணப் பிரதேசங்களுக்கு ஏற்றவாறு விசேஷ முறையில் 'S-50' ஸால்வென்ட் சேர்க்கப்பட்டிருக்கிறது. சாதாரண உலோக நிப்புகளில் அமிலம் தாக்காத படியும் காப்பாற்ற உதவுகிறது.

சுலேகா ஒர்க்ஸ் லிமிடெட்
கல்கத்தா - டில்லி - பம்பாய் - சென்னை

மீது அளவிலாத பாசம் ஏற்பட்டு விட்டது. தன் சொந்த சகோதரியின் மீது எப்படி அன்பு செலுத்துவாளோ, அவ்வாறுமாதவியிடம் அன்பாக இருந்தாள்.

சிவசங்கரனின் விஷயம் எப்படி இருந்தாலும், தான் மாதவியை ஆதரிப்பது என்று தீர்மானம் செய்துகொண்டாள்.

இப்படிப்பட்ட எண்ணத்துடன் மாதவியிடம் அவள் ஒரு நாள் பேசிய போது மாதவி கூறிய பதில் அவளைத் திகைக்கச் செய்து விட்டது.

''மாதவி! நீ என்னுடன் நாக்பூருக்கு வந்து விடு. உன்னை நான் பார்த்துக் கொள்கிறேன். உனக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கிறேன்'' என்றாள்.

''அது எப்படி வர முடியும்? அவரைக் கேட்க வேண்டாமா?'' என்றாள் மாதவி.

சுபாஷிணிக்கு ஒரு கணம் விளங்கவில்லை. பிறகு, ''சிவசங்கரனையா சொல்கிறாய்?'' என்று கேட்டாள்.

''ஆமாம்! அவர்மீது நடக்கும் வழக்கு முடியட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்றாள்.

''நீ அவரை மன்னித்து விட்டாயா, மாதவி? அவர் ஒருவேளை விடுதலையாகித் திரும்பி வந்துவிட்டால் அவரைத் திருமணம் செய்து கொள்வாயா?'' என்று சுபாஷிணி கேட்டாள்.

மாதவியின் புன்னகையில் ததும்பிய சோகம் சுபாஷிணியை என்னமோ செய்தது. ''அவர் வேண்டுமென்று ஒன்றும் செய்யவில்லையே? தற்செயலாகத்தானே நேர்ந்தது? மேலும் இன்னொருவருடைய குற்றத்துக்காக அவரை வெறுப்பதற்கு நமக்கு என்ன அருகதை இருக்கிறது? அவரை முதலிலேயே நான் மணம் செய்து கொண்டிருந்தால் அவருடைய மனைவியாகத்தானே இருந்திருப்பேன்? இப்போது அதை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன வந்து விட்டது?'' என்றாள் மாதவி.

சுபாஷிணிக்கு மாதவியிடம் இன்னும் அன்பும், பரிதாபமும் உண்டாயிற்று. மாதவியை ஒரு தெய்வப் பிறவி என்றே சொல்லத் தோன்றியது.

''எனக்கென்னவோ அவர் நிச்சயம் விடுதலையடைந்து விடுவாரென்றுதான் தோன்றுகிறது. இவரும் அப்படித்தான் சொல்கிறார். தற்செயலாக நடந்ததென்று கருதி விடுதலை செய்து விடுவார்கள். அப்படி ஏதாவது தண்டனை கொடுத்தாலும் ஆறு மாதம், ஒரு வருடம் சிறைத் தண்டனையோடு போய் விடும்'' என்றாள் சுபாஷிணி. அப்படி அவர் தண்டனை அடைய நேரிட்டாலும் மாதவியை அதற்குத் தயாராக இருக்கச் செய்ய வேண்டும் என்று அவள் மனத்திற்குள் எண்ணினாள்.

''இறைவன் விதித்ததை யாராலும் மாற்ற முடியாது. நடக்கிறபடி நடக்கட்டும். என்னை இனிமேல் எதுவும் பாதித்து விடாது'' என்று பதில் சொன்னாள் மாதவி.

சிவசங்கரன் தன்னிடம் பேசியதெல்லாம் அவளுக்கு ஞாபகம் வந்தது. 'என்னை மறந்து விடு' என்று அவர் கூறியதைத்தான் எவ்வளவு தவறாகப் புரிந்து கொண்டாள்? அதற்கு வேறு காரணம் கற்பித்து எவ்வளவு வேதனைப் படுத்திக் கொண்டாள்? வெளிப்படையாகப் பார்க்கும்போது விஷயம் ஒரு மாதிரியும், உண்மை வேறு மாதிரியும் அல்லவா இருக்கிறது? அதற்குக் கண் முன்னால் எத்தனை உதாரணங்கள்?

சிவசங்கரனும் ஏறக்குறைய அதே மாதிரி மன நிலையை அடைந்தார். ஒரு வேளை சீனிவாசமூர்த்தி கூறுவது போல விடுதலை அடைந்தால் மாதவியிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்வதென்றும், அவள் விரும்பினால் மணம் செய்து கொண்டு, தான் இழைத்த தீங்குக்குப் பரிகாரமாக அவள் வாழ்க்கை முழுவதையும் சந்தோஷமாகச் செய்ய வேண்டும் என்றும் தீர்மானம் செய்து கொண்டார். **(அடுத்த இதழில் முடியும்)**

இந்தக் கதையில் வரும் ஒரு அருமையான காட்சியைத்தான் இவ்வார அட்டையில் சித்திரித்திருக்கிறார் ஓவியர் வினு.

வெள்ளித்திரையிலே "இரு சகோதரர்கள்" வந்து போனார்கள். "நாம் இருவர்" வந்து போயினர். அவர்களைத் தொடர்ந்து இப்போது நரசுவின் தயாரிப்பாக, "இரு சகோதரிகள்" பவனி புறப்பட்டிருக்கின்றனர். முன் இரண்டு படங்களில் சகோதரனுக்காக மற்றவன் தியாகம் செய்து தன் லட்சியத்திலே வெற்றி காண்கிறான். இந்தப் படத்திலே அதை ஒரு சகோதரிக்காக ஒரு தமக்கை செய்கிறாள்.

நாயும் பூனையுமாக உறவாடுகின்றனர் சகோதரிகளான சரோஜாவும் லலிதாவும். அவர்கள் நடனச் சண்டை, சங்கீத யுத்தம் இப்படியாக உறவாடுகின்றனர். ஆனால் அவர்கள் தாயின் மரணம் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது. மூத்தவளான சரோஜா தன் சகோதரி லலிதாவின் நல்வாழ்வுக்காகப் பல சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் உள்ளாகி, இறுதியில் சுகம் பெறுகிறாள்.

கதையிலே நிறைய சம்பவங்கள் இருக்கின்றன; அலுப்புத் தட்டும் அளவுக்குக் கூட உள்ளன. ஆனால் புதுமை எதுவும் இல்லை. வசனங்கள் அடுக்குமொழியோ, எதுகை மோனைகளோ இல்லாமல் ஒரு சமூகப் படத்துக்குத் தேவையான அளவில் எழுதப்பட்டிருக்கின்றன.

இந்தப் படத்தில் சாவித்திரி — ஜெமினி காதல் ஜோடி பொருத்தமான பாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். ஜெமினி கணேசன் தமக்குச் சமூகப் படங்கள்தான் பொருத்தமானது என்பதை இப்படத்திலும் நிரூபித்திருக்கிறார். காதல் கட்டங்களிலும், தன் தங்கையைக் கண்டிக்கும் இடத்திலும் சாவித்திரியின் நடிப்பு சோபிதமாக உள்ளது. குறும்புக்காரியாகவும், அதே சமயம் வெள்ளை உள்ளம் படைத்த பெண்ணாகவும் கிரிஜா திறம்பட நடித்திருக்கிறார். நம்பியார் வழக்கம் போல இப்படத்திலும் வில்லன்தான். கண்களை உருட்டி விழிக்கிறார். அடிக்கடி தாடையில் கை வைத்து யோசிக்கிறார். சுப்பையா பிள்ளையாக வி. கே. ராமசாமி நடித்திருக்கிறார் என்று சொல்வதைவிட அந்தக் கதாபாத்திரமாக மாறிவிட்டார் என்றே சொல்லிவிடலாம். குடித்திருக்கும் டாக்டர் சுந்தருக்குப் புத்திமதி கூறும் போது அவருடைய நடிப்பு உச்ச நிலையை அடைகிறது.

டி. எஸ். துரைராஜும், டி. பி. முத்துலட்சுமியும் ஹாஸ்யவிருந்து அளித்துள்ளனர். கௌரவமாக அளவோடு நடித்துள்ளனர். ஆனால் அவர்கள் இருவரும் "லாட்டரி பாட்டரி" என்று ஆட ஆரம்பித்ததும், நமது அபிப்பிராயம் மாறுவதற்கு இடம் ஏற்பட்டு விடுகிறது.


இப்படத்தில் டைரக்டரின் திறமை யாவை என்பதை எடுத்துக் காட்டுவது கடினமாகவே இருக்கிறது. காரணம், அப்படிப் பிரமாதமாக அவர் இப்படத்தில் எதுவும் செய்துவிடவில்லை. மாறாகப் பல குறைகள் பளிச்சிடுகின்றன. மாயவரம் ஸ்டேஷனில் ரிக்ஷாக்கள் நிற்கின்றன. மாயவரம் போக ரயில் ஏறப் பஞ்சரத்ன பாகவதரும்-சரோஜாவும் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் போகும் விந்தை. இப்படியான குறைகள் அனந்தம்.

இறுதிக் கட்டமான காதலர்கள் ஒன்று கூடும் நிகழ்ச்சியை விறுவிறுப்பாகச் சிறந்த முறையில் படமாக்கியிருக்கிறார் டைரக்டர். அவருடைய திறமைக்கு இந்த ஒரு இடத்தைக் குறிப்பிடலாம்.

மொத்தத்தில் நல்ல நடிப்பு, ஆபாசம் துளியும் இல்லாத படம் என்ற காரணங்களினால் 'சகோதரிகள் பார்க்க' வேண்டிய படம்'







உலகில் முடியாட்சி நடைபெற்று வந்த தேசங்களில் எல்லாம், இப்பொழுது 'ஜாம் ஜாம்' என்று குடியாட்சி நடைபெற்று வருகின்றன. ஆனால் பட உலகிலே இப்பொழுது ராஜா — ராணி கதைகளுக்கு ஒரு மவுசு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சமீப காலமாக வெளிவந்த பல படங்கள் நிதர்சனமாக்கி விட்டன. அந்த 'ஜாதி'யைச் சேர்ந்ததுதான் வி. ஆர். வி. புரொடக்ஷன்ஸின் 'பத்தினித் தெய்வம்.'

மன்னன் மகேந்திரன் தன் மனைவி சிவகாமியின் நெறியிலே சந்தேகம் கொண்டு அவளையும் அவள் வயிற்றிலே பிறந்த பெண் சிசுவையும் ஒழித்துக் கட்டச் சொல்கிறான். சீக்கிரமே தன் தவறுதலை உணர்ந்து, மனம் உடைந்து, சிவகாமியே 'பத்தினித் தெய்வம்' என்று அலறுகிறான். (கதை முடிந்து விட்டதாகத் தான் தோன்றுகிறது. ஆனால் மேலே தொடருகிறது. நம் பொறுமையையும் சோதிக்கிறது.) சிவகாமிக்குப் பிறந்த பெண் ஒரு இடையன் வீட்டில் வளர, அவளுக்கு ஊஞ்சலில் உட்கார்ந்து பாட்டு சொல்லிக் கொடுக்கும் பாட்டு வாத்தியாராக வந்த ராஜகுமாரன் அவள் மீது காதல் கொள்ள இப்படி வளர்ந்து கொண்டே போகிறது கதை.

வசனங்கள் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன. ஆனால், அவைகள் சரியானபடி உச்சரிக்கப் படாமையினால் அவற்றின் சிறப்பு வெளிப்பட வழியில்லாது இருக்கிறது. அதற்கு ஒரு உதாரணமாக, அரச சபையில் சிவகாமி பேசும் இடத்தைக் குறிப்பிடலாம்.

'ஆத்துக்குப் பாவம்', 'வேதாந்தம் பேச வாங்க' என்ற இரண்டு பாட்டுகளிலும் நல்ல கருத்து அமைந்திருக்கிறது. ஒரு பாட்டில் கண்ணனை, 'பெண்சாதி போல் எல்லோரையும் நினைக்கவிட்டான்' என்ற அடியைச் சேர்க்கப் பாடல் எழுதியவருக்கு எப்படித் தான் மனச்சாட்சி இடம் கொடுத்ததோ, நமக்குத் தெரியவில்லை!

'வாராய் இன்றே', 'மோகனப் புன்னகை' ஆகிய இரு பாட்டுகளும் இனிமையாகப் பாடப்பட்டுள்ளன.

ராஜா-ராணி கதையில் நடிக்கிறார் என்பதாலோ என்னவோ, ஜெமினி கணேசனின் நடிப்பை ரஸிக்க முடியவில்லை. இந்தப் படத்தில் ஒரு விசேஷம் பி. எஸ். வீரப்பா வில்லனாக நடிக்கவில்லை என்பது. கதாநாயகனின் தந்தையாக நடித்து, வில்லனாக நடித்தால் கிடைக்கும் பாராட்டுதலைப் பெறுகிறார். நம்பியாருக்குப் பெண்வேஷம் பொருத்தமாக இருக்கிறது என்று சொல்வதைத் தவிர, குறிப்பிட எதுவும் இல்லை. அவசர புத்தி கொண்ட மன்னனாக எஸ். வி. ரங்கராவ் உணர்ச்சியுடன் நடித்திருக்கிறார்.

சாவித்திரி காதல் கட்டங்களைப் போலவே சோக கட்டங்களிலும் இப்படத்தில் உணர்ச்சியுடன் நடித்திருக்கிறார். ஏற்கனவே கற்புக்கரசியாக நடித்த ஜி. வரலட்சுமி இதில் 'பத்தினித் தெய்வம்' சிவகாமியாக நடித்திருக்கிறார். அவர் பேச்சு ஒரு மாதிரியாக இருக்கிறது என்பதைத் தவிர, நடிப்பு நன்றாகவே இருக்கிறது. ராஜசுலோசனாவின் நடிப்பிலே உணர்ச்சி என்பதே இல்லை. ஆட்டமும் கவர்ச்சிகரமாக இல்லை.

படத்தில் சந்திரபாபு வரும் கட்டங்கள் மிக மிகக் குறைவு. என்றாலும் அதை மணியாகச் செய்து முடித்திருக்கிறார்.

ஏழுமலை - அங்கமுத்து ஹாஸ்ய ஜோடியினர் கலகலப்பை உண்டு பண்ணுகின்றனர். இரண்டு இடங்களில் பொறுமையைச் சோதிக்கவும் செய்கின்றனர்.

ரஸாபாஸமான நிகழ்ச்சிகளோ, வசனமோ, பாடலோ இந்தப் படத்தில் இல்லை என்பதை இந்தப் படத்தின் ஒரு நல்ல அம்சமாகக் குறிப்பிடலாம்.

— ஜாம்பவான்

உங்கள் கேசத்தை அதிக கருமையுடனும் பகட்டுடனும் வைக்க குளிர்ச்சியான வெண்ணிற ப்ரில்க்ரீம் உபயோகியுங்கள்





* ப்ரில்க்ரீமின் சுத்தமான க்ரீமாக்கப்பட்ட எண்ணெய்கள் உங்கள் கேசத்தின் இயற்கை கருமை நிறத்தை சேமிக்கச் செய்கின்றன. சுத்தமான வெண்ணிற ப்ரில்க்ரீமை உங்கள் தலையில் தினந்தோறும் அழுத்தித் தேயுங்கள். பொடுகுகள் ஏற்படுவதை இது தடுத்து உங்கள் கேசத்தை சுத்தமாயும் ஆரோக்கியத்துடனும் வைக்கிறது.

* சிறிதளவு ப்ரில்க்ரீம் நீடித்த உபயோகத்திற்கு வருகிறது! இன்றே ஒரு ப்ரில்க்ரீம் ஜாடியை வாங்கி எவ்வளவு காலம் அது நீடித்த உபயோகத்திற்கு வருகிறதென்று பாருங்கள்.

வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்கள்

ப்ரில்க்ரீம் BRYLCREEM

உபயோகிக்கிறார்கள்

குளுப் லாபரட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்


மாஸ்டா
பல்புகள்
பிரகாசம்
அதிகம்
நீடித்து
உழைக்கும்
B T-H
அஸோஸியேடெட் எலெக்ட்ரிகல்
இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா)
பிரைவேட் லிட்.
கிளை ஆபீஸ்கள்:
பம்பாய்
புதுடெல்லி
மதராஸ்
பெங்களூர்
கோயம்புத்தூர்
AIC-174 TH


புதுமை பெறுக!
இதம் பெறுக!
நளினமாய் இருங்கள்! நாள்முழுதும்!
மணமுள்ள சார்மிஸ் டால்கம் பௌடர் உபயோகித்த பின் நீங்கள் பெறும் உணர்ச்சிகள் இவை. சார்மிஸ் குளுமையும் புத்துணர்ச்சியும் அளிக்கிறது ... உன்னத மனோ ரம்மிய மணம் கொண்டது.
சார்மிஸ்
டால்கம் பவுடர்
உன்னத, மனோரம்மிய மணத்துடன்.
CHARMIS Talc



மாலவல்லியின் தியாகம்

அத்தியாயம் 11

திடுக்கிடும் செய்தி!

கொடும்பாளூரில் புலிப்பள்ளியார் ஒரு நாள் தங்கியதிலேயே அவரும் அவருடைய மெய்காப்பாளரும் படாதபாடு பட நேர்ந்ததல்லவா? இன்னும் இரண்டொரு நாட்கள் தங்குவதென்றால் இன்னும் எத்தகைய அனுபவமெல்லாம் ஏற்படுமோ என்று அவர் பயந்தார். அவர் பதைபதைப்போடு, "இல்லை. நான் அவசியம் தஞ்சைக்குப் போக வேண்டும். இது மன்னரின் உத்தரவு. நான் இங்கே வந்தது மன்னரின் விருப்பப்படி இளவரசருக்காகப் பெண் கேட்கத்தான். அந்தக் காரியம் முடிந்து விட்டது. அதற்குரிய பதிலை எதிர் பார்த்து மன்னர் ஆவலோடு காத்திருப்பார். நான் உடனே தஞ்சைக்குச் செல்வது தான் உசிதம். இப்பொழுது என்னை அதிகம் வற்புறுத்தாதீர்கள். இன்னொரு சமயம் வருகிறேன்" என்றார்.

"ஆமாம்! நீங்கள் இங்கே எதற்காக வந்தீர்கள் என்பதையே நான் அடியோடு மறந்து விட்டேன். உங்கள் மன்னரிடம் பெண் கொடுக்கும் விஷயமாக இங்கே நடந்த பேச்சுக்கள் அனைத்தையும் தவறாமல் சொல்லுவீர்கள் என்றே நம்புகிறேன். முக்கியமாக, சோழ வம்சத்தினருக்குக் கொடும்பாளூரார்களிடம் பெண் 'கொள்ளும் பாத்தியதை இருக்கும் வரையில் தஞ்சை மன்னரின் விருப்பத்தை நிறைவேற்றுவது கடினம் தான் என்பதை மாத்திரம் மறக்காமல் சொல்லுங்கள். இருப்பினும் எங்களாலான முயற்சிகள் அனைத்தையும் செய்கிறோம்" என்று கூறினான் ஆதித்தன்.

அந்தச் சமயம், "ஆகட்டும், சொல்கிறேன்" என்று புலிப்பள்ளியாரால் சொல்ல முடிந்ததே தவிர வேறு எந்த விதமான பதிலும் சொல்லத் தோன்றவில்லை.

"அப்படியென்றால் அமைச்சர் அவர்கள் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்யட்டுமா?" என்று கேட்டான் பராந்தகன்.

"அதிலென்ன சந்தேகம்? அமைச்சருக்கு மாத்திரமல்ல. அவருடைய மெய்காப்பாளர்களின் பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய். பாவம்! அவர்கள் தங்கள் அவயவங்களை இழந்த நிலையில் தங்கள் நகருக்குத் திரும்புவது எனக்கு மிகவும் மன வருத்தத்தை அளிக்கிறது. தஞ்சையிலிருந்து வந்திருக்கும் குதிரைகளோ, பல்லக்குகளோ போதாதிருந்தால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்து அனுப்பு. நம்முடைய அரண்மனைக்கு வந்திருக்கும் விருந்தினர்களை மிக்க மரியாதையுடன் வழியனுப்புவதுதான் நமது முதற்கடமையாக இருக்க வேண்டும்" என்றான் ஆதித்தன்.

"அதையெல்லாம் ஒரு குறைவுமில்லாமல் செய்து விடுகிறேன்" என்றான் பராந்தகன்.

'இதோடு விட்டார்களே' என்று எண்ணிப் புலிப்பள்ளியார் ஆசனத்திலிருந்து மெதுவாக எழுந்து எல்லோருக்கும் வணக்கம் செலுத்தி விட்டு, "நான் சென்று வருகிறேன். நீங்கள் செய்த உபசாரத்துக்கு மிக்க நன்றி" என்றார் முகத்தில் சந்தோஷக் குறியை வரவழைத்துக் கொண்டு.

அவ்வளவு நேரமும் பேசாமல் இருந்த அருண்மொழியார் புலிப்பள்ளியாரை நெருங்கி அவரை ஆலிங்கனம் செய்து கொண்டு மிகவும் அன்போடு, "இந்தக் கொடும்பைமா நகரில் நான் உங்களைச் சந்திக்க நேர்ந்து, உங்களோடு சிறிது நேரமாவது பேசிப் பழக வாய்ப்பு ஏற்பட்டதற்கு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். என் மீது ஏதே



னும் குற்றம் குறைகள் இருப்பினும் நீங்கள் மன்னித்தருள வேண்டும்'' என்றார்.

அருண்மொழியாரின் ஆலிங்கனமும் அன்பு நிறைந்த இனிய வார்த்தைகளும் புலிப்பள்ளியாரின் மனத்தை உறுத்துவதாகத் தானிருந்தன. அந்தச் சமயம் அவர் இதை எதிர்பார்க்காதவர் போல் திகைப்படைந்து நின்று விட்டார். அருண்மொழியாரின் சகஜமான மனப்பான்மையும் அன்பு நிறைந்த பேச்சும்-கெட்ட எண்ணத்தோடும், பகைமை உணர்ச்சியோடும் இருந்த புலிப்பள்ளியாரின் மனத்தையும் சிறிது நெகிழ வைத்து வெட்கப்பட வைத்தன. ''நீங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை. உங்களைப்பற்றி நான் தவறாக நினைத்ததற்கு என்னை மன்னித்து விடுங்கள். நாம் இருவரும் நேர் பகைவர்களான இரு அரசர்களின் சபையில் முக்கியமான பதவியில் அமர்ந்திருந்தாலும் நம்முடைய நட்பு என்றும் அழியாதிருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய பிரார்த்தனை'' என்றார் புலிப்பள்ளியார் தழுதழுத்த குரலில்.

''ஈசனின் சித்தம் அப்படியே இருக்கட்டும்'' என்றார் அருண்மொழியார்.

சிறிது நேரத்தில் புலிப்பள்ளியார் அமர்ந்திருந்த பல்லக்கும் அவருடைய மெய்காப்பாளர்கள் அமர்ந்திருந்த பல்லக்கும் கொடும்பாளூர் அரண்மனை வாசலிலிருந்து ராஜமரியாதையுடன் ஊர்வலம் போல் மேளதாளத்தோடு கிளம்பியது. புலிப்பள்ளியாரை நகர் எல்லை வரையில் சென்று வழியனுப்புவதற்காகப் பராந்தகன் ஒருகுதிரைமீது ஏறிக் கம்பீரமாக வீற்றிருந்தான். பல்லக்குகளுக்கு இருபுறத்திலும் வீரர்களைச் சுமந்த குதிரைகள் நின்றன.

புலிப்பள்ளியார் கடைசி முறையாக எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டபின் பேரிகைகள் முழங்கப் பல்லக்குகள் கிளம்பின. அந்தப் பல்லக்குகள் கண் மறையும் வரையில் ஆதித்தனும் அருண்மொழியாரும் அரண்மனைப் பரிவாரங்கள் சூழ நின்று கவனித்து விட்டு அரண்மனைக்குள் சென்றனர்.

நகரின் எல்லையைக் கடந்ததும் பராந்தகன் குதிரையில் வீற்றிருந்த வண்ணமே புலிப்பள்ளியாரின் பல்லக்குக்குச் சமீபமாக வந்து, ''சென்று வருகிறீர்களா? அவசியம் தாங்கள் இன்னொரு சமயம் எங்கள் நகருக்கு விஜயம் செய்து எங்களைச் சந்தோஷத்துக்குள்ளாக்க வேண்டும்'' என்றான் பணிவான குரலில்.



பல்லக்கில் உட்கார்ந்திருந்த புலிப் பள்ளியார் விறைப்போடு பார்த்துக் கொண்டே பேசினர். ''பார்ப்போம். ஆனல் அந்தச் சந்திப்பு வேறு விதமாகத் தான் இருக்கும். நீங்கள் வேண்டுமென்றே தஞ்சை மன்னரின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டு விட்டீர்கள். இது நிச்சயம். நீங்கள் விருந்தினராகவந்த எங்களை அவமானப்படுத்தியது மாத்திரம் சிறந்த காரியமாகாது. இனிமேல் இந்தக் கொடும்பாளூர் கோட்டையைப் பாதுகாப்பதில் தான் இருக்கிறது உங்கள் வீரம், சாமர்த்தியமெல்லாம்'' என்ருர் எச்சரிக்கை செய்கிறவர்போல.

பராந்தகன் அவருக்கு எவ்வித பதிலும் சொல்லவில்லை. அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே தன் குதிரையைத் திருப்பி விட்டான்.

சோழவள நாட்டிலேயே சிறந்ததொரு நகரமாகத் திகழ்ந்த குடந்தைமா நகரிலே ஒரு பரபரப்பான செய்தி பரவியது. இந்தச் செய்தி எப்படி வந்ததோ? எங்கிருந்து முளைத்ததோ ?

'பரம நாஸ்திகவாதியான பூதுகன் காஞ்சிமா நகரில் எதிரிகள் வசம் சிக்கித் தாக்குண்டு இறந்தான்'. இது தான் நகர மக்கள் மூலைக்கு மூலை கூடி நின்று பேசிக் கொண்டிருந்த செய்தி. இதோடு மட்டுமா? பூதுகனின் அந்தரங்க நண்பராகத் திகழ்ந்த கோடீச்சுவரத்துச் சோதிடர் சந்தகரும் எதிரிகளால் சிறைப்படுத்தப் பட்டார் என்ற செய்தியும் மக்கள் மனத்தில் பெரிய கிளர்ச்சியை ஏற்படுத்தி விட்டது.

கடவுள் உண்டு என்று நம்பும் எல்லா மதவாதிகளுக்கும் பூதுகன் ஒரு பெரிய எதிரியாக விளங்கினன் என்பது உண்மையே. அதிகம் தெரிந்துகொள்ளாமல் குருட்டுத்தனமான மத வெறி கொண்ட ஒரு சிலருக்கு மாத்திரம் பூதுகன் இறந்து விட்டான் என்ற செய்தியைக் கேட்டதும் குதூகலம் ஏற்பட்டது. ஆனல் சிறந்த அறிவுள்ள மதவாதிகள் எல்லோருக்கும் பூதுகன் இறந்து விட்டான் என்ற செய்தியைக் கேட்டதும் துக்கம்தான் ஏற்பட்டது. மக்களிடையே நாட்டுப்பற்றுக் கொண்டோர் எல்லோரும் பூதுகனுக்கும் சந்தகருக்கும் ஏற்பட்ட சதியைக் கேட்டுக் கலங்கி, கண்ணீர் விட்ட



னர். கடவுளிடம் பற்றுதலற்ற நாஸ்திக வாதியாயினும் பூதுகனைப்போல் நெஞ்சுரமும், உண்மையும் கொண்ட தீர புருஷன் கிடைப்பது துர்லபம் என்றுதான் மக்கள் கருதினர். சாம்ராஜ்ய வெறியர்களின் சூழ்ச்சிதான் இது என்பதை உணர்ந்து கொண்ட நகரமக்கள் மிகுந்த கொதிப்பு அடைந்திருந்தனர். மறுபடியும் இப்பொன்னான நாட்டில் சோழ சாம்ராஜ்யத்தை ஏற்படுத்திச் சொர்க்கம் போன்ற சுகத்தை அனுபவிக்கலாம் என்று கனவுகண்ட மக்களின் உள்ளத்தில் பூதுகனைப் பற்றிய செய்தி 'மறுபடியும் நல்வாழ்வு பெறுவோம்' என்ற நம்பிக்கையையே பாழாக்கி விட்டது. துக்கம், கலக்கம், கோபம், வெறுப்பு, வீரம்முதலிய உணர்ச்சிகள் மக்கள் மனத்தில் எழுந்து குமுறிக்கொண் டிருந்தன.

அந்தச் சமயம் குடந்தை மாநகரம் குரு க்ஷேத்திரமாக விளங்கியது என்றுதான் சொல்ல வேண்டும். அடிக்கடி பாண்டியர்களுக்கும் பல்லவர்களுக்கும் நடக்கும் போராட்டங்கள் அந்நகருக்குச் சமீபமாகவே நடந்தன.




கரிகாலன், கோச்செங்கணான் முதலிய சோழப் பேரரசர்கள் ஆண்டு வந்த காலத்தில் பூம்புகார் தலைநகராக விளங்கினாலும் குடந்தைமா நகருக்கும் ஒரு மகிமை இருந்தது. அரசாங்கத்தின் பெரிய செல்வச்சாலையும், சிறைச்சாலையும், படைத்தளமும் குடந்தைமாநகரில் தான் இருந்தன. அரசாங்கத்தின் முக்கிய அலுவலகங்கள் அந்நகரில் இருந்ததால் சோழ மண்டலத்திலேயே தலைநகருக்கு அடுத்தபடியாகக் குடந்தை நகருக்குப் பெருமை இருந்தது. இத்தகைய நகரின் பெருமை கால வெள்ளத்தில் அழிந்து விட்டதென்றால் உன்னதமாக விளங்கிய சோழ சாம்ராஜ்யத்தின் சரிவுதானே காரணமாக இருக்க வேண்டும்?

சோழ அரசர்கள் ஆண்டபோது அந்நகரில் இருந்த பெரிய பொக்கிஷம் அப்பொழுது பல்லவர் ஆட்சியில் அங்கில்லை என்றாலும் சிறைச்சாலையையும் படைத்தளத்தின் ஒரு பகுதியையும் அந் நகரிலேயே வைத்திருக்க வேண்டிய அவசியம் பல்லவ மன்னருக்கு இருந்தது. முன்பு சோழ மன்னர் ஆட்சியிலிருந்ததைவிட இப்பொழுது சிறைச்சாலையில் கைதிகள் அதிகமாக இருந்தனர். காவலும் கட்டுப்பாடும் அதிகமாக இருந்தன. படைவீரர்கள் குறைவாக இருந்தாலும் அவர்களுக்குள்ள அதிகாரமும் உரிமையும் அதிகமாக இருந்தன.

இரு பெரும் பகுதிகளாகக் குடந்தைக் கீழ் கோட்டம், காரோணம் என்று பிரிக்கப்பட்ட அந் நகரின் இரு பகுதிகளிலும் அரசாங்க அதிகாரிகளும், நன்கு படித்தவர்களும், பக்திமான்களுமே நிறைந்திருந்தனர். எல்லோரும் படித்தவர்களும் பக்திமான்களுமாக விளங்கியதால் ஆத்மார்த்திக விஷயங்களில் மிகுந்த சிரத்தை செலுத்தக் கூடியவர்களாக இருந்தனர். எப்படி இருந்தால் என்ன? ஒரு காலத்தில் செல்வம் கொழித்த அந் நகரில் பஞ்சமும் வறுமையும் தலைவிரித்தாடின. 'சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர் திருக் குடந்தை' என்று பெருமையாகப் பாடப்பட்ட அந்நகரில் 'பசி, பட்டினி' என்ற குரலைக் கேட்பது சகஜமாகிவிட்டது. பல்லவ மன்னர் காஞ்சியிலிருந்த வண்ணமே மக்களின் பஞ்சத்தைப் போக்க ஏதோ முயற்சி செய்துகொண்டுதான் இருந்தார். பாவம்! நந்திவர்மருக்குச் சோழநாட்டுமக்களின் வறுமை நிலையைக் கவனிப்பதைவிடத் தம் சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றும்கவலையே அதிகமாக இருந்தது. சோழ நாட்டில் அங்குமிங்குமாக ஆண்ட சிற்றரசர்களும் மக்களிடம் கவலை காட்டுகிறவர்களாக இல்லை. பல்லவ மன்னரின் கீழிருந்து அவருடைய பிரதிநிதி ஆட்சி புரியும் சிற்றரசர்கள் பல்லவ மன்னருக்கு அடங்கி இருந்து தங்கள் நலனைக் காத்துக் கொள்வதில் சிரத்தையாக இருந்தார்களே தவிர, மக்களிடையே பரவியுள்ள பஞ்சத்தையும் வறுமையையும் நீக்குவதற்கு வேண்டிய பணிகளைச் செய்கிறவர்களாக இல்லை. அந்தச் சமயம் சோழ நாட்டு மக்களின் மனக்கொதிப்பு எப்படிப் பட்டதாக இருக்கும்? அதிலும் ஒரு புறம் அரசியல் போராட்டம். இன்

உங்கள் அழகை அதிகரிக்கிறது பாதுகாக்கவும் செய்கிறது!

அற்புத நறுமணமூட்டப்பட்ட சார்மிஸ் ஸ்னோ உங்கள் சருமத்தை அழகுறச் செய்கிறது. பாதுகாக்கிறது. எல்லா பருவ காலங்களிலும் சருமத்தை மிருதுவாகவும், வெல்வெட் போல வழவழப்பாகவும் வைக்கிறது. பவுடருக்கு ஆதாரமானது. எண்ணைப் பசையில்லாதது. சார்மிஸ் ஸ்னோ சொற சொறப்பும், வரிகளும், கோடுகளும், புண்களும் ஏற்படாமல் சிறந்த முறையில் தடுக்கிறது. பூச்சிக்கடிகள், வெடிப்புகளினின்றும் பாதுகாக்கிறது.





ஒரு கால்கேட் உயர்தர சரக்கு

சார்மிஸ் ஸ்னோ

CSG/3

சார்மிஸ் பலகாரிய க்ரீமையும் டால்கம் பவுடரையும் பரீட்சித்திருக்கிறீர்களா?


நல்ல தேநீர் தயாரிக்க நீரை
அதிகமாக கொதிக்க வைக்காதீர்கள்
நீர் அதிகமாக (அல்லது அளவுக்குக் குறைவாக) கொதிக்க வைக்கப்பட்டால் உங்கள் தேநீர் அவ்வளவு நன்றாக அமையாது.
இந்த முக்கிய விதிகளை பின்பற்றுங்கள்
1. நம்பகமான வியாபாரியிடம் மட்டுமே தேயிலையை வாங்கவும்.
2. புதிய நீரை எடுத்துக்கொள்ளவும். நீரை நன்றாக கொதிக்கும்வரை சூடு செய்து, கெட்டிலை அடுப்பிலிருந்து அகற்றிவிடவும். தேநீர் பாத்திரத்தை வெந்நீரால் நன்றாக அலசிக் கழுவவும்.
3. ஒவ்வொரு நபருக்கு ஒரு தேக்கரண்டி வீதமும், தேநீர் பாத்திரத்தை உத்தேசித்து ஒரு தேக்கரண்டி அதிகமாகவும் கணக்கிட்டு தேயிலையை தேநீர் பாத்திரத்தில் சட்டென்று போடவும்.
4. கொதிக்கவைத்த நீரை உடனுக்குடன் தேநீர் பாத்திரத்தில் ஊற்றி, தேயிலையை மூன்று முதல் ஐந்து நிமிடங்கள் வரை ஊறவைக்கவும்.
5. தேநீரை கோப்பையில் ஊற்றி, பாலையும் சர்க்கரையையும் ருசிக்கு ஏற்றவாறு சேர்த்துக்கொள்ளவும். கலக்கி அருந்தவும்.
நான்தான் டீ - லட்பின் சின்னம்
TEA BOARD INDIA

ஒரு புறம் மதவாதிகளின் போராட்டம். இவைகளுக்கிடையே பஞ்சம். வறுமை இவைகள் வேறு தாண்டவமாடினால் குடந்தைமா நகர மக்களின் மன உணர்ச்சி எப்படிப்பட்டதாக இருந்திருக்கும் என்பதை வர்ணிக்க வேண்டுமா ?

பல்லவ சாம்ராஜ்யத்தின் கீழ் சிறு சிறு ஊர்களை ஆண்ட சிற்றரசர்களைக் கண்காணிக்கும் அதிகாரம் தஞ்சையை ஆண்ட முத்தரையரிடம்தான் இருந்தது.



இது பல்லவ மன்னர் அவருக்கு அளித்த அதிகாரமல்ல. மற்ற அரசர்களைவிட முத்தரையர் ஆண்ட பகுதியும், அவருடைய சேனை பலமும் அதிகமாய் இருந்ததாலும், அவருக்கு அப்பொழுது பல்லவ மன்னரிடம் செல்வாக்கு அதிகமாயிருந்ததாலும் இயற்கையாகவே அந்த அதிகாரம் அவருக்கு ஏற்பட்டு விட்டது. முத்தரையரின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் போல் சிற்றரசர்கள் இருந்தாலும் பலர் அந்தரங்கமாக அவரிடம் ஆத்திரமும் பகை யுணர்ச்சியும் கொண்டிருந்தனர். இவர்களெல்லாம் ஒரு சமயத்தைச் சேர்ந்தவர்களாக இல்லாமல் சமண, புத்த, சைவ, வைஷ்ணவ சமயத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். இதனால் அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுவதும் கடினமாக இருந்தது. இவர்களுக்குள் பல பிணக்குகள் இருந்தாலும் பல்லவ மன்னரின் போர் முரசு கேட்டதும் அவர்கள் ஒற்றுமையாகி விடுவார்கள்.

அறிவாளிகள் நிறைந்திருந்த காரணத்தாலோ என்னவோ கொடிய பஞ்சம் ஏற்பட்ட நிலையிலும் தத்துவ விசாரங்களில் மக்களுக்கு மிகுந்த பற்றுதல் இருந்தது. புத்தமும் சமணமும் தலை ஓங்கி நின்ற அந் நகரில் அவைகளின் சிறப்பு சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கிய காலம் அது. சைவ சமயத்திலும், வைஷ்ணவ சமயத்திலும் மக்கள் மிகுந்த பற்றுதல் உள்ளவர்களாகி அச்சமயங்கள் உன்னத நிலையை அடைந்திருந்த சமயம் அது. பல்லவ மன்னர்களுள் குணபரனாக விளங்கிய மகேந்திர பல்லவனின் ஆட்சிக் காலத்தில் குடந்தை நகரில் வந்திருந்து மக்களைப் பக்தி மார்க்கத்தில் திருப்ப முயற்சி செய்த சைவப் பெரியார் திருநாவுக்கரசரும் வைஷ்ணவ அடியார் திருமிழிசை ஆழ்வாரும் விதைத்த விதை அன்று பெருமரமாகி நின்றது போல்தான் அன்று சைவமும் வைஷ்ணவமும் மேலோங்கி நின்றன. சைவ வைஷ்ணவர்களின் பலம் மேலோங்கி நின்றாலும் புத்த ஜைன மதத்தினரும் மனம் தளராமல் பிரசாரம் செய்து வந்தனர்.

‘குடந்தைக் கீழ் கோட்டத் தெம் கூத்தனார்’ என்று திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடிப் புகழப்பட்ட சிவபெருமானின் திருக்கோவில் ஒரு புத்த விஹாரத்துக்குச் சமீபமாகச் சிறிதாக அமைந்திருந்தது. பெரிய ஆராமத்தோடு கூடிய அந்த புத்த விகாரத்துக்குப் பகவமுனி என்ற தவச்சிரேஷ்டர் தலைவராக விளங்கினார். அவருக்குச் சீடராக நூற்றுக் கணக்கான பிக்ஷுக்கள் இருந்தனர். எப்படி இருப்பினும் நாளுக்கு நாள் புத்தசங்கத்தில் தோன்றியுள்ள பலவித ஊழல்கள் அந்த உத்தம புருஷரின் மனத்தை வாட்டத் தொடங்கின.

அதோடு பூம்புகார் புத்தசேதியத்தில் ஏற்பட்ட கொலையைப் பற்றிய செய்திகள் அவருக்குப் புத்த, தரும சங்கங்களில் உள்ள நம்பிக்கையை அடியோடு போக்கி விட்டன. மனக் கலக்கத்தோடு அவர் காவிரிக் கரையைத் தனித்த ஒரு இடத்தில் இருந்து சித்தத்தை அடக்கித் தியானத்தில் இருந்தார். தியான நிலையிலிருந்து அவர் எழுந்தபோது அன்பே சிவம் என்ற சைவ சமயக் கோட்பாட்டை லட்சியமாகக் கொண்டவராகத் திரும்பினார். அவர் தீவிர தேசபக்தராகி விட்டதை யறிந்த அநேக புத்த பிக்ஷுக்கள் அவருடைய வழியைப் பின்பற்றத் தொடங்கினர். பகவ முனிவரும் அவருடைய சீடர்களும் சைவ சமயத்தைத் தழுவியது குடந்தையில் புத்த தரும, சங்கங்களின் அஸ்திவாரத்தையே தகர்த்து விட்டது.

அன்று குடந்தை மக்கள் ஒன்றுகூடிப் பழையாறை நகரை நோக்கிச் சென்றனர். அப்பொழுதுதான் கொடும்பை மாநகரிலிருந்து வந்த விஜயனும் அவன் சகோதரி அருந்திகையும் குடந்தை மக்கள் அறிவித்த திடுக்கிடும் செய்தியைக் கேட்டு வியப்படைந்தனர். (தொடரும்)

படித்துப் பாருங்கள்

மகாத்மா காந்தியின் சுயசரிதம் சுருக்கம்

மகாத்மா காந்தி நாம் செய்த புண்ணிய வசத்தால் தமது வாழ்க்கை வரலாற்றைத் தாமே எழுதி யிருக்கிறார்!

இப்படி நாம் சொல்லும் போது, இதை ஏதோ உயர்வு நவிற்சியாகச் சொல்வதாகக் கருதலாம். ஆனால் அதுதான் இல்லை. இது நூற்றுக்கு நூறு பங்கு உண்மை என்று கருதியே சொல்கிறோம்!

உலகில் ஒருவர் மகானாகத் தோன்றி விட்டால், அவர் படும் பாடு கொஞ்ச நஞ்சமல்ல. அவரைப் பற்றிப் பொய்யும் மெய்யும் கலந்த கட்டுக் கதைகள் ஏராளமாகத் தோன்றி விடும். 'அவர் இந்த அதிசயத்தைச் செய்தார்; அந்த அதிசயத்தைச் செய்தார்' என்று நூற்றுக்கணக்கான நம்பமுடியாத கட்டுக் கதைகள் தோன்றிவிடும். அதனால் மகாத்மாக்களாகத் தோன்றியவர்களைப்பற்றி 'இவர்கள் மகாத்மாக்கள்தானா' என்ற சந்தேகம் பிற்காலச் சந்ததியாருக்கு ஏற்பட்டு விடுவதுகூட உண்டு. இதைப் பார்க்கும்போது காந்திமகான் தமது வாழ்க்கை வரலாற்றைத் தாமே எழுதியது எத்தகைய பேருபகாரம் என்பதை உணரலாம்.

"கற்பனைக் கதைகளை நம்புவது கஷ்டமாக இருக்கலாம். ஆனால் உண்மை கற்பனையை விட விசித்திரமானது!" என்று சொல்லுவார்கள். இதுவும் நூற்றுக்கு நூறு உண்மை என்பதைக் காந்தி மகான் வாழ்க்கையைப் படிக்கும்போது உணர்கிறோம்!

காந்திமகான் வாழ்க்கையில் உண்மைக்காக வேண்டி எத்தனை கஷ்டங்களும் நஷ்டங்களும் அனுபவித்திருக்கிறார். இவற்றைப்பற்றி யாராகிலும் நம் பிற்கால சந்ததியாரிடம் சொன்னால் நம்பமாட்டார்கள். அவற்றை யெல்லாம் பற்றி அவரே எழுதி யிருப்பது எவ்வளவு நல்லதாகப் போய்விட்டது.

தமது சுய சரிதையில் குறைகளை எவ்வளவு விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். காந்திமகானின் உண்மைப் பற்று நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது!

இந்த மகானின் சுயசரிதத்தை திரு எஸ். கிருஷ்ணசாமி பாரதிஅவர்கள் மிக நல்ல தமிழில் மொழிபெயர்த்துச் சுருக்கி யிருக்கிறார். இதைப்பற்றி ராஜாஜி கிருஷ்ணசாமி பாரதியார் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

இன்று தபாலில் சுப்பராமன் சுய சரிதம் அனுப்பினீர். திறந்து இங்கு மங்கும் உடனே படித்துப் பார்த்தேன்.

படிக்கக் கூடிய தமிழில் எழுதியிருக்கும் ஒரு தமிழ்ப் புத்தகம் பார்த்து மிக்க மகிழ்ச்சி யடைந்தேன்.

உங்களுடைய பெயரைத் தலைப்பில் பார்த்துச் "சரி" என்று சொல்லிக் கொண்டு மகிழ்ந்தேன்.

பக்கம் 30-ம் அதற்கடுத்த பக்கங்களையும் தள்ளிப் பார்த்தேன். மிகக் கஷ்டமான இடத்தில் தெளிவாகவும் யோக்கியமான முறையிலும் ஏதும் விட்டு விடாமலும், நன்றாக எழுதி யிருக்கிறீர்கள். மிகத் திருப்தி யடைந்தேன்.—இராஜகோபாலாச்சாரி"

ராஜாஜி இவ்வளவு பாராட்டுமளவுக்கு முப்பதாவது பக்கத்தில் என்ன இருக்கிறது என்று கேட்கிறீர்களா?

காந்திமகான் வாழ்க்கையில் மிக மிக முக்கியமான சம்பவம் அப் பகுதியில் வருகிறது. அதை அவ்வளவு சுலபமாக இங்கு சொல்லி விட முடியாது. புஸ்தகத்தை வாங்கி ஒருமுறை படித்து விடுங்கள்! அதுதான் நல்ல வழி!

பிரசுரம்: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, தல்லாகுளம், மதுரை, விலை: ரூ. 1-50.

காதலும் கடமையும்

இந்த இரண்டு சொற்களும் 'க'வில் ஆரம்பமாகின்றன. இந்த மோனையைப் பார்த்து இந்த இரண்டு சொற்களுக்குள்ளும் ஒற்றுமை யிருக்குமோ என்று நினைக்கலாம். ஆனால் இரண்டுக்கும் உள்ள பகை கொஞ்ச நஞ்சமல்ல. காதல் ஒரு மனிதனின் உள்ளத்தில் புகுந்து விட்டால் கடமை உடனே அந்த இடத்தை விட்டு வெளியேறி விடுகிறது! கடமை வந்து புகுந்து கொண்டால் காதல் வெளியேறி விடுகிறது! இந்த இரண்டையும் சேர்த்து இழுத்துப் பிடித்து ஒரு உள்ளத்தில் உட்கார வைப்பதற்குள் போதும் போதும் என்றாகி விடுகிறது! இந்த மகத்தான போராட்டத்தை நண்பர் பெ. தூரன் அவர்கள் இந்த நூலில் வெகு வெற்றிகரமாகச் சித்திரித்துக் காட்டுகிறார்.

டாக்டர் கேசவன், தமது காதல் விவகாரத்தில் ஒரு மகத்தான முடிவு எடுத்துக் கொள்ளும்போது, கடமையில் தவற நேர்கிறது. அதனால் எத்தனை எத்தனை சிக்கல்கள் நேரிடுகின்றன. முடிவில் தாம் கடமையில் தவறவில்லை என்பதை உணர்கிறார்! அதன் விளைவாகக் காதலிலும் வெற்றி பெறுகிறார்!

இந்தக் கதை நாடக வடிவில் அமைந்திருக்கிறது. சில நாடகங்கள் படிப்பதற்குத்தான் நன்றாக இருக்கும். நடிப்பதற்கு நன்றாக இராது. ஆனால் இந்த நாடகத்தையோ, படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்ற முறையில் அமைத்திருக்கிறார் ஆசிரியர்.

இப்பொழுதெல்லாம் நம் தமிழ் நாட்டிலே நடிப்புக் கலை புத்துயிர் பெற்று வருகிறது. ஆபீஸ் உத்தியோகஸ்தர்களும் கல்லூரி மாணவர்களும் நாடகம் போட வேண்டும் என்ற ஆர்வம் கொண்டு துடிக்கின்றனர். ஆனால் நடிப்பதற்கு நல்ல நாடகம் இல்லையே என்று ஏங்குகின்றனர். அவர்கள் காட்சி ஜோடனைகளுக்காக அதிகம் செலவழிக்காமலும், உடை செலவின்றியும் இந்த ஆசிரியரின் அனுமதி பெற்று இந்த நாடகத்தை நடிக்கலாம். சம்பாஷணைகள் வேகமும் நளினமும் பொருந்திய இயற்கையான தமிழில் மிக உயர்தரமாக அமைந்திருக்கின்றன! நடிகர்கள், நல்ல பெயர் சுலபமாகத் தட்டிக்கொண்டு போய்விடலாம்!

[பிரசுரம்: இன்ப நிலையம், மயிலை, சென்னை விலை: ரூ. 1—50.]

எமது வியாபாரம் பெற்ற பேறு தங்கமான மனிதர்களின் ஆதரவே...

இத்தகைய தங்கமான மனிதர்களிடம்—ஆம், உங்களிடம் எமக்கு இதயபூர்வமான பற்றுதல் உண்டு. நீங்கள் எதை விரும்புகிறீர்கள், எதை விரும்புவதில்லை, வாங்குவதன் காரணம் என்ன — அல்லது, வாங்காத காரணம் என்ன என்பனவற்றை அறிந்து கொள்ளும் நோக்கத்தோடு எமது மார்க்கெட் ரிஸர்ச் இலாகா தீவிரமாக முனைந்திருக்கிறது.

எமது பேட்டியாளர்களின் குழுக்கள் நாடெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்கின்றன. ஆங்காங்கு நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள குடும்பங்களைப் பேட்டி காண்கின்றன; பெருகிவரும் உங்கள் தேவைகளையும் மாறிவரும் உங்கள் ரசனையையும் குறித்துக் கொள்கின்றன. ஏற்கனவே எமது சரக்குகள் பற்பலவும் உங்கள் குடும்ப நண்பர்களாக ஆகியிருக்கக்கூடும்; எமது பேட்டியாளர்கள் தொகுத்து வரும் புள்ளிவிவரப் படங்களிலும் அறிக்கைகளிலும் ஏற்கனவே நீங்கள் இடம் பெற்றுவருகிறீர்கள். புள்ளிவிவர ஏடுகள் ஒருபுறமிருக்கட்டும். எங்களுக்கு அவற்றைவிட முக்கியம், பன்மடங்கு முக்கியம் நீங்களல்லவா? எவ்வித சிரமத்தையும் பொருட்படுத்தாமல் உங்கள் தேவைக்கேற்ற சேவை செய்வதே குறிக்கோளாக, தரத்தில் உயர்ந்த சரக்குகளையே தவறாமல் வழங்கி, நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு உன்னதமான முறையில் ஈடுசெய்ய என்றென்றும் பாடுபடுவோம்.

குடும்பந்தோறும் தழைத்தோங்க ஊழியம் புரிவது

ஹிந்துஸ்தான் லீவர்




HLL. 4-X29 TM

உங்கள் தேவைக்கான

தண்ணீர்

சுலபமாகவும்...
வேகமாகவும் கிடைக்க



ஒரு மயர்ஸ் ஷாலோ-வெல் ரெஸிப்ரோகேடிங் பம்பைப் பொருத்தி, துரிதமான, நிச்சயமான, தாராளமான தண்ணீர் சப்ளை கிடைக்க வழி செய்து கொள்ளுங்கள். நீடித்த உழைப்பு, சுலபமாக இயங்குவது, மூத வீட்டுச் செலவில் குறைவு. இவற்றால் இன்று மயர்ஸ் மிகவும் விரும்பப்படுகிறது. இதன் இயங்கும் சக்தி மணிக்கு 250 காலன்களுக்கு மேல். இன்றே எங்களை கலந்து ஆலோசியுங்கள்.

கஷ்டமில்லாத தண்ணீர் சப்ளைக்கு

மயர்ஸ்

ஷாலோ-வெல் ரெஸிப்ரோகேடிங் பம்பு

வாட்டர் சப்ளை ஸ்பெஷலிஸ்ட்ஸ்
பிரைவேட் லிமிடெட்
45, தம்புசெட்டித் தெரு, சென்னை-1

WSS.56.15

உங்கள் வாழ்க்கையை

மலச் சிக்கல்

ஒரு பாரமாக்க வேண்டாம்.



தலை வேதனை, உடம்பெரிச்சல், பசி மந்தம் ஜீவசக்தியின்மை, மேனியழகு மங்குதல், இவையெல்லாம் ஜீரண உறுப்புகளில் அசுத்தம் பிருப்பதன் நேரடியான விளைவாகும். மலச் சிக்கல் உங்கள் வாழ்வையே ஒரு சுமையாகக் கருதும்படி செய்ய விடக்கூடாது. ப்ருக்லாக்ஸை உட்கொண்ட மாத்திரத்தில் புதிய ஜீவசக்தியுண்டாகும். ருசிமிகுந்த இந்த சாக்லேட் பேதி மருந்து குடலின் வேலையை சகஜமாக ஊக்கி கழிவடைப் பொருள்களை நிச்சயமாக வெளிப்படுத்துகிறது. இன்றிரவே ஒரு சாக்லேட் சாப்பிட்டு, காலை எவ்வளவு புத்துணர்ச்சியுடன் சக்தியுடன் விளங்குகிறீர்களென்பதை பாருங்கள். ஆனால் ப்ருக்லாக்ஸ் என்று கேட்டு கவனித்து வாங்குங்கள்!

ப்ருக்லாக்ஸ்
ஒரே இரவில்
உங்களை குணமாக்கும்
(லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் லாபரேடரீஸ் லிமிடெட் தயாரிப்பு)

இன்டெண்டிங் ஏஜண்டுகள்:
ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி
99-A, அரமனைக்காரத் தெரு, மதராஸ்-1

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

30. கைகண்ட மருந்து

"பவளக் கொடியைப் பார்த்திருக்கிறீர்களா?"

"எந்தப் பவளக்கொடியை?"

"பவளக் கொடியில்தான் எத்தனை வகை! அதே பெயரில் பல சினிமாக்கள் வந்து விட்டன."

"போதும், போதும், நிறுத்து. நான் சினிமா பவளக்கொடியைப் பற்றிச் சொல்லவில்லை. பவளக்கொடி என்று ஒரு மருந்துச் சரக்கு. சுக்கு மிளகு போன்ற நாட்டு மருந்துகள் விற்கும் கடையில் விற்கும். அதைப்பற்றிச் சொன்னேன்."

சேமியா பாயஸம் சாப்பிட்டிருக்கிறீர்களா? சாப்பிட்டிருப்பவர் அதிலுள்ள சேமியாவின் கணுக்களைப் பார்த்திருப்பீர்களே! சாப்பிடாதவர் இன்றே ஒரு கப் சேமியா பாயஸத்தை என் தயவால் உங்கள் செலவில் ஒரு ஹோட்டலிலோ அல்லது வீட்டில் செய்யச் சொல்லியோ பாருங்கள். அதில் இந்தச் சேமியா எப்படி இருக்கிறதென்று அறிவீர்கள்.

சேமியாப் பாயஸத்தைப் பார்ப்பது தானா? சாப்பிடக்கூடாது என்கிறீர்களா?

ஐயா! ஒவ்வொரு காரியத்திலும் பொறுப்பை மற்றவருடன் பகிர்ந்து கொண்டு வகிப்பதுதான் ஜனநாயகத்துக்கு ஏற்றது. தனியொருவருக்கு மிதமான பொறுப்பு இருக்குமானால் அதை அவர் நிறம்பட வகிக்கவும் சாத்தியமாகும். ஆகவேதான் சொன்னேன். சேமியா பாயஸத்தை உண்டாக்குவது ஒருவர் பொறுப்பு, அதைப் பார்ப்பது இன்னொருவர் பொறுப்பு. சாப்பிடுவது மற்றொருவர் பொறுப்பு. செலவை ஏற்பது வேறொருவர் பொறுப்பு. இப்படிச் செய்வது நலமென்று சொன்னேன். ஏற்றால் நல்லது. இல்லாவிடில் உபக்கும் எனக்கும் சச்சரவு வேண்டாம். உங்களுக்கு இரண்டு பொறுப்பை ஒப்படைக்க நான் தயார். பாயஸத்தைப் பார்ப்பது; செலவை ஏற்பது என்பவை.

ஏறத்தாழப் பாயஸத்திலிருக்கும் சேமியாவைப் போல் இருக்கும், கடையில் விற்கும் பவளக்கொடி என்னும் மருந்து. இதைத்தானே சொல்ல வந்தேன்?

இந்தப் பவளக்கொடியை வாங்கி வருவது. அதை ஒரு பீங்கான் கிண்ணத்தில் விட்டு அது நன்றாய் முழுகி நிற்குமளவு எலுமிச்சம் பழ ரஸத்தை விட்டு 1-2 மணி நேரம் வைத்திருப்பது. பிறகு, ரஸத்தை ஊற்றிவிட்டுப் பவளக் கொடியைத் தண்ணீர் விட்டுக் கழுவி வெய்யிலில் உலர்த்தி எடுத்து வைத்துக் கொள்வது. இதுதான் இதற்குச் சுத்தி.

பிறகு சுத்தி செய்த இப் பவளக் கொடியை, எலுமிச்சையின் ரஸம் விட்டு ஒரு நாளெல்லாம் அரைத்து உருட்டி, ஒரு அங்குல அகலம் அரைக் கால் அங்குல கனமுள்ள வில்லைகளாகத் தட்டி வெய்யிலில் உலர்த்திக் கொள்வது. ஒன்றிரண்டு தினங்கள் உலர்ந்த பிறகு அவ் வில்லைகளை ஒரு அகலிலிட்டு மேலே ஒரு அகலினால் மூடி, இரண்டு அகல்களும் தொடுமிடத்தைக் களிமண்ணால் பூசி, அதன்மேல் மெல்லிய சீலையைச் சுற்றி, மறுபடியும் களிமண் பூசி, அப்படியே வெயிலில் உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

பத்துப் பதினைந்து வரட்டிகளை வட்டமாக அடுக்கி, அதன்மேல் மேற்சொன்ன அகலை வைத்து, மற்றுமொரு பத்துப் பதினைந்து வரட்டிகளால் மூடி. அதன்மேல் கொஞ்சம் தணலையிட்டுத் தீப்பிடிக்கச் செய்வது. தானே எரிந்து தானாகவே ஆறித் தணிந்த பிறகு அகலை எடுத்துத் திறந்து பவளத்தின் வில்லைகளை எடுத்துக் கொள்வது.

மறுபடியும் இந்தப் பவளத்தை மேற்சொன்ன விதமே அரைத்து வில்லை தட்டிக் காயவைத்துப் புடம் போடுவது. இப்படி 2, 3, 4 5 என்று சக்திக்கும் சௌகர்யத்துக்கும் தக்கபடி புடமிட்டுக் கடைசியில் மைபோலப் பொடித்து, ஒரு புட்டியில் வைத்துக் கொண்டு முன் கட்டுரையில் தெரிவித்து போல் தேனுடன் கலந்து கொடுத்தால் சளி, இருமல், ஜலதோஷம், ஜுரம் முதலியவற்றுக்கு நல்ல பலனை யளிக்கும். ஜீரணக் குறைவு, மந்தம், வயிற்றுப்போக்கு முதலியவற்றுக்குக் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். சளி பிடித்ததென்றால், பிடித்த சளி முறிய வேண்டும். இதற்கு இருமித்தானாக வேண்டும். குழந்தைகளாயின் வசம்பின் சாம்பல் பவள பஸ்மம் முதலியவற்றைச் சாப்பிடச் சளி முறிந்துவிடும். ஒன்றிரண்டுதரம் இருமும் போதோ, ஆகாரத்துக்குப் பிறகோ வாந்தி எடுத்து விடும். இதனால் சளி களையப்படும்.

பெரியவர்களுக்கோ...? இச் சளியை இருமித்தான் துப்பியாக வேண்டும். சளி முறியாவிட்டால் எவ்வளவு இருமினாலும் துப்ப வராது. இருமலும் நிற்காது. தொடர்ந்து வெகு நேரம் இருமல்



கணவன் : **பெண்களுக்கு இருக்க வேண்டிய ஆபரணத்திலே முக்கியமானது நாணம் என்று போட்டிருக்கிறது!**

மனைவி : **அதை என்னிடம் வந்து சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லே? உடனே போய் அதில் ஒன்று வாங்கி வாருங்கள்!**

நீடிக்கும். ஓட்டை வெண்கலப் பாத்திரத்தைத் தட்டியது போல் இருமும் சத்தம் இருக்கும். வெகு நேரம் இருமுவார்கள். விலாப்புறமெல்லாம் வலியுண்டாகும்; கொக்கி போட்டு இழுத்துப் பிடித்துள்ளது போல் கஷ்டப்படுவர். கண்கள் தெறித்து விழுந்து விடுமோ என்றபடி, அவல் இடிக்கும்போது ஏற்படும் சத்தம்போல் ''கண். கண்'' என்று நெடுநேரம் இருமிக் கொண்டிருந்து சிறிது சளியைத் துப்பிய பிறகுதான் சற்றுச் சாந்தமுறுவர்.

இந்நிலையில் சளியை முறித்திடவும், முறிந்த சளியை எளிதில் துப்பிடவும் உதவக்கூடிய இரண்டு மருந்துகளை உபயோகிக்கலாம்.

தாளீசாதி சூர்ணம் :—தாளீசபத்திரி, மிளகு, தோல் சீவிய சுக்கு, அரிசித் திப்பிலி, மூங்கிலுப்பு ஆகியவற்றைத் தனித் தனியாகப் பொடித்துச் சலித்தெடுத்த சூர்ணம் 2, 4, 6, 8, 10 தோலாக்கள் வீதம் நிறுத்து எடுத்து ஒன்றாய்க் கலந்து கொள்ளவும். பிறகு லவங்கப்பட்டை, ஏலரிசி இரண்டையும் அவ்விதமே தனித் தனி பொடித்தது, ஒவ்வொரு தோலா வீதம் நிறுத்தெடுத்து, முதல் சொன்ன சூர்ணத்துடன் கூட்டிக் கலந்து கொள்ளவும். மொத்தம் 32 தோலாவாயிற்றா? சீனி கற்கண்டு மேற்சொன்ன விதம் இடித்துச் சலித்தது 64 தோலா. இதையும் மேற்சொன்ன சூர்ணத்துடன் கூட்டிக் கலந்து-ஈரமில்லாத வாயகன்ற புட்டியில் எடுத்து வைத்துக் கொள்ளவும். இதுதான் தாளீசாதி சூர்ணம்.

இது ஆரம்ப நிலையிலுள்ள சளி இருமலில் மிகவும் பலனளிப்பது. ஐந்து வயதுக் குழந்தை முதல் எல்லோருக்கும் கொடுக்கலாம். ½ - 1 டீ ஸ்பூன் அளவு இச்சூர்ணத்தை எடுத்து ஒரு கோப்பையிலிட்டுத் தாராளமாகத் தேன் விட்டுக் குழைத்து வைத்துக் கொள்ளவும்.

சற்று நேரத்துக் கொருதரமாக விரலால் தொட்டு இக்குழைப்பு மருந்தை நாக்கில் தடவி ருசித்து உட்கொள்ளவும். அடிக்கடி இப்படிச் சாப்பிடுவதால் ஏறத்தாழ எல்லா நேரமும் இம்மருந்தின் ருசியும் மணமும் நாக்கிலும் தொண்டையிலும் இருந்து கொண்டே இருக்கும்.

'ம்ஹாஹாம்' என்று கனைத்த மாத்திரத்தில் சளி வெளிப்பட்டு விடும். அதிகமாக இருமி இருமி—வியர்த்து—களைப்புற்றுச் சிறிதளவு துப்ப வேண்டிய கஷ்டம் குறையும். இது சிறுவரில் அஜீர்ணம், மந்தம் அதிகமாக ஜெரித்தும் ஜெரிக்காமலும் வெளிக்குப் போகும் நிலை, ஜுரம் ஆகியவற்றிலும் பலனளிப்பதாகும். எளிய மருந்து—செய்வது சிரமமில்லாதது. ஒவ்வொரு வீட்டிலும்—இருக்கத்தக்க உபயோகமான மருந்து.


எளிதில்துப்பிடும் சளியை, துப்பத்துப்பமாளாத சளியை, கொத்துக் கொத்தாக எவ்வளவுதான் — எவ்வளவுதரம் தான் துப்பிக் கொண்டிருப்பது? இந்நிலையில் உபயோகிக்கத் தக்கது — தாளீசாதி சூர்ணத்தைவிடச் சளியைப் போக்குவதில் அதிகம் சக்தி வாய்ந்தது; சாப்பிடும் முறை மேற்சொன்ன விதந்தான். ஆனால் இதைச் சிறுவர்களுக்குக்கொடுக்க வேண்டாம். அட! மருந்தைச் சொல்லாமல் குணத்தைச் சொல்லிக் கொண்டே போகிறேனே! அது கற்பூராதி சூர்ணம்.

தனித்தனியாகப் பொடித்துச் சலித்த ஆரத்தி கற்பூரம், கிச்சிலி [பூலான்] கிழங்கு, தக்கோலம், ஜாதிக்காய் இவை ஒவ்வொரு தோலா. லவங்கம் என்னும் கிராம்பு, சிறுநாகப்பூ, மிளகு, சுக்கு, திப்பிலி ஆகியவை இரண்டிரண்டு தோலா. சீனிகற்கண்டு இடித்துச் சலித்த சூரணம் 30 தோலா. யாவற்றையும் ஒன்றாய்க் கலந்து முன்சொன்னது போல் எடுத்து வைத்துக் கொள்ளவும். தாளீசாதி சூர்ணம் உபயோகமாகுமிடங்களில் இது உபயோகமாகும். பல்நோவு, ஈறு வீக்கங்களிலும் இதில் ஒரு சிட்டிகையை எடுத்து அவ்விடத்தில் அப்பி வைத்து, ஊறும் உமிழ் நீரைத் துப்பி வெந்நீரால் வாய் கொப்பளிப்பதும் சில அனுபவம் மிக்க வைத்தியர்கள் கையாண்டு வரும் ஒரு உபாயம். (தொடரும்)



பிரகாசமுள்ள
வெண்ணிறப் பற்கள்
மட்டுமல்ல
அத்துடன்
ஆரோக்கியமான
ஈறுகளும்!
ஈறுகளை கெட்டியாகவும் ஆரோக்கியமாகவும் வைக்கவும் மற்றும் பற்களுக்கு ஸ்படிகத்தைப் போன்ற வெண்மையை அளிக்க வேண்டும் என்றே போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் விசேஷமாய்த் தயாரிக்கப்படுகிறது. உங்களை ஈறுகள் சம்பந்தமான நோய்கள் தொற்றிக்கொண்டு அவதி கொடுக்காதிருக்கவே யாவரும் அறிந்த இப்பற்பசையில் டாக்டர் ஆர்.ஜே.போர்ஹான் டி.டி.எஸ் அவர்கள் பக்குவப்படுத்திய முறையில் விசேஷ காரப் பொருள் கலக்கப்படுகிறது. ரத்தக்கசிவு வீங்கிய ஈறு புண்ணானதும் மற்றும் கூசும் ஈறுகளை லேசாக போர்ஹான்ஸ் கொண்டு தேய்க்க வேண்டும். அவை உடனே கெட்டியான ஆரோக்கிய நிலைக்குத் திரும்பி விடும் ஆனபடியால் இந்த இரட்டைக் காரியமுள்ள பற்பசையை நீங்கள் உபயோகித்து பளிச்சென இருக்கும் வெண் பற்களையும் நல்ல ஆரோக்கியமான ஈறுகளையும் உடையவரெனப் பெருமைப்படலாம்.
செய்யப்பட்ட டூத்பேஸ்ட்
போர்ஹான்ஸ்
ஈறுகளுக்குகந்தது
H-12

குழந்தைகளின் வயிற்றுவலிகளை துரிதமாக சமனம் செய்வது




க்ரைப்பானில்

(க்ரைப் மிக்ஸ்சர்)

ஒரு 'டல்ஸைனூல்' காரர்களின் தயாரிப்பு

TA.

B. I. S. N. கம்பெனி லிமிடெட்



M. S. "ஸர்தானா"

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

மேற்படி கப்பல் கீழ்க்கண்ட தேதியில் புறப்படும்


சென்னையிலிருந்து	நாகப்பட்டினத்திலிருந்து
1957 செப்டம்பர் 23	1957 செப்டம்பர் 24
1957 அக்டோபர் 18	1957 அக்டோபர் 19

சென்னையிலிருந்து செப்டம்பர் 23-ந் தேதி புறப்பட இருக்கும் கப்பலில், 'பெர்த்' வசதியற்ற டிக்கட்டுகளோ, 'பங்க்' வசதி பெற்ற டிக்கட்டுகளோ தர இயலாததற்கு வருந்துகிறோம். அக்டோபர் 18-ந் தேதி புறப்பட இருக்கும் கப்பலில் செல்வதற்கு ஒரு குறிப்பிட்ட அளவுதான் டிக்கட்டுகள் கிடைக்கும். பிரயாணத்திற்குரிய தஸ்தாவேஜுகளைக் காண்பித்து எங்கள் கம்பெனியின் ஏஜண்டிடமிருந்து நேரிடையாகப் பெற்றுக் கொள்ளலாம். வெளியூர் பிரயாணிகளின் நலனைக் கருதி, பிரயாணத்திற்குரிய முழுக் கட்டணத்தையும் பாங்கி டிராப்ட் மூலமாகவோ, அல்லது மணியார்டர் மூலமாகவோ முன்னதாகவே அனுப்பி வைப்பவர்கட்கு கம்பெனி ஏஜண்டுகள் டிக்கட்டுகளை ரிசர்வ் செய்து வைப்பார்கள். அம்மாதிரி டிக்கட் ரிசர்வ் செய்தவர்கள், குறைந்தது கப்பல் புறப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னமே கம்பெனி ஏஜண்டுகளின் காரியாலயத்தில் பிரயாணத்திற்குரிய தஸ்தாவேஜுகளைக் காண்பித்து டிக்கட்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

பினாங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும் சிங்கப்பூரில் கப்பல் மாற்றிப் பாங்காக்கிற்கு அனுப்பவும் சரக்குகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றுமதி விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட் **7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1**	**மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்** **முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்**



சரோஜா ராமமூர்த்தி

பண்டைய பல்லவ சாம்ராஜ்யத்தின் தலைநகரமாகிய காஞ்சிபுரத்தில் ராஜவீதி என்கிற கம்பீரமான பெயருடன் திகழும் வீதியில் மண் உதிர்ந்து, ஓடுகள் சரிந்து, சிதிலமாகிக் கிடந்த ஓர் ஓட்டு வீடு. அதனுள் கலகலத்துப் போய் வறுமையில் வாடும் ஒரு குடும்பம். அந்தக் குடும்பத்துக்கும் ஒரு தலைவர் இருந்தார்; தலைவி இருந்தாள். நிறையக் குழந்தைகள் இருந்தார்கள். ஒன்றரைப் படித் தவலையில் சோறு சமைத்தால், குடும்பத் தலைவிக்குக் கடைசியில் ஒரு பிடிகூட மீறாது என்றால் குடும்பத்தின் அளவை ஒருவாறு மதிப்பிட்டு விடலாம். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அரிசியிலிருந்து உப்பு வரையில் அவர்கள் வீட்டில் 'இல்லை' என்ற பாட்டுத்தான். நம் அரசியலார் கூறுவதுபோல் அவர்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கிறவர்கள். வழக்கம் போல அன்று அவர்கள் வீட்டில் அடுப்பில் பூனை தூங்கிக் கொண்டிருந்தது. பழையது கற்சட்டியிலிருந்து நாலு பிடி சாதத்தை உப்ப போட்டுக் கரைத்து ஜலம் விட்டு விளாவிக் குழந்தைகளுக்குக் கொடுத்து அனுப்பி விட்டாள் தர்மாம்பாள். கடைக் குட்டிப் பையன் கண்ணனுக்கு மட்டும் எப்படியோ சமாளித்து ஒரு டம்ளர் காப்பி வைத்துக் கொடுத்தாள்.

பள்ளிக்கூடத்தில் மணி அடித்ததும் குழந்தைகள் ஓடி வந்து விடுவார்கள் என்பது தெரிந்தும், தர்மாம்பாள் தலைப்பை விரித்துப் போட்டுக் கொண்டு படுத்திருந்தாள். அதிகாலையில் எழுந்து போன ஏகாம்பரம்-அவள் கணவர்-வீடு திரும்பவில்லை. மாதம் இருநூறு, முந்நூறு சம்பாதிக்கிற குடும்பத்தின் பொருளாதார நிலைமையே சிரமமாக இருக்கும் இந்தக் காலத்தில், ஏகாம்பரம் ஒருவரின் வருமானத்தைக் கொண்டு அந்தக் குடும்பச் சக்கரம் ஓட வேண்டுமென்றால் அது முடிகிற விஷயமல்ல. அவருடைய மாத வருமானம் ஐம்பது ரூபாய். அதில் அந்த வீட்டுக்கென்று வாடகை எட்டு ரூபாய் கொடுத்தார்கள். மீதி இருப்பதில் எட்டுப் பேர்கள் சாப்பிட வேண்டும்.

ஏகாம்பரம் ராஜ வீதியில் மிட்டாய்க் கடை ஒன்றில் பலகாரங்கள் செய்யும் வேலையில் இருந்தார். காஞ்சிபுரம் எப்படிக் கோவில் குளங்களுக்குப் பிரசித்தமானதோ, அப்படியே வெயிலுக்கும் பிரசித்தமான ஊர். சித்திரை மாசத்துக் கடுங்கோடையில் 'திகு திகு' என்று எரியும் அடுப்பருகில் உட்கார்ந்து வியர்வை ஆறாகப் பெருகி வழிந்தாலும் அந்தக் கடை முதலாளி மேலே ஒரு ஐந்து ரூபாய் சம்பளம் அதிகம் தரமாட்டார். வைகாசி மாதப் ஸ்ரீ வரதராஜப் பெருமாளின் கருடோத்ஸவத்தின் போது கல்லாப் பெட்டி நிறையச் சில்லறை ததும்பி வழிந்தாலும் அவர் நெஞ்சம் கல் நெஞ்சமாகத்தான் இருந்தது. இதில் ஒரு விசேஷம், அவர் தம் கடைக்குப் பக்கத்தில் உற்சவத்தின் போது தண்ணீர்ப் பந்தல் வைத்து நடத்தி வந்தார்!

தினம் இரவு எட்டு மணிக்கு மேல் வீட்டுக்குக் கிளம்பும்போது, அவர் சக தொழிலாளி கச்சபேசுவரன் அவருக்கு முன்பாகவே கடையை விட்டுக் கிளம்பிக் குமரக் கோட்டத்தின் அருகில் வந்து நிற்பார். இவர் வந்ததும், அவரிடம் நாலு மிட்டாய்ப் பொட்டலங்களைக் கொடுத்து, ''கொண்டுபோய்க் குழந்தைகளிடம் கொடும்'' என்று கூறிக் கொடுப்பார்.

''என்னத்துக்கு அப்பா இதெல்லாம்? முதலாளிக்குத் தெரிந்தால் நமக்குத் தான் அவமானம்.....'' என்பார் ஏகாம்பரம்.

''சும்மா இரும், ஐயா! சம்பளம்தான் கூட இரண்டோ மூன்றோ கொடுக்க மாட்டார். கடையில் ஊசி போகிறது காணுது. குழந்தைகள்தான் சாப்பிடட்டும்'' என்று கூறிவிட்டுக் கச்சபேஸ்வரன் போய் விடுவார். அவர் பிரும்மச்சாரி. இந்த ஐம்பது ரூபாய் சம்பளத்தை நம்பி அவர் சம்சார பந்தத்தில் சிக்கிக் கொள்ளவில்லை. அவரைப் புத்திசாலி என்று ஏகாம்பரம் வாயாரப் புகழ்வார். நாள் முழுவதும் அரை வயிற்றுச் சாப்பாடுடன் இருக்கும் குழந்தைகள் அந்தப் பொட்டலங்களைப் பிரித்து ஒரு நொடியில் தின்று விடுவார்கள். அப்பொழுதும் அவர்களுக்குத் திருப்தி ஏற்படாது. ''அப்பாவுக்குத் துளிக்கூட வைக்கவில்லையே'' என்று தர்மாம்பாள் அதட்டினால், ''போகிறது. விடு. எனக்குப்

பலகாரம் ஒன்றுதான் குறைச்சலாக இருக்கிறதாக்கும். ஏதாவது இருந்தால் கொடு...'' என்று கேட்பார்.

மத்தியானம் வடித்த சாதத்தில் நீர் ஊற்றி வைத்திருப்பதில் சிறிது போட்டுக் கரைத்து, மாங்காய் வடு ஊறுகாயுடன் கொடுத்தால் சாப்பிட்டு விட்டுத் திண்ணையில் படுத்து விடுவார் அவர். மனைவி அதுகூடச் சாப்பிட்டிருக்க மாட்டாள் என்பது அவருக்குத் தெரியும். ''சாப்பிட்டாயா?'' என்று கேட்டால், ''சாப்பிட்டேன்'' என்று பதில் வரும் என்பதும் அவருக்கு நன்றாகத் தெரியும். சொன்னால் அவள் கேட்க மாட்டாள் என்று அவர் அதைப் பற்றி விசாரிப்பதையே விட்டு விட்டார்.

இந்தக் குடும்பத்தில் மூத்தது பெண் குழந்தை. வயது பதினாறு. நாலு பெரிய மனிதர்கள் சிபார்சினால் மூன்றாவது பருவம் தேறி உபாத்தியாயினி வேலைக்குப் படித்து வந்தாள் அந்தப் பெண். இரண்டாவது பிள்ளை படித்துக் கொண்டிருந்தான். அப்படியே மற்றக் குழந்தைகளும் பள்ளிக்கூடம் போய் வந்தார்கள். கடைக்குட்டிப் பையன் மாத்திரம் வீட்டில் இருந்தான். மத்தியான வேளைகளில் தர்மாம்பாள் எத்தனையோ வேலைகள் செய்தாள். மாவரைத்துக் கொடுப்பாள். அப்பளம் இட்டுக் கொடுப்பாள். வீசை சர்க்கரை ஒன்றரை ரூபாய் விற்கும் இந்தக் காலத்தில் இவையெல்லாம் எந்த மூலைக்குக் காணும்? குடும்பம் இருக்கிற நிலையைப் பார்த்து அவளைவிட, ஏகாம்பரம்தான் அதிகமாகக் கலங்கியவர்.

'ஒரு நாளாவது இரண்டு வேளைகள் வயிறாரச் சாப்பாடு போட வேண்டும் குழந்தைகளுக்கு' என்று தம் மனத்துக்குள் அவர் பல தடவைகள் சொல்லிக் கொள்வார்.

அன்று அவர் வீட்டுக்கு வரும்போது பகல் ஒன்றரை மணி ஆகிவிட்டது. கையில் இருந்த ஒரு ரூபாயில் அரிசியும், இதரச் சாமான்களும் வாங்கிக்கொண்டு வந்திருந்தார். வீட்டினுள் நுழைந்தவுடன் வீட்டில் சந்தடி எதுவுமில்லாமல் நிசப்தமாக இருந்தது. கொல்லைத் தாழ்வாரத்தில் தர்மாம்பாள் கண்ணை அணைத்தவாறு படுத்திருந்தாள். அவர் வந்ததைக்கூட அறிந்து கொள்ளாமல் தூங்குகிறாளா, அல்லது பசியின் மயக்கமா என்பது அவருக்குப் புரியவில்லை. சமையல் அறைக்குள் சென்று அடுப்பை மூட்டி வெங்கலப் பானையில் உலைநீரை வார்த்து வைத்தார். மனைவி எழுந்திருப்பதற்குள் சமைத்து விட்டால் தம் கையினாலேயே அவளுக்குப் பரிமாறிவிட்டு, பிறகு வேலைக்குப் புறப்பட்டுப் போகலாம் என்கிற ஆவல் அவருக்கு.



கொல்லைக் கோடியிலிருந்து ஒரு குரல் இலேசாகக் கேட்டது.

''சாமி! சாமி!'' என்று ஒருவன் குரல் கொடுத்தான். தர்மாம்பாள் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். ஏகாம்பரம் சமையலறையை விட்டு வெளியே வந்தார். கொய்யா மரத்தடியில் நிற்கும் குறவனைப் பார்த்தார் அவர்.

''என்னடா இது? பெரிய கூப்பாடு போடுகிறாய்?'' என்று கேட்டுக் கொண்டே ஏகாம்பரம் கிணற்றங்கரைக்குச் சென்று நின்றார்.

''சாமி.....'' என்றான் குறவன், தன் காவிப் பற்களைக் காட்டிச் சிரித்தபடியே.

தர்மாம்பாளுக்கு அவன் எதற்கு வந்திருக்கிறான் என்பது புரிந்து போயிற்று. பூவும் பிஞ்சுமாய்க் குலுங்கும் அந்தப் பெரிய கொய்யாமரத்தில் உச்சாணிக்

கிளையில் இரண்டு தேன் கூடுகள் கட்டி இருப்பதைக் கண்டாள் அவள்.

விடியற்காலம் சூரிய உதயத்துக்கு முன்பே தர்மாம்பாள் கொல்லைப் பக்கம் வரும்போது அந்த அழகிய காட்சியைப் பார்த்திருக்கிறாள். ''உய்ய்'' என்கிற ரீங்காரத்துடன் கூட்டமாகத் தேனீக்கள் அங்கும் இங்கும் பறந்து சென்று மலர்களிலிருந்து தேனைக் கொண்டு வந்து சேர்ப்பதைப் பார்த்து அப்படியே தன்னை மறந்து நிற்பாள் அவள். அந்த வீட்டிலே உணவுப் பஞ்சமே தவிர, மலர்களுக்குப் பஞ்சமில்லை. கொய்யா மரத்துக்கு அப்பால் மல்லிகைச் செடி புதர்போல் மண்டிக் கிடந்தது. கொத்துக் கொத்தாய் மலர்களைத் தாங்கி மருதோன்றி மரங்கள் வேலி போட்டாற் போல் வரிசையாக இருந்தன. துளசியும், சாமந்தியும் கிணற்றைச் சுற்றி வளர்ந்திருந்தன. ஒரு மூலையில் சரக்கொன்றை மரம் சரம் சரமாக மலர்களைச் சொரிந்து கொண்டு நின்றது. அவர்க்ள் வீட்டுப் பெண் குழந்தைகள் வயிற்றுக்கு இல்லாவிட்டாலும் தலை நிறையப் பூ வைத்துக் கொண்டு பள்ளிக்கூடம் போவார்கள். பூஜை அறையில் 'கம்' மென்று மலர்களின் மணம் 'வீசிக் கொண்டே இருக்கும். வறுமை என்னும் கொடிய நோயில் அவர்களைச் சிக்க வைத்து வேடிக்கை பார்க்கும் முருகவேளின் படத்துக்கு மல்லிமாலை போடாமல் இருக்க மாட்டாள் தர்மாம்பாள்.



அமாவாசைக்கு முன்பு தேன் கூடுகள் பருத்து, அதனுள் தேன் நிறைய இருப்பது தெரியும். மாலைக் கதிரவனின் ஒளி அக்கூடுகளைத் தங்க நிறமாக மாற்றித் தரும். அமாவாசை நெருங்கி வரும் போது அந்த ஈக்கள் தேனை உறிஞ்சி விட்டுத் தோட்டத்தைச் சுற்றிச் சுற்றி ரீங்காரமிட்டுக் கொண்டே திரிவதையும் தர்மாம்பாள் பார்த்திருக்கிறாள்.

சமீபத்தில் கச்சபேசுவரன் அவர்களுடைய வீட்டுக்கு வந்திருந்தார். கொல்லைப்புறம் சென்றவர் தேன் கூடுகளைப் பார்த்து அதிசயித்து நின்றார்.

''ஏகாம்பரம்! இதென்னப்பா இது? வீட்டிலே தேன் கூடு கட்டக் கூடாதே. யாரையாவது குறவனை அழைத்து வந்து கலைத்துப் போடச் சொல்லப்பா.... சுவாமிக்கும் அபிஷேகத்துக்குத் தேன் ஆச்சு. மருந்துப் பண்டம் வேறு. இந்த மாதிரி சுத்தமான தேன் கிடைக்காது. கைச் செலவுக்கும் ஏதாவது கிடைக்கும்..'' என்று கூறினார், மரத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டே.

தர்மாம்பாள் உள்ளேயிருந்து எட்டிப் பார்த்தாள். 'அன்றலர்ந்த மலர்களிலிருந்து தேனை எடுத்து வந்து சேகரித்து உண்ணும் அந்தத் தேனீக்கள் நம்மை என்ன செய்கின்றன? யாருடைய பொருளையாவது அபகரித்துக் கொண்டனவா? நாம் இருக்கும் வீட்டில் வந்து நமக்குத் தொல்லை தருகின்றனவா? இயற்கையில் பிறந்து இயற்கையாக வாழ்ந்து அப்படியே மடியப் போகும் அவைகளின் அமைதியான வாழ்க்கையை நாம் ஏன் கலைக்க வேண்டும்? தொல்லை தரவேண்டும்?' என்று தர்மாம்பாள் சிந்தித்தாள். அத்துடன் அவளுக்கு ஒரு பயம். அடுத்த வீட்டிலே சில மாதங்களுக்கு முன்பு குருவிக் கூட்டைக்கலைத்தார்கள். பறக்கத் தெரியாத சிறு குஞ்சுகள் இரண்டு; நாலைந்து முட்டைகள். அவைகளைப் பேணி வளர்க்கும் ஆணும், பெண்ணும் கலைந்த அந்தக் கூட்டைப் பார்த்துக் கத்திய கத்தல் சொல்லி முடியாது. 'குழந்தை குட்டிகளுடன் வாழும் ஆறறிவு படைத்த மனிதா! உன்னுடையதுதான் குடும்பமா? என்னுடையதும் குடும்பம்தான்! இதோ பார்! கருவிலே வளரும் உயிர்கள்' என்று சொல்லாமற் சொல்லி முட்டைகளின் அருகில் வந்து கத்தின.

'இதோ பார்! உன்னுடைய குழந்தைகளைப் போல் என்னுடைய குழந்தைகளும்!' என்று பறக்கத் தெரியாமல்



ஆழ்ந்த நித்திரை!

உடை சுருங்கி மூச்சுத் திணறும் அவஸ்தையின்றி அவர் அயர்ந்து தூங்குகிறார். 'ஸான்ஃபோரைஸ்ட்' ('Sanforized') லேபில் கொண்டுள்ள துணிகளையே அவர் எப்பொழுதும் வாங்குகிறார். ஏனெனில் அவைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி ஒருபொழுதும் சுருங்காது என்பதை அவர் அனுபவத்தில் கண்டுள்ளார்.

'ஸான்ஃபோரைஸ்ட்' துணிகள் சுருங்காதவை
பணத்தை மீதப்படுத்துபவை!

லேபிலில் 'SANFORIZED' REGD TD MK

இந்த அடையாளம் இருந்தால்

உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி ஒருபொழுதும் சுருங்காது!

ரிஜிஸ்தர் செய்யப்பட்ட 'ஸான்ஃபோரைஸ்ட்' டிரேட் மார்க்கின் சொந்தக்காரர்களான க்ளுவட் பீபாடி அண்ட் கோ., இன்கார்ப்பரேட்டட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப் பெற்றது) அவர்களால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த கம்பெனியின் சுருங்காது என்பதற்கான கடும் நிபந்தனைகளுக்குட்பட்டு தயாரிக்கப்படும் துணிகளில் மட்டுமே 'ஸான்ஃபோரைஸ்ட்' டிரேட் மார்க் போட அனுமதிக்கப்படுகிறது.

விபரங்களுக்கு: 'ஸான்ஃபோரைஸ்ட்' ஸர்வீஸ், 95, மெரின் டிரைவ், பம்பாய்-2

ACP. 4371

இருக்கும் குஞ்சுகளின் அருகில் வந்து கதறின; துடித்துச் சாபமிட்டன. மனிதனுக்கு இலக்கியம் புரியும். கவிதைகள் புரியும். சங்கீதம் புரியும். மற்ற எல்லாக் கலைகளைப் பற்றிப் பேசவும், படிக்கவும் தெரியும். அந்தக் குருவிகளின் பாஷை மட்டும் புரியாது. புரிந்திருந்தால் கூட்டைக் கலைத்து ஒரு குடும்பத்தையே கலைப்பானா? அப்புறம் அந்தக் குடும்பத் தலைவரை ஆயிரம் மைல்களுக்கு அப்பால் வேலை காரணமாக மாற்றி விட்டார்கள். பெரிய குழந்தைகள் அவரவர்கள் வேலையாகி எங்கெங்கோ சென்றார்கள். அந்த அம்மாள் தன் இரண்டு குழந்தைகளுடன் அந்த வீட்டில் இருந்தாள். மூலைக்கு ஒன்றாகக் குடும்பம் கலைந்து போயிற்று. தர்மாம்பாள் அவ னிடம் சொன்னாள்:

"மாமி! குருவிக் கூட்டைக் கலைப்பது பெரும் பாவம்..."

"ஆமாண்டி அம்மா! என்னைப் பார். நாலு பேருடன் இருந்துவிட்டு இப்போ ஒண்டியாகத் தவம் பண்ணுகிறேன்..."

இந்தப் பயம் தர்மாம்பாள் மனசில் நிலைத்து விட்டது. தேன் கூட்டைக் கலைக்கச் சொன்ன கச்சபேசுவரன்தான் குறவனை அனுப்பி இருக்க வேண்டும் என்று தீர்மானித்தாள்.

"என்ன சாமி! அமாவாசைக்கு இன்னும் அஞ்சு நாள் இருக்குங்க...." என்று சொன்னான் குறவன்.

"சொல்கிறதை நேராகச் சொல்லித் தொலையேண்டா. அமாவாசைக்கு நான் என்னடா பண்ணுவேன்...." என்றார் ஏகாம்பரம் எரிச்சலுடன். உள்ளே எரியும் அடுப்பில் ஏதோ பொங்கி வழியும் சத்தம் கேட்டது.

"இந்தா! உன்னைத்தானே! சாதம் பதம் பார்த்து வடித்து வை" என்று மனைவியிடம் அங்கிருந்தபடியே கூறினார்.

தர்மாம்பாள் கிணற்றடிக்கு வந்தாள்.

"அவன் என்ன கேட்கிறான்?"

"அவன் வந்து உன்னையும் என்னையும் என்ன கேட்பான்? ஆயிரம் ரூபாய்ச் சன்மானம் கேட்பானா? இல்லை, சோறு தான் கேட்பான்?"

"பின்னே அவனோடு என்ன பேச்சு? ஏதாவது ஒரணாக் காசு இருந்தால் அவ னிடம் கொடுத்தனுப்புங்கோ. நீங்கள் பாட்டுக்கு உள்ளே வாங்கோ."

"சாமி! ரெண்டு கூட்டுக்கு ரெண்டு ரூபா தாரேன்!"

"இந்தாடா, அப்பா! நீ மகராஜனாய் இருப்பாய். பேசாமல் வெளியே போ. தேனை அழிக்க வேண்டாம், ஒண்ணும்

வள்ளல் மெய்யப்பர்

தொப்பனுபட்டி கலைமகள் கல்லூரி ஸ்தாபகர் திரு அ. மெய்யப்ப செட்டியார் சென்ற ஆகஸ்ட் மீ 24-உ தமது 64-வது வயதில் காலமானார். இவருக்கு மனைவியும் இரு குமாரர்களும், ஒரு குமாரத்தியும், பேரக் குழந்தைகளும் இருக்கிறார்கள்.

செட்டிமார் நாட்டில் கல்விக்கு அரும்பணியாற்றிய குறிப்பிடத்தக்க மிகச் சிலருள் ஒருவரான இவர் சென்ற முப்பதாண்டுகளாகக் கல்விக்கு உழைத்த பெரியார். முதலில் ஆரம்பப்பள்ளியைத் தொடங்கி இருபாலார்க்கும் எழுத்தறிவிக்கும் பணியில் ஈடுபட்டார். பின்னர் சுமார் இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்னர், ஈழ நாட்டுக்குப் பண்டிதமணி கதிரேசன் செட்டியாருடன் சென்றார். அப்பொழுது யாழ்ப்பாணத்தில் சர் பொன்னம்பலம் ராமநாதன் ஸ்தாபித்து நடத்திய மகளிர் கல்லூரியைக் காண நேர்ந்தது. அது முதல் பெண்களுக்குப் பயனுள்ள கல்வியை அளிக்கத் தக்கதாயும் உணவு, தங்கும் வசதிகளுடன் கூடியதாயும், குருகுலப் பாணியைக் கொண்டதாயும் ஒரு கல்விச்சாலையைத் தொடங்கி, கலைச் செல்வி, கலைமணி ஆகிய பட்டப் படிப்புகள் வரையுள்ள பாடத் திட்டத்தை அமைத்தார். தக்க தலைமையாசிரியர்களையும் ஆசிரியைமார்களையும் தேடிக் கொண்டு வந்தார். தாம் பெரும்பொருளைக் கொடுத்ததுடன் மற்ற அன்பர்களிடமும் சென்று கேட்டுப் பெரும் பொருள் திரட்டிக் கல்லூரியை உருவாக்கினார்.



மொத்தம் இருநூற்று ஐம்பது மாணவிகள் தங்கிப் பயில வசதியுள்ளதான இந்தக் கலைமகள் கல்லூரி ஆயிரக்கணக்கான மாணுக்கியர்களைக் கல்வி நலத்தில் சிறந்தவர்களாக ஆக்கியிருக்கிறது.

தமிழ் நாட்டிலே தமிழ்ப்பண்பாட்டுக்கேற்ற முறையில் பெண்களுக்கென்றே அமைந்த குருகுலக் கல்லூரி இதுவே. இதனால் நாடு பெற்று வரும் நன்மை பெரிதாகும். இத்தகைய அருமைப் பணியைத் தம் வாழ்நாள் முழுதும் தொடர்ந்து ஆற்றிய திரு மெய்யப்ப செட்டியாரின் பிரிவு ஈடு செய்ய முடியாத பெரு நஷ்டமாகும். அவருடன் தொடக்க முதல் கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து பணியாற்றி வரும் மனைவி திருமதி நாச்சம்மையாருக்கும் புத்திர புத்திரிகளுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபம் உரியதாகும்.

வேண்டாம்'' என்று தர்மாம்பாள் மிருந்த பயத்துடன் கூறினாள்.

ஏகாம்பரத்தின் கண்களிலே இரண்டு ரூபாய் நிழலாடியது. வறுமையின் கொடுமையிலே உழன்ற அவருக்கு அந்த இரண்டு ரூபாய் என்ன என்னவோ ஆசைகளைக் காட்டியது.

''இந்தா, தர்மு! பையிலே சாமான் இருக்கு. ஒரு துகையல் அரையேன் சாப்பிடலாம்...''

மனைவிக்குப் பின்னால் நின்றபடியே ஏகாம்பரம் குறவனுக்கு ஏதோ ஜாடை காட்டினார்.

''துகையலா? அம்மிக் கல்லில் பொளிவே இல்லையே. மூன்றாவது வீட்டுக்குப் போகணும் அரைக்க....''

''போயேன். சே, சே, வாய்க்கு வேண்டியதை என்றைக்குத்தான் செய்து போட்டாய் நீ?...'' ஏகாம்பரம் இரைய ஆரம்பித்தார்.

''போடா குறவா! மரத்திலே கையை வைத்தாயோ?...'' என்று சொல்லிக் கொண்டே அவனை விரட்டி விட்டுக் கொல்லை வேலியின் படலை இழுத்து மூடிக் கொண்டு உள்ளே சென்றாள் தர்மாம்பாள்.

துவையலுக்கு வறுத்து எடுத்துக் கொண்டு அவள் மூன்றாவது வீட்டுக்குக் கிளம்பியவுடன் படலைத் திறந்து கொண்டு குறவன் உள்ளே வந்தான். உடல் முழுவதும் கம்பளியால் போர்த்திக்கொண்டு, கையில் தீப்பந்தத்துடன் அவன் மரத்தில் தாவி ஏறினான். சில விநாடிகளுக்கு முன்பு கூட்டை மொய்த்துக் கொண்டு அந்தக் களிப்பிலே மூழ்கி இருந்த தேனீக்கள் தீயைக் கண்டு நாற்புறமும் சிதறி ஓடின. கோபத்துடன் கிளம்பிப் பறந்து அவன் மேல் பாய்ந்தன. கம்பளியின் மேல் வந்து விழுந்தன. குறவன் பந்தத்தைக் கீழே எறிந்தான். சட்டென்று இரண்டு கூடுகளையும் கத்தியால் நறுக்கி எடுத்துக் கொண்டு சரக் கொன்றை மரத்தடிக்கு விரைந்து படலைத் திறந்து கொண்டு வெளியே போய் விட்டான். ஏகாம்பரத்தின் கையில் இரண்டு ரூபாய்கள் இளித்துக் கொண்டிருந்தன. கொல்லை முழுதும் பரிதவிப்பான குரலுடன் ஈக்கள் சுற்றித் திரிந்தன. மனிதனின் அல்ப ஆசையைப் பார்த்துத்தான் அவை அப்படிப் பொருமி அழுதிருக்க வேண்டும்.

தர்மாம்பாள் துவையலுடன் வீட்டுக்குள் வந்தாள்.

''சாப்பிட வாருங்களேன். அங்கேயே நின்று கொண்டு என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்டுக் கொண்டே கிணற்றடிக்கு விரைந்தாள் அவள். கணவரின் கையில் இருக்கும் ரூபாயைப் பார்த்து விட்டு மரத்தையும் ஒருமுறை அண்ணாந்து பார்த்தாள்.

''என்ன இது? தேன் கூட்டை அழித்தாச்சா?''

''போயேன், அழித்தால் என்னவாம்? திருப்பிக் கட்டுகின்றன!'' என்று ஏதோ ஒரு சமாதானம் கூறி அவளைச் சாந்தப் படுத்தப் பார்த்தார் அவர்.

''இந்த ரூபாய் வந்துதான் நம் குடும்பத்துக்கு விடியப் போகிறதா? அப்படி என்ன ஆயிரமா ஐந்நூறா? அவன் பார்த்துக் கொடுத்தால் விடியும்...'' என்று வானுற ஓங்கி நிற்கும் கச்சபேசுவரனின் கோயில் கோபுரத்தைச் சுட்டிக்காட்டினாள் தர்மாம்பாள்.

''சாமிக்குத்தான் தேன் அபிஷேகத்துக்குக் கொண்டு போவதாகச் சொன்னான்'' என்றார் ஏகாம்பரம் மிகவும் பயந்த குரலில்.

''சொன்னான் ஆயிரம்! இத்தனை ஜீவன்கள் இங்கே பசியால் துடிக்கும் போது அங்கே அந்த இறைவன் தேனை அபிஷேகம் பண்ணிக் கொள்ளத்தான் காத்துக் கிடக்கிறானாக்கும்!''

தர்மாம்பாள் கண்ணீர் வழிய உள்ளே போய் விட்டாள். அவள் அன்றும் சாப்பிடவில்லை. மனசிலே ஒரு பயம், தன் குடும்பம் கலைந்து போகிற மாதிரி.

★

அப்படியேதான் ஆயிற்று. மூத்த பெண்ணுக்கு வாத்தியார் வேலையாகி வேறு ஊருக்கு மாற்றலாகிப் போனாள். மூன்று குழந்தைகளை அவள் தமையன் வந்து தம்முடன் இருக்கட்டும் என்று அழைத்துப் போனார். இரண்டு குழந்தைகள் வாலாஜாபாத் பாடசாலையில் போய்ச் சேர்ந்தனர். அக்குடும்பத்தினர் தேனீக்கள் சிதறி ஓடியதைப் போல் சிதறிப் போய்த் திசைக்கு ஒருவராகப் போயிருந்தார்கள். மறுபடியும் தேனீக்கள் அவர்களை நம்பிக் கூடுகட்டும் போது தான், குடும்பமும் ஒன்று சேரும் என்று நம்பினாள் தர்மாம்பாள். அந்த இரண்டு ரூபாயை அவள் குடும்பத்துக்காகப் பயன்படுத்தவில்லை. கோபுர வாசலில் கண் இழந்து, கால்கள் இழந்து வாடும் ஏழைகளுக்குக் கொடுத்து விட்டாள்.

தினமும் அதிகாலையிலே எழுந்தவுடன், அவள் தோட்டத்துக்குப் போவாள். தேனீக்கள் ரீங்காரமிடுகின்றனவா? மறுபடியும் அவை வருமா? தன் குழந்தைகளும் தன்னிடம் திரும்பி வருவார்களா?' என்று ஏங்கிய உள்ளத்துடன் தோட்டத்தையே கூர்ந்து பார்த்தவாறு அயர்ந்து விடுவாள்.



பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு (பிரைவேட்) லிமிடெட்

B-6, பிளாக் III, டெல்லி-ஆஜ்மீரி கேட் ஸ்கீம், (பெட்ரோல் பங்கு அருகில்) புது டெல்லி-1

போன்: 27035 தபால் பெட்டி நெ. 472 தந்தி: EVERMENS

குறுகிய கால ஏலச் சீட்டுகள்

3வது சனிக்கிழமை ஏலங்கள் – 1957 செப்டம்பர் ஸீரிஸ்

சேரக் கடைசி தேதி 19-9-1957 ... முதல் ஏலத் தேதி 21-9-1957

25 மாதங்கள் 25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	G	ரூ. 20/-	ரூ. 500/-
F	ரூ. 25/-	ரூ. 625/-	H	ரூ. 15/-	ரூ. 375/-

நீண்ட கால ஏலச் சீட்டுகள்

நேயர்களின் கோரிக்கைகளுக்கு இணங்க புதிதாக 'A' 'B' & 'D' வகுப்பு சீட்டுகளை ஆரம்பிக்கிறோம்

சேரக் கடைசி தேதி 19-9-57 – 'A' 'B' & 'D' வகுப்பு ஏலத் தேதி 28-9-57

50 மாதங்கள் 50 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	குறைந்த தள்ளுபடி
A	ரூ. 100/-	ரூ. 5,000/-	ரூ. 500/-
B	ரூ. 50/-	ரூ. 2,500/-	ரூ. 250/-
D	ரூ. 20/-	ரூ. 1,000/-	ரூ. 100/-

விவரம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது

(போர்டார் உத்தரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை





ஜானகி கூறுகிறார்:

"எப்பொழுதும் நான் உபயோகிப்பது லக்ஸ் டாய்லெட் சோப் —அதன் மிகுந்த வெண்மையிலே தூய்மையை அறிகிறேன்!"

சினிமாத் துறையிலே துரிதமாகப் பிரபலமடைந்த ஜானகி மிகுந்த கலைத் திறனோடு, மென்மையான மேனியும் உடையவர்.

அற்புத வெண்ணிறமும் தூய்மையும் நறுமணமும் மிகுந்த மென்மையான லக்ஸ் டாய்லெட் சோப்பை தினம் தவறாமல் பல்லாண்டுகளாக உபயோகித்து வருவதாகக் கூறுகிறார் ஜானகி.

நீங்களும் அதை உபயோகித்து வாருங்கள் —சினிமா நட்சத்திரங்களின் மேனியழகை நீங்களும் அடையலாம்.

லக்ஸ் டாய்லெட் சோப்



சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்

LTS. 540-50 TM

சேது ஸ்நானம்

எஸ். விஜயராகவன்

"ஹேமா..! ஹேமா..!" பால்கனியில் பாங்காக நின்றபடி கீழே தெருப் பாதையில் பார்வையைப் பதித்திருந்த அவள் காதுகளில் என் கூப்பாடு விழுந்ததாகத் தெரியவில்லை. அப்படி அங்கே என்ன தான் அதிசயம் கூத்தாடுகிறது?

"ஹேமா..!" என்று மீண்டும் கூவியபடி கோபத்துடன் நாற்காலியை உதைத்து எழுந்த நான் வேகமாக பால்கனிக்கு விரைந்தேன். அங்கே ஹேமாவைப் பின்புறமாக நெருங்கி அவள் மீது உராய்ந்து நிற்கையில், அவள் தலைக் கதம்பத்தின் நறுமணம் என் உணர்வைக் கிறக்குகிறதாலோ என்னவோ, என்னுடைய கோபமெல்லாம் அநுதாபமாகப் பரிணமித்தது.

"ஹேமாக் கண்ணு! இங்கே என்ன பார்க்கிறாய்?" குரல் குழையக் கொஞ்சினேன்.

"எதிர்த்த கட்டடத்துக்கு டாக்ஸி வந்து நிற்கிறது. ஏகநாதய்யர் பெண் விசாலம் கல்கத்தாவிலிருந்து வந்து இறங்குகிறாள். அதோ பாருங்களேன், உங்கள் நண்பர் வைத்தி கூடத் தன் உடலைக் குலுக்க முடியாமல் திணறிக் கொண்டு இறங்குவதை!" என்று 'களுக்'கினாள் ஹேமா.

அவளுடைய பேச்சைக் கேட்டபடியே நானும் திருஷ்டியைத் தெருவிலே ஓட விடுகையில், என் மனைவி கூறியது போல் என் நண்பன் வைத்தி சிரமப்பட்டுத்தான் காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தான். பாவம்! அவனுக்குக் கொஞ்சம் ஸ்தூல சரீரம்!

"ஹேமா! ஏகநாதய்யர் வீட்டில் என்ன விசேஷம், பெண்ணும் மாப்பிள்ளையும் வரும்படி?" என்றேன் அர்த்தமற்ற ஆவலுடன்.

"விஷயம் ஒன்றும் புதுசில்லை. விசாலத்துக்குக் கல்யாணமாகி நான்கு வருஷங்கள் ஆகியும், இன்னமும் அவள் வயிற்றில் ஒரு 'பூச்சி' வைக்காதது ஏகநாதய்யருக்கும் அவர் வீட்டு மாமிக்கும் ஒரே குறை!"

"பின்னே இருக்காதா...?"

"இந்த ஏக்கமாகவுள்ள ஏகநாதய்யருக்கு ஒரு மாசம் முன்பு ஏதோ சொப்பனமாயிற்றாம். அவரது இஷ்ட தெய்வமாகிய ஸ்ரீ ஆஞ்சநேயரே அவர் கனவில் தோன்றி, தங்கத்தால் சிறு ஹனுமார் விக்கிரகம் ஒன்றைச் செய்து சேதுவில் — ராமேசுவரத்தில் — தம்பதிகள் ஸ்நானம் செய்து அதற்குப் பூஜை செய்ய வேண்டுமாம். பிறகு அதை யாராவது சிரேஷ்டருக்குத் தானமும் செய்தால் சீக்கிரம் புத்திரப் பிராப்தி ஏற்படுமென்று சொப்பனமாயிற்றாம்!"

"பலே... பலே!" என்று நான் நகைத்தேன். "அப்படியானால் ராமேசுவரம் போவதற்காகத்தான் வைத்தி முதலில் இங்கே மனைவியுடன் வந்திருக்கிறானோ? ஆனால் வைத்தி இதையெல்லாம் நம்ப மாட்டானே!"

"நம்ப மாட்டாரே என்றுதான் உண்மையைக் கூறாமல் 'ஓய்வு'க்காக மாப்பிள்ளையையும் வரச் சொல்லி எழுதினாராம் ஏகநாத அய்யர். வந்த பிறகு மெல்ல விஷயத்தைச் சொல்லி இணங்கச் செய்து விடலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். விசாலத்தின் கணவர்தான் உங்கள் நண்பராயிற்றே; நீங்களும் அவருக்குச் சொல்லுங்களேன்!" என்றாள் ஹேமா.

"வைத்தியின் விஷயம் உனக்குத் தெரியாது, ஹேமா! அவன் யார் சொன்னாலும் கேட்க மாட்டான். ஆதிநாட்களிலேயே சாமியாவது பூதமாவது என்று கேட்பான். நிச்சயம் இது நடக்கப் போவதில்லை!"

மேலே தாங்கள் பேச முடியாமல் அழைப்பு மணி அறையில் ஒலித்தது. "பால்காரப் பையன் போலிருக்கிறது; பாலை வாங்கி நான் காப்பியைப் போடுகிறேன்!" என்று மெல்ல நகர்ந்தாள் ஹேமா.

*

நாட்கள் இரண்டு ஓடின.

இடையில் நான் ஒரு தடவை ஏகநாதய்யரின் இல்லத்துக்குச் சென்று வைத்தியைச் சந்தித்து வந்தேன். இருவரும் சாதாரணமாகக் குசலம் விசாரித்துக் கொண்டோம், அவ்வளவுதான்; ராமேசுவரம் போவது பற்றியோ, அங்கு விக்கிரக தானம் செய்வது பற்றியோ அவர்கள் எதுவுமே பேசவில்லை. நானே எப்படிக் கேட்பது?

ஆனால், மூன்றாம் நாள் சனிக்கிழமையன்று மாலையில் வைத்தியே என்னைத் தேடி வந்தான். இப்போதாவது ஏதாவது விஷயம் வெளிப்படும் என்ற ஆவலுடன் நான் அவனை வரவேற்றேன். இருவருமாக அமர்ந்து அளவளாவுகையில், "வைத்தி! பம்பாயில் எத்தனை நாட்கள் முகாம்?" என்று வினவினேன்.

"ஒரு மாச லீவில் வந்திருக்கிறேன். ஆனால் இரண்டே நாட்களில் எனக்குப் பம்பாய் 'போர்' அடித்து விட்டது. அதோடு என் மாமனார் வேறு—கட்டுப்பெட்டி மனிதர்—ராமேசுவரம், காசி என்றெல்லாம் உளறுகிறார்—!" வைத்தி அலுத்துக்கொண்டான்.

"ராமேசுவரமா..?" என்று முறுவலித்தேன். தொடர்ந்து, "அதையும் தான் பெரியவர்கள் திருப்திக்காகவாவது பார்த்துவிடேன். வைத்தி! லீவோ இருக்கிறது; இதில் என்ன நஷ்டம்?" என்று இழுத்தேன்.

"நஷ்டம் ஒன்றுமில்லை! செலவெல்லாம் கூட மாமனார் சுவாமியே ஏற்றுக்கொள்வார். ஆனாலும், நீயே சொல், ஒருவனுக்கு நம்பிக்கையே இல்லாத காரியத்தைப் பிறருக்காகச் செய்தால், அது தன்னையே ஏமாற்றிக் கொள்வதாகாதா?"

"வாஸ்தவம்; ஆனால் நம்மிடையே வழிவழியாக வரும் இவற்றில் நீ ஏன் நம்பிக்



கையை இழக்க வேண்டும்? ஒரு வேளை உன் மாமனார் நினைப்பது போல் நிசமாகவே செயல்கள் பலித்தால்...?''

''மண்ணாங்கட்டி!'' என்று சீறி விழுந்தான் வைத்தி. ''இதோ பார், குழந்தை பிறக்கவில்லையே என்பதற்காக நான் நடக்கக் கூடியதைச் செய்து விட்டேன். கல்கத்தாவில் சிறந்த லேடி டாக்டரிடம் விசாலத்தைக் காண்பித்தேன். தக்க சிகிச்சையும் நடந்தது. அது போதாதா? எனவே சேது ஸ்நானமும் மூர்த்தி தானமும் செய்ய முடியாது என்று மாமனாரிடம் இன்று காலை அடித்துச் சொல்லி விட்டேன்! ஐயா சொன்னால் சொன்னதுதான்! சரி, நாளைக்கு உனக்கு லீவுதானே?'' என்று என்னைக் கேட்டான் வைத்தி.

''ஆமாம். ஏன் கேட்கிறாய்?''

''நாமிருவரும் காலையில் கிளம்பிக் 'கர்லாக் குகை'க்குப் போய் விட்டு வருவோம், வருகிறாயா? அங்கே ஏதோ சிற்பங்கள் இருக்கின்றனவாமே?'' என்றான்.

''ஓ பேஷா! நான் தயார்!''

''சரி! அப்படியானால் காலை ஐந்து மணிக்கெல்லாம் புனா பாஸ்ட் பாஸஞ்சரில் கிளம்பி விடுவோம்; அப்போதுதான் இருட்டுவதற்குள் வீடு திரும்ப முடியும். நாளைக் காலையில் தயாராக இரு...'' என்று கூறிவிட்டு எழுந்து சென்றான் வைத்தி.

★

திட்டப்படி மறுநாள், முதல் ரயிலிலேயே நானும் வைத்தியும் புறப்பட்டோம். வழிப் பயணத்துக்கு வேண்டிய ஆகாராதிகளையும் பெரிய 'பிளாஸ்க்' நிறையக் காப்பியையும் போட்டுத் தந்தாள் ஹேமா. வைத்தியும் விசாலம் போட்டுத் தந்த சிற்றுணவு மூட்டையைத் தூக்கிக் கொண்டுதான் வந்திருந்தான்.


எட்டரை மணிக்கெல்லாம் ரயில் 'மாலவலி' என்ற சிறு ஸ்டேஷனை அடைந்தது. இருவரும் இறங்கினோம். அங்கிருந்து சுமார் மூன்று கல் தூரம் குதிரை வண்டியில் சென்றால் கர்லாக் குகைகளை அடையலாம்.

ஆனால் அன்று எங்களைப் போல் எண்ணற்றவர் அதே ரயிலிலிருந்து இறங்கினார்கள். அச் சிறு கிராமத்தில் அத்தனை பேருக்கும் குதிரை வண்டிகள் எப்படிக் கிடைக்கும்? இருந்த நான்கைந்து வண்டிகளும் முந்திக் கொண்டவர்களுக்கே கிடைத்தன. ஊதிய உடலைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு, ஆடி அசைந்து வைத்தி வருவதற்குள் வண்டிகளெல்லாம் போய் விட்டன!

''வேறு வழியில்லை. நடந்து தான் போக வேண்டும்; உன்னால் முடியுமா, வைத்தி?'' என்றேன் சிரிப்புக்கிடையே.

''ஓ! மூன்று மைல் என்ன பிரமாதம்? என் உடம்பு இதற்கெல்லாம் அஞ்சாது!'' என்று பதிலுக்கு நகைத்தான் வைத்தி.

வெயிலுக்குத் தடுப்பாகத் தலையில் துண்டை வரிந்து கட்டிக் கொண்டு இருவரும் நடந்தோம். கோடை காலமாதலால் அக்காலை வேளையிலும் வெயில் அனலாகப் பொசுக்கிக் கொண்டிருந்தது. பாவம், வைத்திக்கு உடல்





எல்லாம் வேர்வை வெள்ளம்; மேல்மூச்சு வேறு வாங்கியது. இப்படியே சுமார் ஒரு மைல் தூரம்தான் கடந்திருப்போம்; அதற்குள்—''நண்பரே, இனிமேல் 'நம்ம வண்டி' ஓடாது; கொஞ்சம் 'பெட்ரோல்' போட்டுத் தள்ள வேண்டும்!'' என்று கேலியாகக் கூறியபடி மூட்டுக் கட்டைக்கு வசப்பட்ட தேர்மாதிரி நின்றுவிட்டான் வைத்தி.

''சரி, எங்கேயாவது நிழல் இருக்கிறதா, பார்க்கலாம். சற்றே உட்கார்ந்து, களைப்பாறி, ஏதாவது சாப்பிட்டுவிட்டுப் போகலாம்!'' என்று சுற்றுமுற்றும் நோக்கினேன். சாலையில் நிழல் தரும் தருக்களே இல்லை. ஆனால் ரஸ்தாவிலிருந்து சற்றுத் தொலைவிலே அரை பர்லாங் தூரத்தில் ஏதோ கோயில் மாதிரி சிறிய கட்டடம் ஒன்று தெரிந்தது. அதை ஒட்டி ஒரு வேப்ப மரம்!

மறு கணமே இருவரும் நடந்து அதை நெருங்கினோம். உண்மையிலேயே அது ஒரு கோயில்தான்; பளிங்குக் கற்களாலாகிய சிறு கோயில். அதன் வாயிலில் இருந்த வேப்ப மரத்தை ஒட்டி ஒரு சிறு கிணறும் இருந்தது. சாப்பிடுவதற்கு இதைவிட வேறு என்ன வசதி வேண்டும்?

மூட்டைகளை மரத்தடியில் வைத்துவிட்டு இருவரும் அமர்ந்த சமயத்தில், கோயிலுக் குள்ளிருந்து ஒரு கிழவன் வெளியே வந்தான். இடையில் அழுக்குப் பிடித்த வேஷ்டி; தலையிலே முண்டாக; நெற்றியிலே கீற்று நாமம்; அதன் மத்தியில் கருத்த அஞ்சனப் பொட்டு; மேலே ஒரு வெள்ளை அங்கி.

அவன் எங்களை நெருங்கியதும், ''ராம்.......ராம் பாபுஜி! தேவ தரிசனம் செய்யலாமே!'' என்று மராத்தி பாஷையில் பணிவாக அழைத்தான். அவன் அந்தக் கோயிலின் பூசாரி போலும்!

உடனே, ''என்ன கோயில் இது குருஜி?'' என்று வினவினேன்.

''ஸித்தி மாருதி மந்திர், ஸாப்!'' என்று பதில் வந்தது. அதாவது கேட்ட வரமளிக்கும் அநுமன் கோயில் அது.

இதைச் செவி மடுத்ததுமே, ''சரிதான், நண்பரே! இந்த அநுமார் எங்கே போனாலும் நம்மை விடமாட்டார் போலிருக்கிறதே! நீ வேண்டுமானால் போய் அநுமாருக்கு ஏதாவது 'லஞ்சம்' கொடுத்து விட்டு வா. நான் சோற்று மூட்டையை அவிழ்க்கிறேன்!'' என்று தீர்மானமாக மொழிந்தான் வைத்தி.

எனவே நான் மட்டும் கோயிலுக்குள் நுழைந்தேன். அழகிய அந்தப்பளிங்குக் கோயிலுக்குள் ஆஞ்சநேயரின் பெரிய கற்சிலை வடிவம்: இடக் கையில் கதையும், வலக் கையில் சஞ்சீவி பர்வதமும் தாங்கிய திருக்கோலம்: உடல் முழுதும் செந்தூரக் காப்பு: கண்களிலே வெள்ளிக் கண்மலர்கள், நிசமாக விழிப்பது போல் தத்ரூபமாக இருந்தன.

வாசற்படியில் தலைக்கு மேல் தொங்கிய மணிகளை நான் அடிக்கையில், கிழவன் கற்பூர ஆரத்தி எடுத்தான். பிறகு கையிலே ஒரு பால் மிட்டாய் பிரசாதமாகக் கிடைத்தது. அதைப் பெற்றுக்கொண்டு நான் வெளியே வருகையில் அந்தக் கோயிலின் வெளிச்சுவரில் இருந்த சிலாசாஸனம் என்னுடைய கவனத்தைக் கவர்ந்தது.

ஆங்கிலத்தில் அக்கல்லின் மீது எழுதியிருந்த வரிகள் என்னை எல்லையற்ற அதிசயவாரிதியில் மூழ்கடித்தன. அச்சிலாசாஸனம் வருமாறு:

''1920ம் வருஷம் புனா ஜில்லாக் கலெக்டர் ஜனாப் முகம்மது காஸிம் ஐ. ஸி. எஸ். அவர்களால் 'மாருதி மந்திர்' பக்தியுடன் கட்டப் பெற்றது!''

''என்னது! இந்த ஆஞ்சநேயர் கோயிலைக் கட்டியவர் ஒரு முஸ்லிம் குடிப் பெருமகனா?'' வியப்பினால் சற்று உரக்கவே கேட்டேன்.

''ஆமாம், ஸாப்! உங்களுக்குக் கதை தெரியாதா?!'' என்றான் பின்னால் வந்த பூசாரி.

மறுவிநாடியே வேப்பமர நிழலில், எங்கள் பகல் போஜனத்துக்கிடையே, அவன் கதையை ஆரம்பித்தான்.

சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்பு இங்கே இந்த 'மாருதி மந்திர்' இடம் பெற்றிருக்கவில்லை. அதற்குப் பதில் இவ்விடத்தில்

இந்த வைபவ நாட்களில்
வசீகரிக்கும் தோற்றமளிக்க
பின்னியின் ஸ்பன் ஸில்க் ஷர்ட்
அணியுங்கள்

உறவினர்களும் நண்பர்களும் கூடிக் குலாவி மகிழும் வைபவங்கள் நிகழும் கல்யாண ஸீஸன் வந்துவிட்டது.

பின்னியின் தூய்மையான ஸ்பன் ஸில்க் ஷர்ட் அணிந்து வசீகரிக்கும் தோற்றமளியுங்கள். அது உங்களுக்கு குளுமையும் சுகத்தையும் அளிக்கும். உங்கள் உறவினர்களும் நண்பர்களும் உங்கள் ஜோருக்கான தோற்றத்தைக்காண பொறாமை கொள்வார்கள்.

கவர்ச்சிகொண்ட பின்னியின் நிஜ ஸில்கின் விலை மிகவும் மலிவே. குறைந்த விலையில் உயர்ந்த ரக ஸில்க் பின்னியினுடையது மட்டுமே.



தி பங்களூர் உல்லன்,
காட்டன் அண்ட் ஸில்க் மில்ஸ்
கோ., லிட்.

மானேஜிங் ஏஜென்ட்ஸ்

பின்னி அண்ட் கோ.,
(மதராஸ்) லிட்.,
மதராஸ்

நாற்புறமும் அழகிய தோட்டத்தை உடைய ஒரு உன்னதமான உல்லாச விடுதி கம்பீரமாக நின்றது. முகம்மது காஸிம் என்பவர் இந்த உல்லாசபவனத்தில் கோடையைக் கழிக்க வந்தார்.

முகம்மது காஸிம் இங்கே வந்த சில நாட்களுக்கெல்லாம், அவருக்கும் பம்பாய் நீதிபதி அப்துல்லா அவர்களின் செல்வக் குமாரி ஸரீனு பேகமுக்கும் 'நிக்காஹ்' நிச்சயமாகி, இந்தப் பங்களாவிலேயே கோலாகலத்துடன் நடந்து முடிந்தது.

திருமணமானதுமே கலெக்டர் காஸிம் இப் பங்களாவை ஒன்றுக்கு நான்கு விலை கொடுத்து வாங்கி விட்டார். அங்கேயே அவர்களது காதல் வாழ்வும் ஆரம்பமாகியது. தினந்தோறும் மாளிகையிலிருந்தே புறநகரிலுள்ள காரியாலயத்துக்குக் காரில் சென்று வந்தார் கலெக்டர் காஸிம்.

ஒரு வருஷம் இப்படி இன்ப மயமாகக் கழிந்தது. பிறகுதான் ஒருநாள் காஸிம் துரை காரியாலயத்திலிருந்து திரும்பி வருகையில், தமது அருமை மனைவி ஸரீனு பேகம் அழுது முகம் வீங்கியிருப்பதைக் கண்டு அலமந்து போனார். தன் காதல் மைனாவின் கண்களில் நீர் கசிந்தால் அவருக்கு எப்படிப் பொறுக்க முடியும்?

"ஸரீனு, ஏன் அழுகிறாய் கண்ணே?" என்று காதல் கனியக் குழைந்தார் காஸிம்.

"ஐயோ.. நான் என்ன செய்வேன், ஜானு? இன்று காலை முதல் எங்கிருந்தோ இந்த வட்டாரத்துக்கு எண்ணற்ற குரங்குகள் புதிதாக வந்துள்ளன. அவற்றின் அட்டகாசம் சொல்லி முடியாது. அழகான நம் தோட்டத்துக்குள் புகுந்து, நான் உயிருக்குயிராகப் பாதுகாத்து வரும் அருமையான புஷ்பச் செடிகளையெல்லாம் உருத் தெரியாமல் அழித்துவிட்டன" என்று புலம்பினாள் ஸரீனு.

"ச்சே.. இவ்வளவு தானா, இதற்காகவா இப்படி அழுகிறாய்? இதோ பார், இப்போதே நொடிப் பொழுதில் அந்தக் குரங்குகளையெல்லாம் சுட்டு வீழ்த்துகிறேன்!" என்று கையில் துப்பாக்கியுடன் வெகுண்டு எழுந்தார் கலெக்டர்.

உடனே, ஸரீனு அவரைத் தடுத்து நிறுத்தி, "ஊஹூம்! அப்படியொன்றும் செய்து விடாதீர்கள். குரங்குகளை ஹிந்துக்கள் தெய்வமாக வழிபடுகிறார்களாம். நீங்கள் அவற்றைச் சுட்டால், இங்குள்ள இந்துக்களுக்குத் தங்கள் மீதுள்ள மதிப்பும், மரியாதையும் குறைந்து மறைந்து விடும்!" என்று கதறினாள்.

கலெக்டர் காஸிமுக்கு மனைவியின் பேச்சில் நியாயம் இருப்பது புலப்பட்டது. எனவே மனைவியின் மலர் விழிகளைக் கலங்கச் செய்த அந்தக் குரங்குகளின் மீது பிறந்த தம் கோபத்தைப் பிரயாசையுடன் அடக்கிக் கொண்டு வாளாவிருந்தார் அவர்.

ஆனாலும் அன்று முதல் அஹிம்ஸா முறையிலே அக் குரங்குகளை அந்த வட்டாரத்திலிருந்தே துரத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன. இருந்தும் பலன் கிட்டியதா? நாளுக்கு நாள் குரங்குகளின் எண்ணிக்கை மாறுவாரியாகப் பெருகியதே தவிர குறையவில்லை. அத்துடன் அண்மையிலேயே மீண்டும் ஒரு நாள் பங்களாத் தோட்டத்துக்குள் ஒரு மந்தைக் குரங்குகள் புகுந்து எழில் மிகு செடி கொடிகளையெல்லாம் அழித்து நிர்மூலமாக்கி விட்டன!



டாக்டர்: என்ன உங்கள் மனைவிக்கு அபெண்டிஸைடிஸா? ஒரு தடவை ஆபரேஷன் செய்த பிறகு மறுபடியும் 'அபெண்டிஸைடிஸ்' வருவதை நான் கேள்விப் பட்டதில்லையே!

வந்தவர்: சரி! வாழ்க்கையில் ஒருவருக்கு இரண்டு மனைவிகளும் உண்டு என்பதையேனும் நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

ஸரீனு பேகம் விழிகளில் ரத்தம் சிந்தினாள்: கலெக்டர் காஸிமின் கண்கள் கோபத்தால் கனலாகச் சிவந்தன. நெஞ்சிலே வெஞ்சினம் மிஞ்ச, "யார் அங்கே..?" என்றார்.

"இன்று அவர்கள் ஒருவருமே இல்லை: தெருவோரவில் ஏதோ உற்சவமாம். போய் விட்டுவரட்டுமே என்று 'ரஜா' கொடுத்து அனுப்பி விட்டேன்!" என்றாள் ஸரீனு.

"அதுவும் நல்லதுதான்!" என்று எழுந்து வெளியே வந்தார் காஸிம். மறுகணமே 'டுமீல்' என்ற சத்தம்! உடனேயே பெரிய ஆண் குரங்கு ஒன்று சுருண்டு விழுந்தது. அவ்வளவுதான்; அவர் எதிர்பார்த்தபடியே குரங்குகள் பயந்து ஓலமிட்டுக் கொண்டு சிதறி ஓடின.

"ஸரீனு! பார்த்தாயா?" என்று இடி போல் சிரித்து முழக்கினார் கலெக்டர் துரை. தொடர்ந்து, "இறந்த குரங்கை யாரும் பார்ப்பதற்கு முன் மண்ணில் புதைத்து விடுகிறேன்" என்றவாறு செயலிலும் இறங்கினார். ஐந்து நிமிஷங்களுக்குள் வெற்றை ஒட்டிப் பத்தடி தூரத்தில் இறந்த குரங்குக்கு ரகசியச் சமாதி கிட்டியது.

பிறகு நிம்மதியுடன் கணவனும் மனைவியும் மாடிக்குச் சென்று சதுரங்கம் ஆடத் தொடங்கினர். ஆனால் சற்றைக்கெல்லாமே, கீழே பட்டகசாலையில் மறுபடியும் ஏதோ 'கீச்மூச்' என்ற ஓலம்! ஸரீனு பின்தொடரக் காஸிம் கீழே ஓடோடி வந்தார்.

அங்கே கண்ட காட்சி! ஒரு மந்தைக் குரங்குகள்—சுமார் நூறுவது இருக்கும்—ஒன்றுகச் சேர்ந்து கொண்டு எதிரியின் நகருக்குள் புகுந்த சிப்பாய்கள் போல் பங்களாவையே சூறையாடிக் கொண்டிருந்தன.

கலெக்டரையும் ஸரீனவையும் கண்டதும், அவை கோபம் மிக்க கூச்சலுடன் ஒன்று சேர்ந்து அவர்களைத் தாக்கவும் முன்வந்தன.

"டுமீல்..டுமீல்..!" அவர் தற்காப்புக்காகச் சுட்டார். குரங்குகள் பயந்து ஓடின.

கேவலம் பகுத்தறிவற்ற குரங்குகளுக்குக் கூட இவ்வளவு ஒற்றுமை உணர்வும், வஞ்சம் தீர்க்கும் மனப்பான்மையும் எப்படி வந்தன? அத்துடன் அவைகளுக்குத்தான் எத்தனை அசாதாரண தைரியம்? காஸிம் வியப்பினால் திகைத்துப் போனார்.

எனினும் அன்றிரவு முழுவதும் கலெக்டருக்குக் கண்களை மூட இயலவில்லை. மனிதனை ஒற்றுமையுடன் எதிர்த்துப் பழி வாங்கத் தைரியமாக முயன்ற குரங்குகளின் அட்டகாசக் காட்சிதான் இரவிலும் அவர் கண்களை நிறைத்திருந்தது. ஸரீனுபேகமும்கூட மனம் கலங்கித் துயில முடியாமல் தவித்தாள். இறுதியில் எப்படியோ விடியாத அந்த இரவும் விடிந்தது.

** ** **

காலையில் கலெக்டர் துரையின் கண்களில் முதலில் தென்பட்டவன் தோட்டக்காரத் தோண்டிபாதான். வழக்கமாக அவருக்கு, 'ராம் ராம்' என்று சொல்லி விட்டுப் போகும் அவன், இன்று கலெக்டருக்கு வணங்கி விட்டு, எதிரிலேயே அசையாமல் நின்றான்.

"என்னடா வேண்டும்?" என்று அதட்டிக் கேட்டார் காஸிம்.

"கலெக்டர் ஸாப்! தெலேகான் மாருதி மந்திர் உற்சவத்துக்குப் போய் விட்டு இரவு ஒரு மணிக்குத்தான் வீட்டிலே வந்து படுத்தேனுங்க. மாருதி தேவனே எதிரே வந்து, 'இந்தப் பங்களாவிலே ஆற்றங்கரை ஓரமாகப் பத்தடி தூரத்திலே நான் இருக்கிறேன். அங்கே எனக்கு ஒரு கோயில் கட்டு!' என்று உத்தரவாயிற்று. கோயில் எப்படிக் கட்டுவேன்?" என்று பக்தி கண்களில் நீராகப் பெருக அழுதான் தோண்டிபா.

கலெக்டர் காஸிம் திகைத்துத் திக்குமுக்காடினார். அசாதாரண அதிசய உணர்ச்சியால் அவர் மண்டையே வெடித்துவிடும் போல் இருந்தது. அவர் நேற்று ஆற்றடியில் பத்தடி தூரம் தள்ளித்தான் இறந்த குரங்கைப் புதைத்தார். சரியாக அதே இடத்தில் கோயில் கட்ட வேண்டுமாமே! வியப்பாக அல்லவா இருக்கிறது? அவர் குரங்கைப் புதைத்த இடம் தோண்டிபாவுக்குத் தெரிய நியாயமில்லை; நேற்றிரவு அவன் ஊரை விட்டே சென்றிருந்தான். அப்படியானால் இந்த அதிசயக் கனவுக்கு என்ன ஆதாரம்?

சிந்திக்கச் சிந்திக்க அறிவாளியான காஸிமுக்குக் கூட எல்லாம் புதிராகவே இருந்தது. படித்துத் தேர்ந்த பகுத்தறிவுக்கும் கூட எட்டாத சில அதிசய உண்மைகள் உலகில் இருப்பது அப்போதுதான் அவர் புரிந்து கொண்டார். அந்த மாபெரும் சக்திக்கு முன் மனித அறிவு எம்மாத்திரம்? கலெக்டர் காஸிம் உடனேயே தம் அறிவுக்கு அப்பாற்பட்ட அந்த அரிய சக்திக்கு அடிபணியவும் தீர்மானித்துக் கொண்டார்.

அதன் பலனாக, மறுநாளே அந்தப் பங்களாவைக் குரங்குகளின் வாசத்துக்கே விட்டு விட்டுக் கலெக்டர் குடும்பம் புனாவுக்குச் சென்று விட்டது; அத்துடன் அங்கே ஆற்றை ஒட்டிப் பத்தடி தூரம் தள்ளி - இறந்த குரங்கு புதையுண்ட இடத்தில் கலெக்டர் முகம்மது காஸிம் அவர்களின் செலவிலேயே இச் சிறிய 'ஸித்தி மாருதி மந்தி'ரும் பளிங்குக் கற்களாலேயே உருவாகி விட்டது..!

** ** **

கிழவன் கதையை முடித்தான்.

அதற்குள் எங்கள் சாப்பாடும் முடிந்து விடவே நானும் வைத்தியும் எழுந்து மேலே நடந்தோம். வழியில், "இதை நீ நம்புகிறாயா?" என்று ஒன்றையுமே நம்பாத வைத்தியைக் கேலிக்காகக் கேட்டேன்.

"கோயிலின் அஸ்திவாரக் கல்சாட்சி சொல்கிறதே!" என்றான் வைத்தி பதிலுக்கு. எனக்கு ஒரே வியப்பு! வைத்தியா இப்படிப் பேசுகிறான்?

அதற்குள் வைத்தியே தொடர்ந்து, "இக் கதையில் என்னைத் தொட்டது ஒரே அம்சம் தான். காஸிம் ரகசியமாகக் குரங்கைப் புதைத்த இடமும், தோண்டிபாவின் கனவில் கோயில் கட்டுவதற்குக் குறிப்பிட்ட இடமும் ஒன்றாயிருந்ததுதான்! இதைக் கேவலம் சம்பவ ஒற்றுமை என்று தள்ளிவிட முடியுமா?" என்று வினவினான்.

வைத்தி இப்படிப் பேசுவது ஒரு பெரிய அதிசயம்; அதிலும் அதிசயம், மனித மனம் ஒரு மயிரிழைத் திருப்பத்தில் மாறி விடுவது!

"உலகில் நாம் விடுவிக்கமுடியாத புதிர்கள் எவ்வளவோ உள்ளன. அவற்றில் இதுவும் ஒன்று. அப்படியே உன் மாமனாரின் கனவிலும் ஏன் உண்மை இருக்கக் கூடாது?" என்றேன்.

வைத்தி பதில் கூறாமல் என்னைப் பார்த்து முறுவலித்தான். நாங்கள் மேலே நடந்தோம்.

குகைச் சிற்பங்களைப் பார்த்து விட்டுத் திரும்பிய மறுநாள் மாலையில் நான் ஆபீசிலிருந்து வந்ததும், ஹேமா காப்பி தம்ளரை என் முன்னே வைத்து விட்டு, "ஏகநாதய்யர் வந்து உங்களைப் பிரமாதமாகப் புகழ்ந்து விட்டுப் போகிறார்!" என்றாள்.

"என்னைப் புகழ்ந்தாரா? எதற்கு?"

"எதற்கா? இன்றிரவு மதராஸ் மெயிலில் வைத்தி விசாலத்துடன் ராமேசுவரம் போகிறார்; தங்கத்தில் ஹனுமார் சிலைகூடக் கலபா தேவியில் வாங்கியாகி விட்டது!"

"என்னது? நிசமாகவா?"

"பின்னே பொய்யா சொல்கிறேன்? வைத்தியின் மனமாற்றத்துக்கு நீங்கள்தான் காரணமாம். அதற்காக உங்களுக்கு அவர் கனகாபிஷேகம்கூடச் செய்யத் தயார்" என்று கூறினாள் ஹேமா.

"நான் என்ன செய்து விட்டேன், ஹேமா? எல்லாம் அந்த ஆஞ்சநேயர் செயல்!" என்று அர்த்தம் தொனிக்கக் கூறினேன்.

ஹேமா உண்மை புரியாமல் இலேசாகப் புன்னகை பூத்தாள்.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.


நான்கு மருந்துகள்
அடங்கிய 'அனஸின்' காட்டிலும்
வேறொன்று இவ்வளவு விரைவில்
குணமளிப்பதில்லை
1. க்விநைனின் சல்பேட் 2. காப்பின்
3. பினஸிடின் 4. ஆஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட்
வலிகளுக்கு நிவாரணமளிப்பதில் புகழ் பெற்ற 'அனஸின்' விஞ்ஞான முறையில் சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். இவைகள் நரம்புகளின் கேந்திர ஸ்தானங்களில் கூட்டாக வேலை செய்து, தலைவலி, ஜலதோஷம் ஜுரம், பல்வலி, மற்றும் தசைவலிகளுக்குத் துரிதமாயும் அபாயமின்றியும் நிச்சயமாயும் நிவாரணம் அளிக்கிறது. வலிகளுக்குத் துரித நிவாரணமளிப்பதில் அனஸினுக்கு இணையொன்றில்லை ... அனஸினைப் போல் தீங்கு விளைவிக்காத வில்லை வேறொன்றில்லை. ஆகவே ஞாபகமிருக்கட்டும் 'அனஸின்' ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். அது இருதயத்திற்குத் தீங்கு விளைவிக்கவோ அல்லது வயிற்றுக் கோளாறுகள் உண்டு பண்ணவோ செய்யாது. 'அனஸின்' லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. 'அனஸின்' விலை ஒவ்வொருவர் சக்திக்கும் ஏற்றது. ஒரு பாக்கெட்டின் விலை 12 நயா பைஸா மட்டுமே.
நான்கு
மருந்துகளின்
சேர்க்கையான
'அனஸின்'
வேண்டுமென்றே
கேளுங்கள்
WILL NOT UPSET THE STOMACH
DOES NOT HARM THE HEART
ANACIN
TABLETS
10
नये पैसे
1957
2
नये पैसे
1957
ஒரு பாக்கெட்டின் விலை 12 நயா பைசா

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

